Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily



தெளிவான வானிலை. சிறு மழைக்கான சாத்தியம் உண்டு.

30°C 28°C



**இந்தியா**



பக். 06

அசாமில் தாக்குதல் 15 பொலிஸார் காயம்

**உலகம்**



பக். 07

பேச்சுகள் மீண்டும் ஆரம்பம்

**விளையாட்டு**



பக். 23

ஆட்ட நிர்ணயம்?

# '13' ஐ நடைமுறைப்படுத்துவதற்கு ஒற்றுமையுடன் வாக்களியுங்கள்

## முதன்மை வேட்பாளர் விக்னேஸ்வரன் கோரிக்கை



யாழ்ப்பாணம், ஜூலை 30

'13' ஆவதுதிருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற் குத் தமிழர்கள் ஒற்றுமையாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிக்க வேண்டும் என்று அதன் வடமாகாண சபை முதன்மைவேட்பாளர் முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

'மக்கள் எங்களுக்கு ஆதரவளிப்பதன் ஊடாக '13' ஆவது திருத்தத்தின் பிரகாரம் எங்களால் கடமைகளைச் செய்ய முடியும்' என்றும் அவர் குறிப்பிட்டார்.

வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று திங்கட்கிழமை நண்பகல் 12.10 மணியளவில் யாழ்.மாவட்ட செயலகத்தில் வேட்பு மனுத்தாக்கல் செய்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை.சேனாதிராசா, மாகாண சபை வேட்பாளர்களான தர்மலிங்கம் சித்தார்த்தன், எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் முதலமைச்சர் வேட்பாளர் சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோர் வேட்பு மனுத்தாக்கல் செய்யச் சென்றிருந்தனர்.

வேட்பு மனுத் தாக்கல் மேற்கொண்ட பின்னர் மாவட்ட செயலக முன்றிலில் ஊடகவியலாளர்களிடம் முதலமைச்சர் வேட்பாளர் சி.வி. விக்னேஸ்வரன் கருத்துத் தெரிவிக்கையில்;

மக்கள் தங்கள் ஒற்றுமையை இந்தத் தேர்தலில் எடுத்துக் காட்ட வேண்டும். மக்களின் வாக்குப் பலத்தின் மூலமே எங்களால் '13' ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தக் கூடியதாக இருக்கும்.

நாங்கள் மக்களிடம் கேட்டுக் கொள்வது ஒற்றுமையாக எங்களை ஆதரித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வெற்றிபெறச் செய்ய வேண்டும் என்பதுதான். அதனையே உங்களிடம் கேட்கிறோம்.

'13' ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதில் பல சிக்கல்கள் இருக்கின்றன. அதனை நடைமுறைப் படுத்த முடியாத நிலையில் நாங்கள் அரசுடன் கலந்து பேசி இது தொடர்பில் நடவடிக்கை எடுப்போம். -என்றார். (த-5)

## மாலக்க சில்வா மீது தாக்குதல்

கொழும்பு, ஜூலை 30

அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகன் மாலக்க சில்வா மீது 10 பேர் அடங்கிய இனந்

தொடர்ச்சி: பக்கம் 21

## நீதியான தேர்தல் தொடர்பில் அச்சம் கொள்கிறது கூட்டமைப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 30

வடமாகண சபைத் தேர்தல் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அச்சத்துடனேயே உள்ளது. இந்த அச்சத்தை நாம் வெளிப்படையாகவே தெரிவித்துள்ளோம் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ்.அலுவலகத்தில் நேற்று மாலை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

சர்வதேச அழுத்தத்தினாலேயே இன்று வடமாகாண

தொடர்ச்சி: பக்கம் 21

## வேட்பாளர்களை மிரட்டி ராணுவத்தினர் அடாவடி

### கூட்டமைப்பு கடும் கண்டனம்

யாழ்ப்பாணம், ஜூலை 30

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் வீடுகளுக்கு இராணுவத்தினர் நேற்று நேரடியாகச் சென்று அச்சுறுத்தல் விடுத்துள்ளனர் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இது குறித்து கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ள கூட்டமைப்பு, தேர்தல் ஆணையாளரிடமும், பொலிஸ்மா அதிபரிடமும் முறையிட்டுள்ளதாக கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட வேட்பாளர் சட்டத்தரணி சயந்தனின் சாவகச்சேரி இல்லத்துக்கு நேற்று மூன்று

தொடர்ச்சி: பக்கம் 21

## '13' பலவீனப்படக்கூடாது என்பதில் இந்தியா உறுதி

### அமைச்சர் நாராயணசாமி தெரிவிப்பு

புதுடில்லி,ஜூலை 30

13 ஆவது திருத்தத்தைப் பலவீனப்படுத்தக் கூடாதென்பதில் இந்திய அரசு உறுதியாக உள்ளதென இந்திய இராஜாங்க அமைச்சர் வி.நாராயணசாமி கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

1987இல் கைச்சாத்திடப்பட்ட இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின் ஒரு பகுதியான 13 ஆவது திருத்தம் மாகாணங்களுக்கு அதிகாரங்களை வழங்குவதற்கெனக் கொண்டுவரப்பட்டது. அதனை நீக்கக் கூடாது என்பதில் நாம் உறுதியுடன் உள்ளோம் – என்றார். (த)

## வன்னி வரும் நவிப்பிள்ளை இரணைமடுவில் இறங்குவார்



கொழும்பு,ஜூலை 30

இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ள ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை, புலிகளால் இரணைமடுவில் அமைக்கப்பட்ட ஓடுபாதை வழியாகவே வன்னிக்கான பயணத்தை மேற்கொள்வார் என்று தெரியவருகிறது.

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை எதிர்வரும் ஓகஸ்ட் 25ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரை இலங்கையில் உண்மையைக் கண்டறியும் பயணத்தை மேற்கொள்ளவுள்ளார்.

இவரது பாதுகாப்பு மற்றும் பயண ஏற்பாடுகள் தொடர்பாக ஆராய, ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரின் தலைமைப் பாதுகாப்பு ஆலோசகர் ஆப்ரஹாம் மதாய் தலைமையிலான குழுவொன்று கடந்த வாரம்

தொடர்ச்சி: பக்கம் 21

## 5 மாவட்டங்களில் நேற்று கூட்டமைப்பு வேட்பு மனு

யாழ்ப்பாணம், ஜூலை 30

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் 5 மாவட்டங்களிலும் போட்டியிடுவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று திங்கட்கிழமை வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளது.

5 மாவட்டங்களிலும் போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளர்கள்,

தொடர்ச்சி: பக்கம் 21

## இந்தியத் தூதரகம் நேற்று முற்றுகை

கொழும்பு,ஜூலை 30

இலங்கை உள்விவகாரங்களில் தலையிடுவதை இந்தியா உடன் நிறுத்த வேண்டும்எனவலியுறுத்தியும், வடக்குத் தேர்தல், 13 ஆவது திருத்தம் தொடர்பில் டில்லியின் அழுத்தங்களுக்கு எதிராகவும் சிங்கள தேசிய அமைப்புகளின் ஒன்றியம் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரக வளாகத்தில் நேற்று முற்றுகைப் போராட்டம் நடத்தியது.

இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளை இந்தி

தொடர்ச்சி: பக்கம் 21

## 4 கட்சிகள் மனுத் தாக்கல்

யாழ்ப்பாணம், ஜூலை 30


வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக இதுவரையில் 4 கட்சிகள் வேட்பு மனுத்தாக்கல் செய்துள்ள அதே வேளையில் 8 சுயேட்சைக் குழுக்கள் கட்டுப் பணம் செலுத்தியுள்ளன. வவுனியா மாவட்டத்திலேயே அதிகப்படியான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

வடமாகாண சபைத் தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல்கள் இடம்பெற்று வருகின்றன. வேட்புமனுத்தாக்கல்கள் நாளை மறுதினம் வியாழக்கிழமை நண்பகலுடன் முடிவடைகின்றன.

இந்த நிலையில் நேற்றைய தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கின் ஐந்து மாவட்டங்களிலும் வேட்பு மனுத்தாக்கல் செய்தது. மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் ஸ்ரீலங்கா ஜகத் மகாசபா என்ற கட்சியும் நேற்றைய தினம் வேட்பு மனுத் தாக்கல் செய்துள்ளது. அத்துடன் வவுனியா மாவட்டத்தில் ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி மற்றும்

தொடர்ச்சி: பக்கம் 21

# கூட்டணி உறுப்பினர் மூவர் நேற்று உண்ணாவிரதம்



யாழ்ப்பாணம், ஜூலை 30
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களை மறந்து, மக்களை மாத்திரம் கருத்தில் கொண்டு வெற்றியை உறுதி செய்ய புதிய வேட்பாளர் பட்டியலைத் தயார் செய்ய வேண்டும் எனத் தெரிவித்து, தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் மாநகர சபை உறுப்பினர்கள் மூவர் தந்தை செல்வா சதுக்கத்தில் உண்ணாவிரதப் போராட்டத்தை நேற்று முன்னெடுத்தனர்.

யாழ்.மாநகரசபை முன்னாள் மேயர் செல்லன் கந்தையன், முன்னாள் மாநகர சபை உறுப்பினர்களான தங்கராசா முகுந்தன், செல்லையா விஜயரட்ணம் ஆகியோரே உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தாகிய மற்றும் கலாநிதி நீலன் திருச்செல்வம் கொல்லப்பட்ட நாளாகிய நேற்று தமது உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

தமிழ் அரசியலுக்குள் குடும்ப அரசியலைக் கொண்டு வர வேண்டாம் என்றும், சாதிப் பிரிவுகளைக் கொண்டு வர வேண்டாம் என்றும், ஒவ்வொரு தொகுதிகளுக்கும் வேட்பாளர்கள் நிறுத்தப்பட வேண்டும் என்றும் யாழ். மாவட்டத்தில் முஸ்லிம் வேட்பாளர்கள் நிறுத்தப்பட வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை முன்வைத்தனர்.

முதன்மை வேட்பாளராகப் பொது வேட்பாளர் ஒருவரை பல வாதப் பிரதிவாதங்களுக்கு மத்தியில் நிறுத்தியது போல உங்களின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களை மறந்து எல்லோரும் ஒன்றிணைந்து, அப்பாவி மக்களை மாத்திரம் கருத்தில் கொண்டு வெற்றியை உறுதி செய்யப் புதிய பட்டியலைத் தயார் செய்ய வேண்டும் என்று அவர்கள் கேட்டுக் கொண்டனர்.

இதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்புமனுத் தாக்கல் நேற்றே நிறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5-86)

# தேர்தலில் காதலில்லை என்றவர் மாகாண வேட்பாளரானார் நேற்று

யாழ்ப்பாணம், ஜூலை 30
தேர்தலில் போட்டியிடும் எண்ணம் இல்லை எனவும், தேர்தலில் காதல் இல்லை என்றும் தெரிவித்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணிச் செயலாளர் சு.சிவகரன் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு நேற்று திங்கட்கிழமை மனுத்தாக்கல் செய்துள்ளார்.

கடந்த மே மாதம் 22 ஆம் திகதி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்.இளைஞர் அணி கலைப்பு என்ற தலைப்பில் வெளியான செய்தி தொடர்பில் மே மாதம் 24 ஆம் திகதி உதயனுடன் தொடர்பு கொண்டு பேசிய சிவகரன், தேர்தலில் போட்டியிடமாட்டேன் என்று இடித்துரைத்திருந்தார். அவரே நேற்று மன்னார் மாவட்டத்தில் வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளார்.

'தேர்தலில் எனக்கு காதல் இல்லை. கறுப்புக் கண்ணாடி வாகனங்களில் சுற்றித் திரிய விரும்பவில்லை. தேர்தலில் நான் போட்டியிடப் போவதில்லை அந்த எண்ணம் இருந்தால் நான் மாவையுடைய (நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா), சம்பந்தனுடைய வாலைப் பிடித்துக் கொண்டு திரிய வேண்டும். நான் தேர்தலில் போட்டியிட மாட்டேன்' என்று



அவர் இதன்போது கூறியிருந்தார்.

இந்த நிலையில் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்வுள்ள வேட்பாளராக சு.சிவகரன் கையெழுத்திட்டுள்ளார். (த-5)

## பிரதேச சபை உறுப்பினருக்கு விளக்கமறியல்

கொழும்பு,ஜூலை 30
தொழில் பெற்றுத் தருவதாகக் கூறி நிதி மோசடி செய்த குற்றச்சாட்டு தொடர்பில் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட கலிகமுவ பிரதேசசபை உறுப்பினர் நிசாந்த ஹேரத்துக்கான விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இவரை அடுத்த மாதம் 5 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கேகாலை நீதிவான் நீதிமன்று நேற்று உத்தரவிட்டுள்ளது.

இவர் மீது பணமோசடி உள்ளிட்ட 6 முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. 7 லட்சம்ரூபாநிதிமோசடிகுறித்து முறைப்பாடு கிடைக்கப் பெற்றதைத் தொடர்ந்து நிஸாந்த ஹேரத் கடந்த 15 ஆம் திகதி கேகாலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். (த)

# ஆடுகள் திருடி வெட்டியவர் ஓட்டோவுடன் கைதானார்

யாழ்ப்பாணம், ஜூலை 30
இரண்டு ஆடுகளைத் திருடி வெட்டி இறைச்சிக்கு விற்ற நபர் ஓட்டோவில் பணத்துடன் வந்தபோது பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

அவர் செலுத்தும்படியாக நஷ்டஈடும் அபராதமும் விதித்ததோடு வாகன உரிமைக் கோரிக்கைக்காக ஓட்டோவை நீதிமன்றில் தடுத்து வைத்திருக்கவும் நீதிமன்று உத்தரவிட்டது. ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஆர்.எஸ். மகேந்திரராஜா முன்னிலையில் நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது.

கரம்பொன் சந்தியை அண்மித்து 30 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு ஆடுகளைத் திருடி அவற்றை கரம்பொன் பொன்னாச்சி கடைச்சந்தியை அண்மித்து வெட்டி பங்கு போட்டு இறைச்சிக்கடைகளுக்கு விற்றுள்ளார் வேலணை நபர்.

இச்சம்பம் கடந்த வாரம் இடம்பெற்றது.

ஆடுகள் காணாமற்போனது



தொடர்பில் அதன் உரிமையாளர் தேடியபோதே வேலணை நபரால் ஆடுகள் திருடப்பட்டு இறைச்சிக்கு வெட்டி விற்கப்பட்டமை தெரியவந்தது. அதனடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது அவர் தன்மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து, ஆட்டு உரிமையாளருக்கு நஷ்டஈடாக 30 ஆயிரம் ரூபா செலுத்த வேண்டும் என்றும் நீதிமன்ற அபராதமாக ஆயிரத்து 500 ரூபா செலுத்த வேண்டும் என்றும் விதிக்கப்பட்டது. அவர் பயணித்த ஓட்டோ உரிமைக் கோரிக்கைக்காக அடுத்த மாதம் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (த-4)

# தேர்தல்கள் முடிந்த கையோடு பொருள்களின் விலை எகிறும்

## ஐ.தே.க.எச்சரிக்கை

கொழும்பு,ஜூலை 30
மாகாண சபைத் தேர்தல் காரணமாக பொருள்களின் விலையேற்றம் என்ற மாடு தூணில் கட்டப்பட்டிருப்பதாகவும் தேர்தல் முடிவடைந்த பின்னர், அந்த மாடு அவிழ்த்து விடப்படும் என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக்க தெரிவித்தார். கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைக் கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஏற்கனவே சமையல் எரிவாயு, பால் மா போன்றவற்றின் விலைகளை அதிகரிக்கக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. தேர்தல் காரணமாக அவற்றின் விலைகளை அதிகரிக்க அரசு, அனுமதி வழங்கவில்லை. தேர்தல் முடிந்தவுடன் அதற்கான அனுமதி வழங்கப்படும்.

ஓரிருவர் அரசின் பக்கம் தாவிய பின்னர், அதனைக் கண்காட்சியாக வைத்து அரசு தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டு வருகிறது-என்றார்.

அதேவேளை இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய ஐக்கிய தேசியக் கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர் ராஜகருண, அரச நிறுவனங்களில் 13,200 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாகக் கோப் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பணிப்பாளர்கள் சபை உறுப்பினர்கள் அரசியல் ரீதியாக நியமிக்கப்பட்டுள்ளதால், இலாபத்தில் இயங்கி வந்த அந்த நிறுவனங்கள் நட்டமடைந்துள்ளன. நட்டத்தில் இயங்கும் இந்த நிறுவனங்களுக்கு மூன்று அரச வங்கிகளே கடன்களை வழங்கியுள்ளன. இதனால் அந்த வங்கிகளும் கடும் நிதி நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளன எனத் தெரிவித்தார். (த)

# எழுவைதீவு துறைமுகப் பாலம் மிக மிக மோசமான நிலையில்

## பெரும் சிரமத்தில் பயணிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 30
எழுவைதீவு துறைமுகப் பாலம் புனரமைக்கும் நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படுவதற்கான சாத்தியம் இல்லை என அந்தப் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

குறிப்பிட்ட இறங்குதுறை மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டு நீண்ட காலமாகியும் சம்பந்தப்பட்டவர்களால் அதனைத் திருத்தியமைக்க எந்த முயற்சிகளும் முன்னெடுக்கப்படவில்லை.

மக்கள் படகுகளில் ஏறி இறங்க முடியாதவாறும் படகுகளைச் சீராக துறைமுகப் பாலத்தில் அணைக்க முடியாதவாறும் ஒரு மரணப் பொறியாக இந்தப் பாலம் உடைந்து காணப்படுகின்றது. பாலத்தை புனரமைக்குமாறு பல தடவைகள் உரியவர்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்த போதும் எவ்விதபயனும் கிடைக்கவில்லை என விசனம் தெரிவிக்கப் படுகிறது. (த-7)



வாடகைக்கு சொகுசுக் கார்களைப் பெற்று ஆவண மோசடி செய்து அவற்றை விற்பனை செய்தமைக்கு எதிராக அவற்றின் உரிமையாளர்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தமைக்கு அமைய 13 கார்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டன. அவற்றில் 7 கார்களை உரியவரிடம் ஒப்படைப்பதற்காக நேற்று யாழ்.நீதிமன்றம் முன்பாகக் கொண்டுவரப்பட்டன. (த-4-20)

# யாழ்.நகருக்குள் நுழையும், வெளியேறும் வாகனங்களின் கணக்கெடுப்பு இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 30
யாழ்.பல்கலைக்கழகத் திட்டமிடல் பிரிவு மாணவர்களால் யாழ்.நகரப் பகுதிக்குள் உள்நுழையும், வெளிச் செல்லும் வாகனங்கள் மற்றும் பயணிகள் தொடர்பான கணக்கெடுப்பு இன்று செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப்படவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகப் புவியியற்துறைத் தலைவர், விரிவுரையாளர்கள் ஆகியோரின் ஏற்பாட்டில் திட்டமிடற் பிரிவில் கல்வி பயிலும் சுமார் 400 மாணவர்கள் இந்தக் கணக்கெடுப்புப் பணியில் ஈடுபடவுள்ளனர்.

அதிகாலை 5 மணி முதல் மாலை 6 மணி வரை யாழ். நகருக்கு அனைத்துப் பகுதிகளிலிருந்தும் உள்நுழையும் மற்றும் நகரிலிருந்து வெளியேறும் லொறி, ரக்வண்டி, தனியார் பஸ்கள், சைக்கிள்கள், அரச பஸ்கள் உட்பட அனைத்து வகை வாகனங்களுடன் நடந்து பயணங்களை மேற்கொள்பவர்களும் இந்தக் கணக்கெடுப்பில் உள்வாங்கப்படவுள்ளனர்.

யாழ்.நகருக்குரிய முக்கிய சந்திகளில் இந்தக் கணக்கெடுப்புக்காக மாணவர்கள் இரு குழுக்களாகப் பிரிந்து நின்று ஒவ்வொரு மணித்தியாலத்திலும் உள் செல்லும் மற்றும் வெளியேறும் வாகனங்கள் மற்றும் பயணிகள் தொடர்பான கணக்கெடுப்பை மேற்கொள்ளவுள்ளனர்.

அந்த அடிப்படையில் ஏ-9 வீதியில் செம்மணிச் சந்தியிலும், பருத்தித்துறை வீதியில் கல்வியங்காட்டுச் சந்தியிலும், பலாலி வீதியில் பரமேஸ்வராச் சந்தியிலும், கோவில் வீதியில் ஆடிய பாதம் சந்தியிலும், பிறவுண் வீதியில் யாழ்.தொழில்நுட்பக் கல்லூரிக்கு முன்பாகவும், கே.கே.எஸ்.வீதியில் பூநாறி மரத்தடியிலும், மானிப்பாய் வீதியில் கோம்பையன் மயானத்துக்கு முன்பாகவும், அராலி வீதியில் காக்கைதீவுச் சந்தியிலும், தீவுக்கான வீதியில் பண்ணைச் சந்தியிலும் மாணவர்கள் கணக்கெடுப்பில் ஈடுபடுவர்.

யாழ்.நகருக்கான திட்டமிடற் பணிக்கு வேண்டிய தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காகவும் அத்துறையில் மாணவர்களுக்கு வேண்டிய பயிற்சியை வழங்குவதற்காகவும் எதிர்காலத்தில் போக்குவரத்துத்துறையை அபிவிருத்தி செய்யும் முகமாகவும் மேற்கொள்ளவுள்ள இப்பணிக்கு பொது மக்கள் மற்றும் வாகன சாரதிகளை போதிய ஒத்துழைப்பு வழங்குமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (த-400)

# வடமாகாண சபை தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கல் நேற்று



யாழ். செயலகத்துக்கு வருகை தந்த தலைமை வேட்பாளர் சி.வி.விக்னேஸ்வரனுடன் சக வேட்பாளர்கள்



வவுனியா செயலக முன்றிலில் வேட்பாளர்கள்



கிளிநொச்சி செயலக முன்றிலில் ஆனந்தசங்கரி, குருகுலராஜா, பசுபதி அரியரத்தினம்



மன்னாரில் வேட்பு மனுத் தாக்கலின் பின்னர் வேட்பாளர்கள் குழாம்

## வடக்கு மாகாண தேர்தலுக்கு 830 வாக்களிப்பு நிலையங்கள்

### 7 லட்சத்து 14 ஆயிரம் பேர் வாக்களிக்கத் தகுதி

யாழ்ப்பாணம், ஜூலை 30

எதிர்வரும் செப்ரெம்பரில் நடைபெறவுள்ள வடமாகாண சபைத் தேர்தலில் வாக்களிப்பதற்கு 7 லட்சத்து 14 ஆயிரத்து 480 பேர் தகுதி பெற்றுள்ளனர். அவர்கள் வாக்களிக்க வசதியாக 830 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

வடமாகாண சபைக்கான வேட்பு மனுத்தாக்கல்கள் நாளை மறுதினம் வியாழக்கிழமை நண்பகல் 12 மணியுடன் நிறைவடைகின்றன. வடமாகாண சபைக்கான தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் 21 ஆம் திகதி இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கான ஆயத்தப் பணிகளில் தேர்தல்கள் திணைக்களம் ஈடுபட்டுள்ளது. இதன் பிரகாரம் 2012 ஆம் ஆண்டுக்குரிய வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் 4 லட்சத்து 26 ஆயிரத்து 703 பேர் வாக்களிப்பதற்காக 526 வாக்களிப்பு நிலையங்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 68 ஆயிரத்து 589 பேர் வாக்களிப்பதற்காக 95 வாக்களிப்பு நிலையங்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 52 ஆயிரத்து 401 பேர் வாக்களிப்பதற்காக 50 வாக்களிப்பு நிலையங்களும், மன்னார் மாவட்டத்தில் 72 ஆயிரத்து 420 பேர் வாக்களிப்பதற்காக 70 வாக்களிப்பு நிலையங்களும், வவுனியா மாவட்டத்தில் 94 ஆயிரத்து 367 பேர் வாக்களிப்பதற்காக 89 வாக்களிப்பு நிலையங்களும் அமைக்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-5)

# உரிய தீர்வு கிடைக்காவிட்டால் உண்ணாவிரதப் போராட்டம்

### தமிழ் அரசியல் கைதிகள் தெரிவிப்பு

மன்னார், ஜூலை 30

எமது விடுதலை தொடர்பாக நீதிய மைச்சு அல்லது சட்டமா அதிபர் திணைக்களம் உரிய தீர்வொன்றை எடுக்காது விட்டால் எதிர்வரும் 11 ஆம் திகதி தொடக்கம் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தத் தீர்மானித்துள்ளதாக தமிழ் அரசியல் கைதிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

கடந்த பல வருடங்களாக எந்தவிதமான முடிவுகளும் கிடைக்காது சிறையில் வாடுகின்றோம்.

எம்மை விடுதலை செய்வதாகப் பல முறை வாக்குறுதிகள் வழங்கப்பட்டும், இதுவரையில் அவை நிறைவேற்றப்படவில்லை.

போர் முடிவடைந்து நான்கு வருடங்கள் கடந்த நிலையிலும், நீண்ட காலம் சிறையில் உள்ளவர்கள் தொடர்பாக எந்த விதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை.

நீதிமன்றங்களில் வழக்குத் தொடுக்கப்பட்ட சிலர் கூட பல ஆண்டுகளாக விசாரணைகள் இன்றி சிறைகளில் முடங்கியுள்ளனர்.

நீதிமன்ற நடவடிக்கைகள் ஊடான விடுதலை என்பது ஒருபோதும் சாத்தியப்படாத விடயமாகவே காணப்படுகின்றது.

எனவே, வழக்குத் தாக்கல் செய்யப்பட்டவர்கள், மற்றும் தாக்கல் செய்யப்படாதவர்கள் அனைவருக்கும் ஏற்றதான ஒரு தீர்மானத்தை எடுத்து, எமது பிரச்சினைகளுக்கு நிரந்தரமான தீர்வொன்றை சம்பந்தப்பட்டவர்கள் பெற்றுத் தர வேண்டும்.

எம்மை உடனடியாக விடுதலை செய்ய முடியாவிட்டாலும், புனர்வாழ்வளித்தாவது விடுதலை செய்யுங்கள் என்று மிகவும் விநயமாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

எமது குடும்பங்கள் பல்வேறு துன்பங்களுடன் வாழ்ந்து வருகின்றன.

நாங்களும் வாழ ஆசைப்படுகின்றோம். அதற்கான சந்தர்ப்பத்தை எமக்குப் பெற்றுத் தாருங்கள் என வேண்டுகின்றோம்.

உரியவர்கள் தீர்மானம் ஒன்றை எடுக்காது விட்டால், எதிர்வரும் 11ஆம் திகதி தொடக்கம் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை ஆரம்பிக்க எண்ணியுள்ளோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம் எனத் தெரிவித்தனர். (க-12)





கனடாவுக்கான சுற்றுப்பணத்தை மேற்கொண்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஈ.சரவணபவன் மற்றும் சி.சிறிதரன் ஆகியோர் வடக்கு மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கனடா கிளையினரைச் சந்தித்து விளக்கமளிப்பதைக் காணலாம். (ஒ)

உதயன் 30/07/2013

## ஊர்காவற்றுறை சங்க கூட்டுறவாளர் தின விழா





சர்வதேச கூட்டுறவாளர் தினத்தையொட்டி ஊர்காவற்றுறை பல.நோ.கூ.சங்கத்தின் கூட்டுறவாளர் தின விழா நேற்று திங்கட்கிழமை ஊர்காவற்றுறை பல.நோ.கூ. சங்கத்தின் தலைவர் எஸ். சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக ஊர்காவற்றுறை பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாதன், யாழ். கூட்டுறவு உதவி ஆணையாளர் எஸ். அருந்தவநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் கருத்துக்களம் 2012 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிப்பு, பல.நோ.கூ.சங்கத்தின் 25 வருடங்கள் சேவையாற்றியவர்கள் சிறந்த பணியாளர்களுக்கான கௌரவங்கள் இடம்பெற்றன.

ஊர்காவற்றுறை பிரதேச செயலர், கூட்டுறவு உதவி ஆணையாளர் உட்பட பலர் உரையாற்றினார்கள். (ஓ-7)

# ஓட்டோக்களுக்கு மீற்றர்

## இவ்வருட இறுதிக்குள் பணிகள் நிறைவு

யாழ்ப்பாணம், ஜூலை 30

இந்த வருட இறுதிக்குள் யாழ்.மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட சகல ஓட்டோக்களுக்கும் மீற்றர் பொருத்தும் பணிகள் முடிவடையும் என்று யாழ். மாவட்ட ஓட்டோ சங்கத் தலைவர் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட ஓட்டோ சங்கத்தில் தற்போது 648 ஓட்டோக்கள் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் இதுவரை



250 ஓட்டோக்களுக்கு மட்டுமே மீற்றர் பொருத்தப்பட்டுள்ளன.

மீற்றர் பொருத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் ஒரு நாளைக்கு குறைந்தது 3 ஓட்டோக்களுக்கு மட்டுமே மீற்றர் பொருத்தும் பணியை மேற்கொள்கின்றன.

தற்போது 2 நிறுவனங்கள் இதற்கான பணிகளை மேற்கொண்டு வருகின்றன. எனினும் நகரப் பகுதிக்குள் சேவையில் ஈடுபடுகின்ற ஓட்டோக்களுக்கு மீற்றர் பொருத்தி முடிக்கப்பட்டுள்ளன.

ஏனைய நகர்ப்புறம் அல்லாத பிரதேசங்களுக்கு பிரதேச ரீதியாக ஓட்டோக்களுக்கு மீற்றர் பொருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. படிப்படியாக அனைத்து ஓட்டோக்களுக்கும் இந்த வருட இறுதிக்குள் மீற்றர் பொருத்தி முடிக்கப்படும்.

அதற்கான நடவடிக்கைகளை ஓட்டோ சங்கம் மேற்கொண்டு வருகிறது எனவும் தெரிவித்தார் சங்கத் தலைவர். (வ-14)

### சேவையில் ஈடுபடும் பதிவு செய்யப்பட்ட

## 250 ஓட்டோக்களுக்கு மீற்றர்

யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ்.மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட 250 ஓட்டோக்களுக்கு மீற்றர் பொருத்தப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட ஓட்டோச் சங்கத் தலைவர் எஸ்.ராஜ்குமார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.மாவட்டத்தில் சேவையில் ஈடுபடுகின்ற ஓட்டோக்களுக்கு சங்கத்தின் புதிய நடைமுறைகளுக்கு அமைவாக மீற்றர் பொருத்தும் நடவடிக்கைகள் கடந்த மே மாதம் தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இதற்கமைவாக "பேல்ட் ரெக்னிக்கல்" மீற்றர் பொருத்தும் நிறுவனத்தின் ஊடாக சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட ஓட்டோக்களுக்கு மீற்றர் பொருத்துதல் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன் அடிப்படையில் கடந்த மாதம் 80 ஓட்டோக்களுக்கு மீற்றர் பொருத்தப்பட்டுள்ள நிலையில் இந்த மாதம் மிகத்துரிதமாக இதுவரை 250 ஓட்டோக்களுக்கு மீற்றர் பொருத்தப்பட்டுள்ளன.

ஓட்டோக்களில் பயணிக்கும் பயணிகளிடம் வேறுபட்ட கட்டணம் அறவிடுவதால் முரண்பாடுகள் நிலவுகின்றன. இதனைத் தவிர்ப்பதற்காக சங்கத்தால் இந்த நடைமுறை கொண்டுவரப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் யாழ். மாவட்டத்தில் பொதுமக்களுக்கான சேவையில் ஈடுபடும் ஓட்டோக்களில் இதுவரைகாலமும் மீற்றர் பொருத்தப்பட்டு அதன் அடிப்படையில் கட்டணம் அறவிடும் நடைமுறை இருந்ததில்லை. எனினும் இந்த புதிய நடைமுறை ஊடாக பொதுமக்கள் தாம் செல்ல வேண்டிய இடங்களுக்குக் கூடுதலான கட்டணங்களை செலுத்த வேண்டிய தேவையில்லை. மீற்றருக்கு ஏப்ப கட்டணத்தை மட்டுமே மீற்றர் பொருத்தப்பட்ட ஓட்டோக்களின் சாரதிகள் அறவிட முடியும்.

இதன் காரணமாக பயணிகளுக்கும் ஓட்டோச் சாரதிகளுக்கும் இடையில் முரண்பாடு ஏற்படப் போவதில்லை. மீற்றர் பொருத்தப்பட்டுள்ள முறைமை நன்மையளித்துள்ளது.

தற்போது மீற்றர் பொருத்தப்பட்ட ஓட்டோக்களுக்கு சங்கத்தால் ஏகமனதாகத் தீர்மானித்த கட்டண அறவீடுகளின்படி முதலாவது கிலோ மீற்றருக்கு 80 ரூபாவும் ஏனைய அடுத்த கிலோ மீற்றருக்கு 50 ரூபாவும் கட்டணங்களாக அறவிடுமாறு ஓட்டோச் சாரதிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையிலேயே தற்போது மீற்றர் பொருத்தப்பட்ட ஓட்டோக்களில் கட்டணம் அறவிடப்படுகின்றது. இதனால் ஓட்டோச் சாரதிகளுக்கும் பொதுமக்களுக்கும் வாக்குவாதம் இடம்பெறுவது தவிர்க்கப்பட்டுள்ளது-என்றார். (வ-14)

## வரணியிலும் மின்வெட்டு

வரணி, ஜூலை 30

வரணிப் பிரதேசத்தில் தொடர்ந்து இரண்டு வாரங்களாக மின்வெட்டு நடைமுறையில் உள்ளதால் மின் பாவனையாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

மின்வெட்டு ஆரம்பத்தில் ஒரு கிழமை மட்டும் என அறிவிக்கப்பட்ட போதும் தொடர்ந்து இரண்டாவது வாரமும் மின்வெட்டு அமுல் நடத்தப்படுகின்றது.

காலை 8.30 தொடக்கம் மாலை 5.30 மணி வரை மின்தடை நடைமுறையில் இருக்கும் என அறிவிக்கப்பட்ட போதும் சில தினங்களில் காலை 4 மணிக்கே தொடங்கும் மின்தடை இரவு 8.30 மணி வரையும் நீடிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக மின் சாதனங்களைப் பயன்படுத்துவோரின் நாளாந்தப் பாவனைகள் பெரியளவில் பாதிக்கப்பட்டுள்ளன. (வ-122)

## தென்மராட்சிப் பகுதியில் 180 பேருக்கு அபராதம்

### குற்றச் செயல்களில் ஈடுபட்டதால்

யாழ்ப்பாணம், ஜூலை 30

தென்மராட்சிப் பிரதேசத்தில் இந்த வருடம் இதுவரை குற்றச் செயல்களில் ஈடுபட்ட 180 பேர் 3 லட்சத்து 75 ஆயிரம் ரூபா தண்டப் பணம் செலுத்தியுள்ளனர் என்று சாவகச்சேரி மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மதுவரித் திணைக்களத்தின் சட்டக் கோவைகளுக்கு அப்பால் சட்ட விரோதமாக அரச மதுபானத்தை வீடுகளில் வைத்து விற்பனை செய்தவர்களும், வீடுகளில் வைத்து சட்டவிரோதமாக கள் விற்பனை செய்தவர்களும், கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர்களும், 21 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு புகைத்தல் பொருள் விற்பனை செய்தவர்களும் மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்களால் இனங் காணப்பட்டுள்ளனர்.

இந்த வருடம் இதுவரை 180 பேர் இனங்காணப்பட்டு அவர்களுக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட போது நீதிமன்றால் அவர்களுக்கு 3 லட்சத்து 75 ஆயிரம் ரூபா தண்டப் பணம் அறவிடப்பட்டுள்ளது.

மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் சட்ட விரோதமான குற்றச் செயல்களில் ஈடுபட்ட 180 பேரும் கையும் களவுமாக மாட்டிக் கொண்டனர்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் மதுவரித் திணைக்களத்துக்கு உட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கைகளின் போது இந்தச் குற்றச் செயல்கள் இனங்காணப்பட்டன.

இடம்பெற்ற குற்றச் செயல்களில் அதிகளவு அரச சாராயத்தை வீடுகளில் வைத்து விற்பனை செய்தவர்களும், 21 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்தவர்களும் அடங்குவர்.

இதன் அடிப்படையில் தொடர்ச்சியாக கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு குற்றச்செயல்கள் தடுக்கப்படுகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-14)

## ஆயுதப் போராட்ட வரலாறை கொச்சைப்படுத்த நாம் அனுமதியோம்

### மன்னாரில் பாஸ்கரா முழக்கம்

ஆயுதப் போராட்ட வரலாற்றைக் கொச்சைப்படுத்துவதை நாம் ஒரு போதும் அனுமதிக்கமாட்டோம் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் ஊடகச் செயலாளரும் கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான சி.பாஸ்கரா தெரிவித்தார்.

1983 ஆம் ஆண்டு ஜூலை கலவரத்தில் சிறைச்சாலையில் கொல்லப்பட்ட குட்டிமணி, ஜெகன், தங்கத்துரை நினைவுதினம் சனிக்கிழமை மன்னாரில் இடம்பெற்றது. இதன்போது உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது;

இன்றைய நாள் தமிழர் மனதில் என்றும் மறக்க முடியாத ஒரு கறுப்புநாள். உலகில் என்றும் நடைபெற்றிருக்காத சிறைச் சித்திரைவதைக் கொலைகளும் இன அழிப்பு, சொத்தழிப்புகளும் தமிழர் மீது நடத்தி முடிக்கப்பட்ட மிக கொடூரமான ஒரு கரிநாள்.

ஜூலை மாதம் பிறந்த நாளைக் கொண்டாடுவோரும், ஆண்டு விழாக்களை கொண்டாடுவோரும் கூட அந்த நாள்களை சிலநேரம் மறந்துவிடலாம். ஆனால் உலகில் வாழும் தன்மானத் தமிழர்கள் எவரும் ஜூலை மாதக் கலவரத்தையும் சிறைப் படுகொலைகளையும் என்றும் மறக்க மாட்டார்கள். அவ்வாறு மறப்பவர்களாய் இருந்தால் அவர்கள் தமிழராக இருக்க மாட்டார்கள்.

இந்த வரிசையில் வரலாறு படைத்த தோழர்கள் குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன் மற்றும் கொல்லப்பட்ட அனைத்து தோழர்களும் இன்று தமிழர் வரலாற்று சின்னங்களாக திகழ்கின்றார்கள். அவர்களுக்கு எங்கள் வீர வணக்கங்கள்.

தமிழினத்தை பொறுத்தவரை இன்றைய இக்கட்டான காலகட்டத்தில் இவ்வாறான நினைவுகூரல் நிகழ்வு மிகவும் முக்கியமான ஒரு நிகழ்வாகும். தமிழர் போராட்ட வரலாற்றில் தமிழர் விடிவுக்காக மண்ணுடன் மண்ணாகிய எமது போராட்ட வீரர்களை என்றும் மறக்க முடியாது. முதல் முப்பது வருட அகிம்சைப் போராட்டமும் அடுத்த முப்பது வருட ஆயுதப் போராட்டமும் பின் தற்போது மீண்டும் ஒரு புதுவடிவில் அறவழி ஜனநாயக போராட்டம் என வரலாறு நடைபோட்டுக் கொண்டிருக்கின்றது.

எமது கட்சி ஆயுதப்போராட்டத்தை அங்கீகரிக்கவில்லை. ஆனால் ஆயுதம் தூக்க தள்ளப்பட்ட வரலாற்றையும் அதில் வரலாறு படைத்த மாவீரர்களின் தியாகங்களையும் நாம் வணங்குகிறோம். இதைப் பலமுறை தெளிவாகவும் விவரமாகவும் எமது தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். சில வரலாற்றுத்தவறுகள் அறவழி போராட்டத்திலும் மறவழி போராட்டத்திலும் நடைபெற்றதை ஏற்றுக் கொள்ளத் தான் வேண்டும். இது உலக போராட்ட வரலாற்றில் எங்கும் இடம்பெற்றுள்ளது. ஆனால் போராட்டம் கொச்சைப்படுத்த முடியாது. எமக்காக உயிர் நீத்தவர்களை நினைத்துப் பார்க்க வேண்டும், நினைவு கூர வேண்டும்.

ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள்கூட ஆயுதங்களை கீழே வைத்துவிட்டு நோபல் பரிசு பெற்ற தென்னாபிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலா வழியில் அறவழி அரசியலுக்கு பிரவேசித்து அரசியல் நடத்துவதை நாம் புறக்கணித்துவிட முடியாது, அவர்களுக்கு உரித்தான உரிய சம அங்கீகாரங்கள் கொடுக்கப்பட வேண்டும். (வ)

## சாவகச்சேரிப் பிரதேச சபைக்கு வந்த பொதுநலவாய நாடுகளின் செயலாளர்

### பிரதேச சபைத் தலைவருடன் கலந்துரையாடினார்



வரணி, ஜூலை 30


பொதுநலவாய நாடுகளின் செயலாளர் நாயகம் கார்ஸ் றைற் சனிக்கிழமை சாவகச்சேரி பிரதேச சபைக்கு பயணம் மேற்கொண்டு பிரதேச சபைத் தலைவர் சிற்றம்பலம் துரைராஜாவுடன் கலந்துரையாடல் ஒன்றில் ஈடுபட்டார். அவருடன் குறித்த அமைப்பின் தொடர்பாடல் அதிகாரி ஹேமந்தி குணசேகரவும் வருகை தந்திருந்தார்.

கலந்துரையாடலின் போது உள்ளூராட்சி மன்றங்களின் கட்டமைப்பை வலுவூட்டும் நடவடிக்கைகள் தொடர்பில் உரையாடப்பட்டது. உள்ளூராட்சி மன்றங்களில் பொருளாதார நடவடிக்கைகள், நிதி, நிர்வாகம், பொது மக்களின் பங்களிப்பு பற்றியும் கலந்துரையாடல் இடம்பெற்றது.

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் தொடர்பான பயிற்சிகள், பிரதேச மக்களின் வாழ்வாதார செயற்பாடுகள் மற்றும் நடைபெறவுள்ள வடமாகாண சபைத் தேர்தலின் போது அதன் சுயாதீன செயற்பாடுகளின் நேர்மைத்துவம் பற்றியும் கேட்டறிந்து கொண்டார். இதற்கு பதிலளிந்த பிரதேச சபைத் தலைவர் ஐரோப்பிய நாடுகளின் கண்காணிப்பு மத்தியஸ்தம் தேவை என தெரிவித்தார்.

எமது பிரதேச சபை பெரிய அளவான நிலப்பரப்பையும் கூடுதலான சனத்தொகையையும் கொண்டது. ஆயினும் சகல பிரதேச சபைகளுக்கும் ஒரே அளவான தொகை நிதியே ஒதுக்கப்படுகின்றது. இதில் மாற்றம் தேவை என்று சபைத் தலைவர் சுட்டிக்காட்டினார். மக்களின் வாழ்வாதாரங்கள், அவர்களின் உற்பத்திப் பொருள்கள், அதற்கமைய சந்தை வாய்ப்புப் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.(வ-122)

**சகல பிரதேச சபைகளுக்கும் ஒரே அளவான தொகை நிதியே ஒதுக்கப்படுகின்றது. இதில் மாற்றம் தேவை என்று சபைத் தலைவர் சுட்டிக் காட்டினார்.**



தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டுப் பெருவிழாவில் 'தமிழ்த்தூது' நூலின் திருத்திய 6 ஆம் பதிப்பு நூல் திருமறைக் கலாமன்றத்தால் வெளியிட்டு வைக்கப்பட்டது. முதற் பிரதியை திருமறைக் கலாமன்ற இயக்குநர் மரியசேவியர் அடிகள் வழங்க நல்லை ஆதீனமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் பெற்றுக் கொள்கிறார். (வ-135)

# பாடசாலைகளில் 'வியாபாரம்' செய்வதில் காப்புறுதி நிறுவனங்கள் போட்டாபோட்டி

### ஏமாற்றப்படும் மாணவர்கள், பெற்றோர்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 30

முன்பள்ளி மாணவர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களை காப்புறுதியில் இணைக்கும் நடவடிக்கையில் பிரபல காப்புறுதி நிறுவனங்கள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றன. இதன் காரணமாக பெற்றோர்கள் போதிய விளக்கம் இல்லாமல் கட்டாயப்படுத்தலின் பேரில் தமது பிள்ளைகளை காப்புறுதியாளர்களாக இணைத்து வருகிறார்கள்.

காப்புறுதி நிறுவனங்களுக்கு இடையில் ஏற்பட்டுள்ள போட்டித் தன்மை காரணமாக சில குறிப்பிட்ட பிரபல காப்புறுதி நிறுவனங்கள் தமது 'வியாபார' நடவடிக்கைகளை பாடசாலை மாணவர்கள் மீது திணித்து வருகிறார்கள்.

யாழ்.மாவட்டத்தில் பின்தங்கிய கிராமங்களில் உள்ள பாடசாலைகள், முன்பள்ளிகள் போன்றவற்றை இலக்கு வைத்து காப்புறுதி ஆலோசகர்கள் ஊடாக மாணவர்களைக் காப்புறுதியில் இணைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பாடசாலை மாணவர்கள், முன்பள்ளி மாணவர்கள் ஆகியோரை நேரடியாகச் சந்தித்து அவர்களுக்கு சில போட்டிகள் காப்புறுதி நிறுவனங்களால் நடத்தப்படுகின்றன.

எனினும் போட்டிகளில் மாணவர்களது திறமைகளுக்கு இடம்கொடுக்காமல் அனைவருக்கும் பரிசு என மாணவர்களுக்கு ஆசை காட்டி உங்களுக்குப் பரிசில்கள் உண்டு என பரிசு பெறுவதற்கென கடிதங்கள் ஊடாக பெற்றோர்களும் பாடசாலைகளுக்கு அழைக்கப்படுகிறார்கள். பிள்ளைகளுக்குப் பரிசு கிடைத்துள்ளது என நம்பி பாடசாலைக்குச் செல்லும் பெற்றோர்கள் அங்கு சென்ற பின்னரே தமது பிள்ளைகளைக் காப்புறுதியில் இணைத்துக் கொள்வதற்காகவே அங்கு தாம் வரவழைக்கப்பட்டமையை உணர்ந்து கொள்கின்றனர்.

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் உள்ள பின்தங்கிய கிராமத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் இவ்வாறானதொரு சம்பவம் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

காப்புறுதியில் இணைந்து கொண்ட மாணவர்களுக்கு மட்டுமே காப்புறுதி நிறுவனத்தால் பரிசில்கள் வழங்கப்பட்டன. எனினும் பெற்றோர்கள் காப்புறுதி தொடர்பான போதிய விளக்கம் இல்லாமல் தமது பிள்ளைகளுக்கான சேமிப்பாக இருக்கும் என நம்பி தமது பிள்ளைகளை காப்புறுதியில் இணைத்துள்ளார்கள்.

காப்புறுதி நிறுவனங்களின் இத்தகைய நடவடிக்கைகளுக்கு பாடசாலை அதிபர்களும் உடந்தையாக இருந்து பாடசாலைகளிலேயே இத்தகைய நிகழ்வுகளை நடத்தி வருகிறார்கள். இதன் காரணமாக மாணவர்கள் உளப் பாதிப்புக்களைச் சந்திக்க நேரிட்டுள்ளதுடன் பெற்றோர்கள் கடனாளிகளாக மாறி காப்புறுதியாளர்களாக தமது பிள்ளைகளை இணைத்துள்ளார்கள். எதிர்காலத்தில் கிடைக்கக் கூடிய தொகையை நம்பியே பெற்றோர்கள் இந்தக் காப்புறுதியை செய்து வருகின்றனர். எனினும் இது தொடர்பான போதிய விளக்கம் பெற்றோர்களுக்கு வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-14)

## சமூக பாதுகாப்பு சபையின் நடமாடும் சேவை

இலங்கை சமூக பாதுகாப்பு சபையின்நடமாடும் சேவையும் விழிப்புணர்வு கருத்தரங்கும் இன்று செவ்வாய்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கிளிநொச்சி சமூக பாதுகாப்புச் சபையின் மாவட்ட இணைப்பு அதிகாரி பாக்கியராசா பிரதீபன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் தலைவர் திருமதி சுமுனா ஆரியதாசா, கௌரவ விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன், மேலதிக அரச அதிபர் எஸ்.ஸ்ரீனிவாசன் ஆகியோர் கலந்து கொள்வர். இதன் போது புதிதாக இணைத்துக் கொள்ளப்படும் பயனாளிகளுக்கு அங்கத்துவ புத்தகம் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும். (வ-14)

# வேறு மாவட்டப் பாடசாலைகளுக்கு மாற்றலாகிச் செல்லும் வன்னி ஆசிரியர்கள்

### மாணவர்களின் கல்வி பாதிப்படைவதாகப் பெற்றோர் கவலை

மாங்குளம், ஜூலை 30

புதிதாக வன்னிக்கு நியமனம் பெற்று வரும் ஆசிரியர்கள் பலர் அதிகாரிகளின் அனுசரணையுடன் வேறு மாவட்டங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் செல்கின்றனர். இதனால் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய முடியாமல் தமது பிள்ளைகளின் கல்வி பாதிப்படைவதாக அந்தப் பகுதி பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.



வவுனியா வடக்கு கல்வி வலயத்திலுள்ள ஆயிரம் பாடசாலை திட்ட நியமனத்தில் கனகராயன் குளம் மகா வித்தியாலயத்துக்கு இரசாயனவியல் பாட ஆசிரியர் ஒருவர் அண்மையில் நியமிக்கப்பட்டிருந்தார்.

இதனால் இந்தப் பாடசாலைகளில் விஞ்ஞானப் பிரிவை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டதுடன் அந்தப் பாடசாலையில் விஞ்ஞான பாடத்துக்கு நிலவி வந்த ஆசிரியர் பற்றாக் குறையும் நிவர்த்தி செய்யப்பட்டது. ஆனால், அவர் பாடசாலையில் பதவியேற்று 3 கிழமைகளில் தனது செல்வாக்கைப் பயன்படுத்தி மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்துக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். இதனால் இந்தப் பாடசாலையில் விஞ்ஞான பிரிவை ஆரம்பிப்பது கேள்விக் குறியாகி விட்டது.

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் விஞ்ஞான பாட ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை தொடர்ச்சியாக நிலவி வரும் இந்த வேளையில் பின் தங்கிய பாடசாலைகளைக் கருத்தில் கொள்ளாமல் இடமாற்றம் வழங்கப்படுவதை உடனடியாக நிறுத்துமாறும் அந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக வடமாகாண ஆளுநர், வடமாகாணக் கல்விப் பணிப்பாளர், வவுனியா வடக்கு கல்விப் பணிப்பாளர் மற்றும் ஆசிரியர் சங்கத்தினர் ஆகியோர் கவனமெடுக்குமாறும் அந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (எ-422)

## தொழில் திறன் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூலை 30

வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்டத்தில் நடத்தப்படும் மகளிர் அபிவிருத்தி நிலையங்களின் தொழில் திறன் கண்காட்சி இன்று செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு யாழ்.புனித மரியாள் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்டச் செயலக கிராம அபிவிருத்தி நிலைய மாவட்ட உத்தியோகத்தர் திருமதி நவமணி அலோசியஸ் ஜெயராஜன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்கள பணிப்பாளர் ஜே.ஜே.சி. பெலிசியன், யாழ்.பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். (வ-14)

## கூடங்குளம் அணுஉலைக்கு எதிரான மனு தள்ளுபடி

சென்னை, ஜூலை 30
கூடங்குளம் அணு உலைக்கு எதிரான மனுவைத் தள்ளுபடி செய்துள்ள உயர்நீதிமன்றம் கூடங்குளம் போராட்டக்காரர்கள் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள அனைத்து வழக்குகளையும் மீளப் பெற வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளது.

அத்துடன் வழக்குகளை மீளப் பெறும் நடைமுறையில் உயர்நீதிமன்றத்தின் அறிவுறுத்தல்களைப் பின்பற்ற வேண்டும் என்றும் குறித்த உத்தரவில் உயர்நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது. (ற)

# எல்லைப் பாதுகாப்பு குறித்து எதுவும் தெரிவிக்க முடியாது

## இந்திய இராணுவ அமைச்சகம் கூறுகின்றது

புதுடில்லி, ஜூலை 30
இந்திய எல்லையில் சீன இராணுத்தினரின் ஊடுருவலை தடுக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்த விவரங்களை வெளியிட மறுத்துள்ளது இந்திய இராணுவ அமைச்சகம்.

சீன படைகளின் ஊடுருவலை முறியடிக்க எல்லையில் எந்த வகையான உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்று இராணுவ அமைச்சகத்திடம், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கேட்கப்பட்ட மனு தொடர்பிலேயே இராணுவ அமைச்சகம் மறுப்பை வெளியிட்டுள்ளது.

இரகசியத்தன்மை மற்றும் பாதுகாப்பு காரணங்களுக்காக குறித்த தகவல்களை வெளியிட முடியாது என்று இராணுவ அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து இராணுவ அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

''தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கோரப்பட்டுள்ள தகவல் மிகவும் ரகசியமான பிரிவைச் சேர்ந்தது. இந்தத் தகவலை பகிரங்கப்படுத்தினால் தேசத்தின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும். இந்தத் தகவலை அளிக்க வேண்டும் என்று தகவல் அறியும் உரிமைச் சட்டம் எங்களை கட்டாயப்படுத்தவில்லை'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எல்லையில் எங்கெல்லாம் விமானத் தளங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்ற விவரத்தை அளிக்குமாறும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல் கோரப்பட்டிருந்தது.

ஆனால் எந்தவொரு கேள்விக்கும் இராணுவ அமைச்சகம் பதில் அளிக்கவில்லை.(ற)

## சீமானுக்கு டும்..டும்..டும்



சென்னை, ஜூலை 30
நாம் தமிழர் கட்சித் தலைவரும், இயக்குநருமான சீமானுக்கு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 8 ஆம் திகதி திருமணம் நடைபெறவுள்ளது.

மறைந்த முன்னாள் தமிழக சட்டசபை சபாநாயகரும், அ.தி.மு.க. முன்னாள் அமைச்சருமான பா. காளிமுத்துவின் மகள் கயல்விழியை சீமானுக்கு திருமணம் செய்ய பேசி நிச்சயிக்கப்பட்டுள்ளது. எனினும் நேற்றுமுன்தினமே முறைப்படி திருமணத் திகதி வெளியிடப்பட்டுள்ளது.

சென்னை நந்தனம் கலைக் கல்லூரி வளாகத்தில் நடைபெற உள்ள இந்த திருமணத்தை, தமிழர் தேசிய பாதுகாப்பு ஒருங்கிணைப்பாளர் பழ. நெடுமாறன் தலைமை வகித்து நடத்துவார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# இரண்டு ஆண்டுகளில் 4 ஆயிரம் கொலைகள்

## சாதனை படைக்கின்றது அ.தி.மு.க. கிண்டலடிக்கின்றார் கருணாநிதி

சென்னை, ஜூலை 30
தமிழ்நாட்டில் கடந்த 2 ஆண்டுகளில் 4 ஆயிரம் கொலைகள் நடந்துள்ளதன் மூலம் அ.தி.மு.க. அரசு சாதனை புரிந்துள்ளது என்று கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கருணாநிதி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

''தமிழ்நாட்டில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் அ.தி.மு.க. ஆட்சியில் கொலை, கொள்ளைகள் அதிகமாக நடைபெற்று வருகின்றன.

வெளி மாநிலங்களில் இருந்ததெல்லாம் கொள்ளை மற்றும் கொலைகாரர்கள் ஒட்டுமொத்தமாக தமிழகத்துக்கு தொழில் செய்ய வந்து விட்டார்கள் என்று தோன்றுகிறது. ஏனெனில் அந்த அளவுக்குக் கொலைக்களமாக மாறியுள்ளது தமிழகம். கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் தமிழகத்தில் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கொலைகள் நடந்துள்ளன என்று ஒரு வார இதழில் வெளியிடப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு சகோதரர் ராமஜெயத்தை கொலை செய்த குற்றவாளிகள் யார் என்பதைக்கூட பொலிஸாரால் இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லை. இந்நிலையில் சமீபத்தில் தமிழக பாரதீய ஜனதா கட்சியின் 4 பிரமுகர்கள் அடுத்தடுத்து கொலை செய்யப்பட்டுள்ளனர். அவை குறித்தும் பொலிஸாரால் எதுவும் கண்டுபிடிக்க முடியவில்லை'' என்றுள்ளது. (ற)



கர்நாடக மாநிலத்தில் பெய்து வரும் கடும் மழையால் பல்வேறு இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டது. அதையடுத்து போக்குவரத்துக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன. தற்போது அங்கு பாதைகளைச் சீரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. (ற)

# நேரில் முன்னிலையாகுமாறு கப்டனுக்கு நீதிமன்று உத்தரவு

சென்னை, ஜூலை 30
தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவை அவதூறாகப் பேசிய வழக்கில் தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் நேரில் முன்னிலையாக வேண்டும் என்று சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

தனியார் தொலைக்காட்சியின் நிகழ்ச்சி ஒன்றில் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவை தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் அவதூறாக பேசினார் என்று தெரிவித்தே வழக்கு தொடரப்பட்டது. (ற)

# அசாமில் தாக்குதல் 15 பொலிஸார் காயம்

கவுகாத்தி, ஜூலை 30
அசாம் மாநிலம் கவுகாத்தியில் பொலிஸ் நிலையமருகே உல்பா தீவிரவாதிகள் கையெறி குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியதில் 5க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர்.

அசாம் தலைநகர் கவுகாத்தியில் மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள பொலிஸ் நிலையத்தை குறிவைத்து உல்பா தீவிரவாதிகள், கையெறி குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தினர்.

தாக்குதலில் காயம் அடைந்தவர்கள் அருகிலுள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களின் உடல் நிலை மோசமாக உள்ளது என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.



இந்தத் தாக்குதலுக்கு உல்பா தீவிரவாதிகள் உரிமை கோரியுள்ளனர். இந்த வாரத்தில் நடந்த ஐந்தாவது குண்டு வெடிப்பு சம்பவம் இதுவாகும்.

இந்தத் தாக்குதலுக்கு அசாம் முதல்வர் தருண் கோகாய் கண்டனம் தெரிவித்து உள்ளார். இந்தச் சம்பவம் காரணமாக மாநிலம் முழுவதும் பாதுகாப்பு பலத்தப்பட்டு உள்ளது. (ற)

# கடித்த பாம்பைப் பிடித்து திருப்பிக் கடித்த விவசாயி

போபால், ஜூலை 30
கடித்த பாம்பைத் திருப்பிக் கடித்தால் தனக்கு ஒன்றும் நேராது என்ற பழைய காலத்துக் கருத்தை உண்மையாக்கியுள்ளார் போபாலைச் சேர்ந்த விவசாயி ஒருவர்.

போபால் அருகில் உள்ள மச்சி போர்கான் என்ற கிராமத்தைச் சேர்ந்த விவசாயி 30 வயதுடைய நிலாப் துர்வே. பழங்குடி இனத்தைச் சேர்ந்தவரான இவர், கடந்த 24ம் திகதி தனது ஆடு, மாடுகளை மேய்த்துவிட்டு இரவு வீட்டிற்கு திரும்பிக் கொண்டிருந்தார்.

அப்போது இவரை வழியில் பாம்பு கடித்துள்ளது. இதனால் சிறிதும் பதற்றமடையாமல் அந்தப் பாம்பை பிடித்து துண்டு துண்டுகளாக கடித்துக் கொன்றுள்ளார்.

அதன்பின்னரே மருத்துவமனைக்குச் சென்ற அவருக்கு விஷ முறிவுக்கான மருந்து செலுத்தப்பட்டுள்ளது.

அவருக்கு சிகிச்சையளித்த மருத்துவர் ராகுல் ஸ்ரீவத்சவ் கூறுகையில்,

''இந்த மருத்துவமனைக்கு நான் வந்ததிலிருந்து சுமார் 200க்கும் மேற்பட்ட பழங்குடி மக்களுக்கு பாம்புக்கடிக்கு சிகிச்சை அளித்துள்ளேன். ஆனால் இதுபோன்ற சம்பவம் நடைபெறுவது இதுவே முதன் முறை'' என்று தெரிவித்துள்ளார். (ற)

# தெலுங்கானா விவகாரம் இன்று முக்கிய முடிவு

## ஆந்திராவில் பாதுகாப்பு தீவிரம்

ஹைதராபாத், ஜூலை 30
தெலுங்கானாவை மையமாக வைத்து ஆந்திர மாநிலம் பிரிப்பது தொடர்பாக குறித்து இன்று முக்கிய முடிவு எடுக்கப்படவுள்ளதை அடுத்து ஆந்திராவில் பாதுகாப்பு பலப்படுத்துப்பட்டுள்ளது.

தெலுங்கானா விவகாரம் குறித்து முடிவெடுக்க காங்கிரஸ் நிர்வாகக் குழு இன்று கூடுகின்றது. அதையடுத்து இன்று முக்கிய முடிவுகள் எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தநிலையில் ஆந்திராவை 2 ஆக பிரிக்க கூடாது என வலியுறுத்தி வரும் அந்த மாநில முதலமைச்சர் கிரண்குமார் ரெட்டி அவசரமாக இன்று டில்லி புறப்பட்டு சென்றுள்ளார்.

அதையடுத்து ஆந்திராவில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (ற)

# 'நீண்ட நாள் ஆசை; அதனால் தான் குதித்தேன்'

## கட்டடத்தில் இருந்து குதித்து கை, கால் முறித்துக் கொண்டவர் வாக்குமூலம்

சென்னை, ஜூலை 30
எனக்கு உயரமான இடத்தில் இருந்து குதிக்க வேண்டும் என்பது நீண்ட நாள் ஆசை. அதனால் தான் உயரமான இடத்தில் இருந்து குதித்தேன் என்று பொலிஸாருக்கு அதிர்ச்சியளித்துள்ளார் சென்னையில் உள்ள 'ஸ்பென்சர் பிளாசா' வணிக வளாகத்தில் இருந்து குதித்து கை, கால்களை முறித்துக் கொண்ட இளைஞர்.

வணிக வளாகத்தில் நேற்று நகரும் படிக்கட்டில் இருந்து ஒரு இளைஞர் குதித்தார்.

அதில் படுகாயம் அடைந்த குறித்த இளைஞரை அருகில் இருந்தவர்கள் மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவர் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதுகுறித்து விசாரணை மேற்கொள்ள வந்த பொலிஸாருக்கு அதிர்ச்சி கொடுத்துள்ளார் குறித்த இளைஞர்.



பொலிஸாருக்கு அவர் அளித்த வாக்குமூலத்தில் ''எனக்கு ரொம்ப நாளாகவே உயரமான இடத்தில் இருந்து குதிக்க வேண்டும் என்று ஆசை. அது எனக்கு ஜாலியாக இருக்கும் என்று நினைத்தேன். அதனால் தான் உயரத்தில் இருந்து குதித்தேன்'' என்று கூறியுள்ளார் அவர்.

விசாரணை மேற்கொள்ள வந்த பொலிஸார் இந்த வாக்குமூலத்தைக் கேட்டு அதிர்ச்சியில் வாயடைத்துப் போய்விட்டனராம்.(ற)

# பேச்சுகள் மீண்டும் ஆரம்பம்

## பலஸ்தீன, இஸ்ரேல் பிரதிநிதிகள் வொஷிங்டனில் சந்திக்கின்றனர்

ஜெருசலேம், ஜூலை 30
பலஸ்தீனத்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் மூன்றாண்டுகளின் பின்னர் மீண்டும் ஆரம்பமாகவுள்ளன.

அமெரிக்காவின் அனுசரணையுடன் ஆரம்பமாகும் இந்தப் பேச்சுகள் வொஷிங்டன் நகரில் நடைபெறும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 6 மாத காலமாக அமெரிக்க வெளியுறவுச் செயலர் ஜோன் கெரி முன்னெடுத்து வந்த இராஜதந்திர முன்னெடுப்புகளின் பயனாகவே இந்த பேச்சுக்கள் மீளவும் ஆரம்பமாகின்றன.

இஸ்ரேலியத் தரப்பில் நீதியமைச்சர் ஸிப்பி லிவினி தலைமையிலான குழுவினரும், பலஸ்தீனத் தரப்பில் சாயீப் எரகாத் தலைமையிலான தூதுக் குழுவினரும் பேச்சுக்களில் கலந்துகொள்கின்றனர்.

கடந்த காலங்களில் நடந்த பேச்சுகளில் கவனம் செலுத்தப்பட்ட விடயங்கள் குறித்த இம்முறை நடைபெறும் பேச்சுக்களிலும் கவனம் செலுத்தப்படவுள்ளது.



குறிப்பாக, மேற்குக் கரைப் பகுதியில் உள்ள இஸ்ரேலிய குடியேற்றங்களின் எதிர்காலம், ஜெருசலேமின் நிலைமை மற்றும் பலஸ்தீன அகதிகளின் கதி என்பன பற்றிப் பேசப்படவுள்ளது.

எனினும் இந்தப் பேச்சுக்கள் வெற்றியளிக்குமா என்பது சந்தேகமே என்று பெரும்பாலான இஸ்ரேலியர்களும் பலஸ்தீனர்களும் கருதுகின்றனர். (ற)

### ஸ்பெயின் ரயில் விபத்து

## நிபந்தனையுடன் சாரதியை விடுவித்தது நீதிமன்றம்

பேர்லின், ஜூலை 30
ஸ்பெயின் ரயில் விபத்துக்குக் காரணம் என கருதப்படும் ரயிலின் சாரதி நிபந்தனைகளின் கீழ் விடுவிக்கப்பட்டுள்ளார்.

குறித்த ரயிலின் சாரதி மீது கொலைக் குற்றச்சாட்டு மற்றும் பொறுப்பற்ற விதத்தில் நடந்து கொண்டமை போன்ற பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள நிலையில், அவர் நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

விசாரணைகளின் பின்னர் விடுவிக்கப்பட்ட பிரான்சிஸ்கோ ஜோஸ் கார்ஸன் அமோவின் கடவுச்சீட்டு நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அவர் வாரத்தில் ஒருநாள் நீதிமன்றத்தில் முன்னிலையாக வேண்டுமெனவும், நீதிமன்றத்தின் அனுமதியின்றி ஸ்பெயினிலிருந்து வெளியேறக் கூடாது எனவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.(ற)

## விதிகளை மீறுவோருக்கு சீனாவில் நூதன தண்டனை

பீஜிங், ஜூலை 30
சீனாவில் போக்குவரத்து விதிகளை மீறுபவர்களுக்கு பொலிசார் நூதன முறையில் தண்டனை வழங்குகின்றனர்.

சீனாவில் ஷாங்காய் நகரில் சாலையில் நடந்து செல்பவர்கள், மோட்டார் பொருத்தாத வாகனங்களை ஓட்டுபவர்கள் போக்குவரத்து விதிகளை மீறினால் அவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டு வந்தது.

இவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டும் அவர்கள் திருந்தாததை அடுத்து, தற்போது புதுமையான தண்டனை அறிமுகமாகியுள்ளது.

அதாவது நாளிதழில் வெளியாகியுள்ள போக்குவரத்து விபத்து தொடர்பான செய்தியை பொது இடத்தில் சத்தம் போட்டு படிக்க வேண்டும்.


விதியை மீறுபவர்கள் அபராதம் செலுத்துவது அல்லது பத்திரிகை வாசிப்பது இதில் எதை வேண்டுமானாலும் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

போக்குவரத்து நெரிசல் மிக்க நேரத்தில் மட்டும் வழங்கப்பட்டு வந்த இந்த தண்டனைகள், தற்போது சகல நேரத்துக்கும் பொருந்தும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## ஈராக் குண்டுவெடிப்புகள் 29 பேர் சாவு; பலர் காயம்

பாக்தாக்,ஜூலை 30
ஈராக் தலைநகர் பாக்தாத்தில் இடம்பெற்ற 8 கார்க் குண்டுத் தாக்குதல்களில் 29 பேர் உயிரிழந்துள்ளனர். 100க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

ஷியா மக்கள் குடியிருக்கும் பிரதேசங்களில் இடம்பெற்ற குண்டு வெடிப்புகள், கார் தரிப்பிடங்களிலும் சந்தைகளிலும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார்களில் வைக்கப்பட்டே வெடிக்க வைக்கப்பட்டுள்ளன.



இந்த மாதத்தில் மட்டும் ஈராக்கில் 700க்கும் அதிகமான மக்கள் குண்டுத் தாக்குதல்களில் உயிரிழந்துள்ளனர். (ற)

## போராட்டத்தை கைவிடுங்கள்; எகிப்து அரசு கோரிக்கை

கெய்ரோ, ஜூலை 30
போராட்டங்களை கைவிட்டு நாட்டில் இயல்பு நிலையைப் பேணுமாறு எகிப்து அரசு ஆர்ப்பாட்டக்காரர்களிடம் கோரியுள்ளது.

பெரும் எண்ணிக்கையான ஆர்ப்பாட்டக்காரர்கள் முக்கிய நகரங்களில் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். அதையடுத்தே அரசு இந்த அறிவித்தலை விடுத்துள்ளது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள எகிப்து உள்துறை அமைச்சர் மொஹமட் இப்ராஹிம்,

''ராபா அல் அடாவீயா என்னும் பள்ளிவாசலை அண்டிய பகுதிகளில் பெருமளவிலான மக்கள் குழுமியிருகின்றனர். அதனால் அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர். எனவே மக்கள் அமைதியா முறையில் கலைந்து செல்ல வேண்டும் என்று வலியுறுத்துகின்றோம்'' என்று தெரிவித்துள்ளார்.

ஆர்ப்பாட்டங்கள் மேற் கொண்டவர்கள் மீது எகிப்திய இராணுவம் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர். அதையடுத்து பெரும் நெருக்கடிகளை எதிர் கொண்டுள்ள எகிப்திய அரசு இந்த அறிவித்தலை வெளியிட்டுள்ளது. (ற)





விபத்தில் உயிரிழந்தவர்களின் உடல்கள் மீட்புக் குழுவினரால் மீட்கப்படுகின்றன.

## கட்டுப்பாட்டை இழந்தது பஸ்: எகிப்தில் 38 பேர் பரிதாப சாவு

ரோம், ஜூலை 30
தெற்கு இத்தாலியில் சுற்றுலா பஸ் ஒன்று விபத்துக்குள்ளானதில் 38 பேர் உயிரிழந்துள்ளனர். 11 பேர் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மலைப்பகுதியான அவெல்லினோவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. கட்டுப்பாட்டை இழந்தபஸ்30மீற்றர்ஆழமான பள்ளத்தில் கவிழ்ந்துள்ளது.

அதிவேக நெடுஞ்சாலையில் ஏற்பட்ட இந்த விபத்தை அடுத்து, அந்த வீதியில் பயணித்த வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

''பஸ்விபத்துக்குள்ளாகியதற்கு அது வேகக் கட்டுப்பாட்டை இழந்ததே காரணம். கட்டுப்பாட்டை இழந்த பஸ் வீதியின் இரும்பு தடுப்பு வேலிகளை உடைத்துக் கொண்டு 30 மீற்றர் ஆழமான பள்ளத்தில் வீழ்ந்துள்ளது. வேகக் கட்டுப்பாட்டை இழந்தமைக்கான காரணங்கள்குறித்துஆராய்ந்து வருகின்றோம்'' என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



பஸ் விபத்துக்குள்ளாவதற்கு முன்னர் சிறிய வெடிச் சப்தம் கேட்டது என்று விபத்தில் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள ஒருவர் தெரிவித்துள்ளார். அதையடுத்து பஸ்சின் சக்கரங்களில் ஏற்பட்ட கோளாறே பஸ் கட்டுப்பாட்டை இழந்தமைக்குக் காரணமாக இருக்கலாம் என்று ஊகிக்கப்படுகின்றது. (ற)

# கண்காட்சியில் அதிரடி கொள்ளை

## 56 மில். டொலர் பெறுமதியான வைரங்கள், நகைகள் 'அபேஸ்'

பரிஸ், ஜூலை 30
பிரான்ஸில் நடந்த கண்காட்சி ஒன்றில் 56 மில்லியன் டொலர் பெறுமதியான வைரம் மற்றும் நகைகள் கொள்ளையடிக்கப்பட்டமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சினிமாப் படப் பாணியில் நடந்த இந்தத் துணிகரக் கொள்ளையில் தடயங்கள் எதுவும் கிடைக்காது திண்டாடுகின்றனர் பொலிஸார்.

கேன்ஸ் நகரில் உள்ள கோர்ல்டன் நட்சத்திர விடுதியிலே கண்காட்சி நடைபெற்றது.



பல்வேறு நிறுவனங்களின் தங்கநகைகள் மற்றும் வைரங்கள் அங்கு பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.

இஸ்ரேலைச் சேர்ந்த லெவ் வெவில் என்னும் கோடீஸ்வரரின் தங்கநகைக் காட்சியறையிலேயே இந்த அதிரடிக் கொள்ளை நடத்தப்பட்டுள்ளது.

''தலையில் தொப்பியும், முகத்தை அரைவாசி கறுப்புத் துணியால் மூடியபடியும் வந்த மர்ம மனிதன் துப்பாக்கியைக் காட்டி அச்சுறுத்தினான். அங்கிருந்த வைரம் மற்றும் தங்க நகைகளை ஒரு பையில் அள்ளிப் போட்டவாறு அங்கிருந்து மின்னல் வேகத்தில் மறைந்து விட்டான்'' என்று கூறுகின்றனர் சம்பவத்தின்போது காட்சியறையில் நின்றவர்கள்.

உடனடியாக பொலிஸார் களத்தில் இறங்கியபோதும் கொள்ளையின் சூத்திரதாரியைப் பிடிக்க முடியவில்லை. விடுதியில் பொருத்தப்பட்டுள்ள பாதுகாப்புக் கமராக்களை ஆராய்ந்த போதும் உபயோகமான தகவல்கள் எதுவும் சிக்க வில்லை என்கின்றனர் பொலிஸார்.

''கொள்ளையில் ஒருவர் ஈடுபட்டாலும், இது தனி நபர் முயற்சி என்பதை நாங்கள் இன்னமும் நம்பவில்லை. குறித்த பகுதியில் கொள்ளையுடன் சம்பந்தப்பட்ட பலர் இருந்திருக்கக் கூடும். பாதுகாப்புக் கமராக்களில் பதிவாகியுள்ள சம்பவங்களில் கொள்ளையில் ஈடுபட்டவனை அடையாளம் காண முடியாதுள்ளது. நாம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளோம். விரைவில் தடயங்கள் எம்மிடம் சிக்கும்'' என்று கூறுகின்றனர் பொலிஸார்.

அதிரடியாகக் கொள்ளையடிக்கப்பட்ட வைரம் மற்றும் தங்க நகையின் பெறுமதி சுமார் 56 மில்லியன் அமெரிக்க டொலர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.(ற)

## ஆள்களை கடத்தியோர் கைது

ஜகார்த்தா, ஜூலை 30
ஆள்கடத்தல்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் நால்வர் இந்தோனேஷியாவில் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று அந்நாட்டுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இலங்கை, ஆப்கன் மற்றும் ஈரான் புகலிடக் கோரிக்கையாளர்களுடன் இந்தோனேஷிய - ஜாவா தீவுகளுக்கு அருகே கடந்த வாரம் அனர்த்தத்திற்குள்ளான படகுடன் இவர்களும் தொடர்பு இருந்திருந்தன. விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது என்றும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (ற)

## புலம்பெயர் உறவுகள் நிதியுதவி



கைதடி, ஜூலை 30
யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் கீழ் இயங்கும் கைதடி தொழிற் பூங்காவில் தங்கியுள்ளோரின் அடிப் படை வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக கைதடியைச் சேர்ந்த புலம் பெயர்வாழ் உறவுகள் சிலர் நிதியுதவி செய்துள்ளதாக யாழ். விழிப் புலனற்றோர் சங்கத்தின் தலைவர் வி.கனகசபை தெரிவித்துள்ளார்.
கடந்த வாரம் தொழிற் பூங்காவுக்கு வருகை தந்த லண்டன் வாழ் கைதடி ஒன்றியத் தின் தலைவர் சி.கனோத், வா. உதயகுமார் தம்பதிகள் மற்றும் சுவிஸ் நாட்டில் வசிக்கும் சி. புலேந்திரன் தம்பதிகள் ஆகியோரே ஒரு தொகை நிதியை வழங்கியுள்ளதாகவும், இவ்வாறு ஏனைய புலம் பெயர்வாழ் உறவுகளும் உதவி செய்தால் விழிப்புலனற்ற மற்றும் விழிப் புலனற்ற மாற்றுவலுவுடையோரின் வாழ்க்கையை மேம்படுத்தலாம் எனவும் அவர் குறிப்பிட்டார்.
(ஒ-288)

## 125 ஆவது ஆண்டில் கால்பதிக்கிறது காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி.

காரைநகர், ஜூலை 30
காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தின் 125 ஆவது ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் 1 ஆம் திகதி வியாழக்கிழமையும் மறுநாள் வெள்ளிக்கிழமையும் மூன்று அமர்வுகளாக இடம்பெற உள்ளது.
முதல் அமர்வு வியாழக் கிழமை காலை 8.30 மணிக்கு வித்தியாலய அதிபர் திருமதி வா.தவபாலன் தலைமையில் வித்தியாலய நடராசா மண்டபத்தில் நடைபெற உள்ளது.
நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக குழந்தை வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி வி.விஜயரட்ணமும் சிறப்பு விருந்தினராக வட மாகாண பிரதிக் கல்விச் செயலாளர் ப.விக்னேஸ்வரனும் கலந்துகொள்வர்.
இரண்டாவது அமர்வு பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாக உள்ளது. பிரதம விருந்தினராக வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசாவும் சிறப்பு விருந்தினராக வடமாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் க.இராஜேந்திரமும் கௌரவ விருந்தினராக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் தி.யோன்குயின்ரனும் கலந்து கொள்ள உள்ளனர்.
மூன்றாவது அமர்வு வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய அதிபர் திருமதி வா.தவபாலன் தலைமையில் ஆரம்பமாகும்.
யாழ்.பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீட பீடாதிபதி பேராசிரியர் ச.சத்தியசீலன், யாழ்.பல்கலைக்கழக கல்வியியற் துறை தலைவர் கலாநிதி திருமதி அ.சத்தியசீலன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்துகொள்ள உள்ளனர்.
முதலாவது அமர்வில் சயம்பு மலர் வெளியீடும், இரண்டாவது அமர்வில் பரிசில் தின நிகழ்வும், மூன்றாவது அமர்வில் மாணவர்களின் கலை நிகழ்வும் சிறப்பு நிகழ்வுகளாக இடம்பெற உள்ளன.
(ந-250)

## நிர்வாகிகள் தெரிவு

வடமராட்சி, ஜூலை 30
பருத்தித்துறை தும்பளை மேற்கு வைரவர் ஆலய பரிபாலன சபையின் புதிய நிர்வாக சபைத் தெரிவு ஆலய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.
சபையின் நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளோர் விவரம் வருமாறு:
தலைவர் கே.எம்.கதிரமலை, உப தலைவர் சி.கதிரவன் சுவாமி, செயலாளர் த.விஜயராம், உப செயலாளர் சு.சஜிதா, பொருளாளர் திருமதி க.பரமேஸ்வரி, முகாமையாளர்கள் க.ஜெயக்குமாரி, இ.சிவயோகம் அத்துடன் 7பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.(ந-8)

## துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரியின் ஆசிரியர் அருட்சகோதரி மேரி விமலினி
அவர்களின் அன்புச் சகோதரன்
**அல்பிரெட் பிராங் அன் செலன்**
அவர்கள் 24.07.2013 அன்று அகாலமரணம் அடைந்ததையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா இறைவனடியில் சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.
(30048)(2.6.3)
பாடசாலைச் சமூகம்.
யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி, அச்சுவேலி.

## ஏழாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**செல்லம்மா கணேசலிங்கம்**

மலர்வு
13.05.1942

உதிர்வு
18.07.2006

அன்பும் அறிவும் ஊட்டி
ஆதரவாய் எமக்கிருந்து
இன்ப வாழ்வு வாழவைத்து
ஈடில்லா பெருமை சேர்த்தவரே
உங்கள் இழப்பால் நாம் நொந்து
ஊமைகளாய் வாழ்கின்றோம்
எம்மை இங்கு தவிக்கவிட்டு
ஏனம்மா எமைப் பிரிந்தீர்

சரவணை கிழக்கு,
வேலணை 09.
திருவள்ளுவர் ஒழுங்கை,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் தவிக்கும்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## அதிபர்களுக்கான கூட்டம் நாளை

தென்மராட்சி, ஜூலை 30
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் நாளை புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார்.
(ஒ-9)

## அறிவுறுத்தல் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 30
க.பொ.த.உயர்தரம் மற்றும் புலமைப்பரிசில் பரீட்சைகளில் கடமையாற்றும் இணைப்பு நிலைய அலுவலர்கள், உதவி இணைப்பு அலுவலர்கள், மேற்பார்வையாளர்கள், உதவி மேற்பார் வையாளர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் நாளை புதன்கிழமை யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.
இந்தக் கூட்டத்தில் கோப்பாய் கோட்டம் தவிர்ந்த யாழ்ப்பாணம், தீவகம், தென்மராட்சி ஆகிய வலயங்களைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட அலுவலர்களைக் கலந்துகொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார் அறிவித்துள்ளார்.
(ந-14)

## ஈரவிழிகளுடன் ஈராண்டு



மலர்வு
26.08.1939

உதிர்வு
23.07.2011

அமரர் **தில்லையம்பலம் செல்வராஜா**
(ஓய்வுபெற்ற அரசாங்க அதிபர்)

பாசக் கடல் வற்றிப்
போனதுவோ இரண்டாண்டுகள்?
நேசக் கரையின்னும் காயவில்லை—
எம் நெஞ்சில்
மோதும் உம் நினைவலைகள்
இன்றைக்கும் ஓயவில்லை

"செல்வராஜ பவனம்"
565/10, பருத்தித்துறை வீதி,
நல்லூர். 021 205 4025 (30047)(11.6.3)

உங்கள் நினைவோடு வாழும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## இளவாலைப் பகுதியில் இன்று சுனாமி ஒத்திகை அச்சம் வேண்டாம்

யாழ்ப்பாணம், ஜூலை 30
தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவில் உள்ள இளவாலை தென்மேற்கு பிரதேசத்தில் ஜே/222 கிராம உத்தியோகத்தர் பிரிவில் இன்று செவ்வாய்க்கிழமை பிற் பகல் 3 மணிக்கு இடர்முகாமைத்துவ மத்திய நிலையத்தின் வேண்டுகோளுக்கிணங்க தேசிய ரீதியாக சுனாமிக்கான ஒத்திகை நிகழ்வொன்று நடைபெறவுள்ளது.
இது தொடர்பில் பொது மக்கள் அமைதியாக இருக்குமாறு இது ஓர் ஒத்திகைச் செயற்பாடு என்பதால் எவரும் குழப்பமடையத் தேவையில்லை எனவும் பொதுமக்களுக்கு யாழ். அரச அதிபர் அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.
(ஒ)

## மரண அறிவித்தல்

திருமதி **பத்மா மகேஸ்வரன்** (பேபி)
*(லயன் சீமாட்டி-நல்லூர் லயன்ஸ் கழகம்)*



நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மா மகேஸ்வரன் 28.07.2013 ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.
அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அருணாசலம் - கண்மணி யம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், லயன் I.A.மகேஸ்வரனின் (ஓய்வு பெற்ற மின் அத்தியட்சகர்) அன்பு மனைவியும், நிஷாந்தி (ஆசிரியை,கிளி/கட்டைக்காடு அ.த.க. பாடசாலை), அஜந்தன் ஆகியோ ரின் அன்புத் தாயும், கயூரன்(ஆசிரியர், மன்னார் பரிகாரிக்கண்டல் அ.த.க. பாடசாலை) அவர்களின் மாமியும், பத்மாவதி, இந்திரகுமார் (டுபாய்), இந்திராணி (அமெரிக்கா), ராதாராணி (கனடா), ஜெயராணி (நல்லூர் பிரதேச சபை), சந்திரிகா(யாழ். மாநகர சபை), குகன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவர்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.07.2013) செவ்வாய்க்கிழமை பி.ப. 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

19, யமுனா வீதி, நல்லூர். (30049)(5.3.6)

## மரண அறிவித்தல்

திருமதி **அமிர்தலிங்கம் இரத்தினேஸ்வரி**



கொம்மாந்துறையைப் பிறப்பிடமாகவும், உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட அமிர்தலிங்கம் இரத்தினேஸ்வரி நேற்று (29.07.2013) திங்கட் கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்ற தம்பு மற்றும் தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராசமாணிக்கம்-பூமணி தம்பதியரின் அன்பு மருமகளும், அமிர்தலிங்கத்தின் பாசமிகு மனைவியும், அகிலன், நிர்மலன் (A9 Express யாழ்- கொழும்பு வான் சேவை), கோகுலன், சோபிகா (யாழ். பல்கலைக்கழகம்-நுண்கலைப்பீடம்), விதுலன் (உடுப்பிட்டி அ.மி. கல்லூரி), ஜெபிகா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), கயானன் (உடுப்பிட்டி அ.மி. கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.07.2013) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக ஊரிக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வீரபத்திரர் கோயிலடி,**
**உடுப்பிட்டி.**
(37664)
(10,16,14)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## கஷ்ட, அதிகஷ்ட பாடசாலைகளில் கற்கும் மாணவருக்கே இலவச பாதணிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 30

வடமாகாணத்தில் உள்ள கஷ்ட மற்றும் அதிகஷ்டப் பாடசாலைகளில் கற்கும் மாணவர்களுக்கு அடுத்த வருடம் தொடக்கம் இலவசமாக பாதணிகள் வழங்குவதற்கு கல்விச் சேவைகள் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கஷ்ட மற்றும் அதிகஷ்டப் பாடசாலைகளில் கற்கும் மாணவர்கள் பாதணிகள் அணிவதில்லையென ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டதை அடுத்து அடுத்த வருடம் தொடக்கம் இலவசமாக பாதணிகள் வழங்கவுள்ளனர். இதன் பிரகாரம் தென்மராட்சி கல்வி வலயத்தில் உள்ள 32 பாடசாலைகளின் அதிபர்களுக்கான கடிதங்கள் வலயக் கல்வி அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டு பெற்றுக் கொண்டதாக அதிபர்கள் தரப்பில்தெரிவிக்கப் பட்டது. இது இவ்வாறிருக்க, வடமாகாணத்திலுள்ள பாடசாலைகளில் கற்கும் கஷ்ட மற்றும் அதிகஷ்ட நிலையிலுள்ள மாணவர்களுக்கு அடுத்த வருடம் தொடக்கம் இலவசமாக பாதணிகளை வழங்குவதற்கு கல்வி அமைச்சால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதாக நேற்றைய உதயனில் செய்தி வெளியாகி இருந்தது. இந்தத் தகவல் தவறானது, தவறுக்கு வருந்துகிறோம்.

## கிளிநொச்சி திருக்குடும்ப கன்னியர் சபைக்கு வாழைக்குட்டிகள்

வடமராட்சி, ஜூலை 30

கிளிநொச்சி திருக்குடும்ப கன்னியர் சபைக்கு 50 வாழைக்குட்டிகளை பருத்தித்துறை ஸ்ரீ இராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் வழங்கியுள்ளது. (வ-8)

# கரவெட்டிப் பிரிவில் நடமாடும் சேவை

### முதலாம் திகதி முதல் 3 நாள்களுக்கு

வடமராட்சி, ஜூலை 30

வடமராட்சி தெற்கு- மேற்கு- கரவெட்டி பிரதேச செயலர் பிரதேசத்துக்கு உட்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளில் தேசிய அடையாள அட்டை வழங்குவதற்கான நடமாடும் சேவை எதிர்வரும் முதலாம் திகதி முதல் 3 ஆம் திகதி வரை 3 நிலையங்களில் நடைபெறவுள்ளது.

முதலாம் திகதி கட்டைவேலி ஞானசாரியார் கல்லூரியில் கிராம சேவகர் பிரிவு ஜே/367 தொடக்கம் ஜே/374 வரையும், ஜே/380 தொடக்கம் ஜே/382 வரையும் மற்றும் ஜே/377 பிரிவும் உள்ளிட்ட கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தோருக்கும்-

எதிர்வரும் 2 ஆம் திகதி உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் ஜே/352 தொடக்கம் ஜே/362 வரையுமான கிராமசேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தோருக்கும்-

எதிர்வரும் 3 ஆம் திகதி கரவெட்டிப் பிரதேச செயலக அலுவலகத்தில் ஜே/348 தொடக்கம் ஜே/382 வரையான பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அனைத்து கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தோருக்கும் தேசிய அடையாள அட்டை வழங்குவதற்கான நடமாடும் சேவை காலை 9 மணிமுதல் மாலை 4 மணிவரை இடம்பெறவுள்ளது. (வ-8-35)



# செல்வச் சந்நிதி ஆலயத்தின் பெருந்திருவிழா ஓக. 7 இல்



யாழ்ப்பாணம், ஜூலை 30

தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 7 ஆம் திகதி புதன்கிழமை அதிகாலை 4 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து திருவிழாக்கள் இடம்பெறவுள்ளன.


இடம்பெறும் திருவிழா வரிசையில் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி 5 ஆம் திருவிழாவில் வேல் உற்சவமும் எதிர்வரும் 15 ஆம் திகதி 10 ஆம் திருவிழாவில் பூங்காவனமும் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து எதிர்வரும் 16 ஆம் திகதி 11ஆம் திருவிழாவில் கைலாச வாகனத் திருவிழாவும், 12 ஆம் திருவிழாவான மறுநாள் விமானத் திருவிழாவும் இடம்பெறும்.

எதிர்வரும் 19 ஆம் திகதி சப்பரத் திருவிழாவும் 20 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் எதிர்வரும் 21 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் மௌனத் திருவிழாவும் இடம்பெறும்.

திருவிழாக் காலத்தில் காலைவேளை திருவிழாக்கள் 6 மணிக்கும் மாலைத் திருவிழாக்கள் 5 மணிக்கும் இடம்பெறும். (வ-14-8)

### குருநகர் தொடர்மாடியில் புனரமைப்புப் பணிகள்



குருநகர் தொடர்மாடிக் கட்டடத்தில் புனர்நிர்மாணப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. கடந்த பல வருடங்களாக புனரமைப்பு இன்றி இருந்த தொடர்மாடிக் கட்டடத்தை மீள் புனரமைப்புச் செய்வதற்கு வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டது. இதற்கமைய கட்டட புனரமைப்புப் பணிகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (வ-17)

### 50 வருடங்களாகக் கவனிக்கப்படாத

## தட்டான்குள 6 கி.மீ. வீதியை புனரமைத்துத் தர கோரிக்கை

தென்மராட்சி, ஜூலை 30

சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குட்பட்ட மீசாலை வடக்கு தட்டான்குள வீதியைப் புனரமைத்துத் தருமாறு அந்தப் பகுதி மக்கள் கோரியுள்ளனர்.

மீசாலை வடக்கு புத்தூர் சந்தியிலிருந்து வரணிக்குச் செல்லும் சுமார் 6 கிலோமீற்றர் நீளமான இந்த வீதி கடந்த 50 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படவில்லை. இந்த வீதியைப் புனரமைத்துத் தருமாறு பல வருடங்களாக உரிய தரப்பினருடன் பல தடவைகள் தொடர்புகொண்டும் பயன் கிடைக்கவில்லை.

இந்த வீதிப் பகுதிகளில் 750க்கு மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கின்றன. வரணி, மந்துவில் பகுதி மக்கள் மீசாலைக்கு வருவதற்கு குறுகிய பாதை என்பதால் தினமும் ஆயிரத்துக்கு மேற்பட்டோர் இந்த வீதியைப் பயன்படுத்தி வருகின்றனர்.

பாடசாலை மாணவர்கள் , அரச உத்தியோகத்தர்கள், விவசாயிகள், பொதுமக்கள் பெரும் சிரமங்களின் மத்தியில் பயணிக்க வேண்டியுள்ளது. எனவே இந்த வீதியைப் புனரமைத்துத் தருமாறு அந்தப் பகுதி மக்கள் உரிய தரப்பினரைக் கோரியுள்ளனர். (ஒ-9)

# பரம்பொருளில் பூரண நம்பிக்கை வைத்து வழிபட்டால் துன்ப துயரங்கள் நீங்கிவிடும்

### பிரம்ம குமாரிகள் ராஜயோக சகோதரி ராதே தெரிவிப்பு

அச்சுவேலி, ஜூலை 30

"பரம் பொருளில் பூரண நம்பிக்கை வைத்து உள்ளன்போடு வழிபட்டால் எமது துன்ப துயரங்கள் நீங்கி விடும். எமது உள்ளத்தில் தெளிவும், சலனமில்லாத அமைதியும் நிலவும். எமது வழிபாட்டில் மற்றும் தியானத்தில் உள்ள குறைபாடே இறையருள் கிட்டாமைக்கு காரணமாகும்'' என்று பிரம்மகுமாரிகள் ராஜயோக சகோதரி ராதே தெரிவித்தார்.

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் ஜோதிலிங்கங்களின் தரிசனமும் பவனியும் தொடர்பான கலந்துரையாடல் பிரதேச செயலர் எம்.பிரதீபன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ராதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது;

பன்னிரண்டு ஜோதிலிங்கங்களையும், அவை அமைந்துள்ள ஆலயசூழ்நிலையோடு கூடிய நிலையில் தரிசிக்கின்ற சந்தர்ப்பம் எமது மக்களுக்கு கிட்டியுள்ளது. அதனை உரிய முறையில் பயன்படுத்தி கொள்ள வேண்டும். பரம்பொருளில் பூரண நம்பிக்கை வைத்து உள்ளன்போடு வழிபட வேண்டும். உள்ளன்போடு வழிபட்டால் எமது துன்ப துயரங்கள் நீங்கி உள்ளத்தில் தெளிவு ஏற்படும். நாம் வழிபடுகின்றோமே, எமது துன்ப துயரங்கள் நீங்கவில்லையே என பலர் ஏங்குகின்றனர். இது அவர்களின் குறைபாடே அன்றி இறைவனின் குறைபாடல்ல. வழிபடுகின்றோமே, எமது இன்னல்கள் நீங்கவில்லையே என்றால் எமது வழிபாட்டில் தியானத்தில் குறைபாடு உள்ளது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஒரே வகையான பொருள்களை கொண்டு சமையல் செய்கின்ற போதிலும் அந்த உணவில் காணப்படும் சுவை பேதங்கள் சமையல் செய்தவரின்சமையல் பாகத்தைவெளிப்படுத்துவதாக இருக்கும். சமையல் செய்பவரின் உணர்வுகள் மனோநிலை வெளிப்பாடுகள் சுவையில் வெளிப்படுகின்றன. இதனை நாளாந்த வாழ்க்கையில் கண்டுகொள்கின்றோம்.

பன்னிரண்டு ஜோதிலிங்கங்களின் ரதபவனி மற்றும் தரிசனத்தை உள்ளடக்கிய நிகழ்வு ஐந்து முக்கிய செயற்பாடுகளை உள்ளடக்கி உள்ளது. இதனை மக்கள் உரியமுறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

கண்காட்சி, ஞானயாக குண்டம், அட்டசக்தி விளக்கவுரை, நான் யார்? இளைஞர்களுக்கான விசேட நிகழ்வு, தியானம் ஆகிய ஐந்து செயற்பாடுகளும் உளத் தெளிவையும் மனோ பலத்தை தெளிந்த சிந்தையும்ஏற்படுத்துவதாக அமையும். - என்றார். (எ-11)

# கடலணை சேதம் பயணிப்போர் சிரமம்



குருநகர், ஜூலை 30

யாழ்.- பருத்தித்துறை கடற்கரை வீதியின் கடலணை திக்கம்சந்திக்குஅப்பால்பொலி கண்டி வரை சேதமடைந்த நிலையில் உள்ளது.

இந்த வீதி குறுகியதாகக் காணப்படுவதால் கனரக வாகனங்கள் இந்த வீதியூடாக பயணிக்கும்போது வாகனச் சாரதிகள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். கடலணைக்கட்டு இடையிடையே தூர்ந்து விழுந்து காணப்படுவதனால் தொழிலுக்கு கடலுக்குச் செல்லும் மீனவர்களும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

எனவே இவ்விடயத்தை கவனத்தில் எடுத்து போக்குவரத்து வழிஏற்படுத்துமாறுகோரிக்கை விடுத்துள்ளனர். (வ-51)



கல்முனை நகர லயன்ஸ் கழக புதிய நிர்வாகிகளின் பதவியேற்பு வைபவம் கல்முனை வடக்கு கூட்டுறவு நிலையக் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற போது, பிரதம விருந்தினராக கலந்து கொண்ட லயன்ஸ் கிழக்கு ஆளுநர் சபை பிரதிச் செயலர் லயன். எந்திரி என்.பி.ரஞ்சன் வரவேற்கப்படுகிறார். (ச-30)

# தமிழர்களின் பலத்தை தேர்தலில் நிரூபியுங்கள்

## கிழக்கு மாகாணசபை உறுப்பினர் வேண்டுகோள்

மட்டக்களப்பு,ஜூலை 30
தமிழ் மக்களின் இதயத்துடிப்பை இந்தியாவும் சர்வதேச சமூகமும் அறிந்து கொள்ள வடக்கு மாகாண சபைத் தேர்தல் களம் அமைத்து கொடுத்துள்ளது என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.இராஜேஸ்வரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:



வடக்கில் வாழும் சகல தமிழ் மக்களும், கூட்டமைப்புக்குப் பின்னால் அணிதிரண்டு தமிழர்களின் பலத்தை நிரூபித்துக் காட்ட வேண்டும். இது காலத்தின் தேவை.

மாகாண சபைகள் காணி, பொலிஸ் அதிகாரங்கள் இன்றி உள்ளன.

இந்த மாகாண சபைகளையும் அழித்து விட வேண்டும் என்று அமைச்சர் விமல் வீரவன்ச, ஜாதிக ஹெல உறுமய கட்சித் தலைவர்கள் கங்கனம் கட்டிக்கொண்டிருக்கின்றனர். - என்றார். (ச)

> வடக்கில் வாழும் சகல தமிழ் மக்களும், கூட்டமைப்புக் குப் பின்னால் அணிதிரண்டு தமிழர்களின் பலத்தை நிரூபித்துக் காட்ட வேண்டும்.

## மீன்களைக் கொண்டு சென்ற வியாபாரிகள் இருவர் கைது

மட்டக்களப்பு,ஜூலை 30
மட்டக்களப்பு ,வாகரை, காயான்கேணி கடற்பரப்பில் சட்டவிரோதமான முறையில் டைனமெற் வெடிப் பொருளைப் பயன்படுத்திப் பிடிக்கப்பட்ட மீன்களை விற்பனைக்காக எடுத்து வந்த விற்பனையாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வாகரை பொலிஸ் பரிசோதகர் ரி.ஜெயசீலன் தெரிவித்தார்.

ஓட்டமாவடிப் பகுதியைச் சேர்ந்த இருவர் ஓட்டோவில் 190 கிலோ கிராம்



அளவிலான மீன்களை சந்தைக்கு கொண்டு செல்லும் போதே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ச)

## விபுலானந்தரின் சிலை விஷமிகளால் உடைப்பு



அக்கரைப்பற்று,ஜூலை30
அக்கரைப்பற்று இராமகிருஷ்ணமிஷன் மகா வித்தியாலயத்தில் உள்ள பழமை வாய்ந்த விபு லானந்தரின் சிலை இனந்தெரியாதோரால் உடைத்துச் சேதமாக்கப்பட்டுள்ளது.

பாடசாலையில் இரவு நேரக் காவலாளி இல்லாத நிலையில், மின்சார விளக்குகளை எரிய வைப்பதற்காக சனிக்கிழமை இரவு 8 மணிக்கு ஆசிரியரொருவர் பாடசாலைக்குள் சென்றுள்ளார்.

சிலை உடைக்கப்பட்டிருப்பதை அவதானித்த அவர் பாடசாலையின் உப அதிபருக்கு இந்தச் சம்பவம் தொடர்பாக தெரிவித்தார்.

உப அதிபர் சிலை உடைக்கப்பட்டதை பார்வையிட்டதுடன், இது மாணவர்கள் விளையாடும் போது உடைந்து இருக்கலாம் என்ற சந்தேகம்வெளியிட்டுள்ளார். எனினும், சிலை உடைக்கப்பட்டமை குறித்து பெற் றோர்களும் இந்து அமைப்புக்களும் இது விஷமி களால் மேற்கொள்ளப்பட்ட செயல் என்று தெரிவித்தனர்.

இந்தச் சிலை உடைக்கப்பட்டது தொடர்பாக அதிகாரிகளிடம் முறைபாடு தெரிவித்தும் அவர்கள் அசமந்தப் போக்கில் உள்ளனர் என்று இந்து அமைப்புக்கள் விசனம் தெரிவித்துள்ளன. (ச)

## அறக்கொட்டிப் பூச்சியால் நெல் செய்கைக்கு பாதிப்பு

### அக்கரைப்பற்று விவசாயிகள் கவலை



அம்பாறை,ஜூலை 30
அம்பாறை,அக்கரைப்பற்றில் அறக்கொட்டிப்பூச்சி நோயின் தாக்கத்தால் சுமார் 200 ஏக்கர் வயல் நிலங்கள், பல ஏக்கர் வயல் வெளிகள் முற்றாக சேதம் அடைந்துள்ளன. இதனால் பல விவசாயிகள் அறுவடையைக் கைவிடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த நோய் எவ்வகையான பூச்சி நாசினிகளுக்கும் கட்டுப்படாமையே தாக்கம் அதிகரிக்கக் காரணம் என்று விவசாயிகள் குறிப்பிடுகின்றனர்.

அக்கரைப்பற்று கிழக்கு கமநலச்சேவை பிரிவுக்குட்பட்ட பொத்தானை, தோணிக்கல், கருபுளியம்மடு, ஆராச்சிப்புட்டி ஆகிய பிரதேசங்களிலே இதன் தாக்கம் அதிகரித்துள்ளது என்று விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர். (ச)

## விபத்தில் காயமுற்றவரை ஏற்றச் சென்ற ஓட்டோவும் விபத்தில்


திருகோணமலை,ஜூலை 30
திருகோணமலை, லிங்க நகர் சந்தியில் சனிக்கிழமை ஏற்பட்ட விபத்தில் அம்புலன்ஸ் ஓட்டோவுடன் மோதியதில் ஓட்டோ சார்தி படுகாயமடைந்து திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

பின்னர் அவர் மேலதிக சிகிச்சைக்காக கண்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இவ்வாறு படுகாயமடைந்த ஓட்டோ சாரதி திருகோணமலை நகர சபையின் வேலைப்பகுதியின் தற்காலிக தொழிலாளியான சா.தியாகராஜா என்பவராவார்.

இவர் ஏற்கனவே இடம் பெற்ற வேறொரு விபத்தில் காயமடைந்தவர்களை ஏற்றிச் செல்வதற்காக ஓட்டோவை திருப்ப எத்தனித்த போதே, வேகமாக வந்த துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான 'அம்புலன்ஸ்' மோதி விபத்துக்குள்ளானமை குறிப்பிடத்தக்கது. (ச-40)

## சைக்கிளுக்கு மின்னொளி பொருத்த அறிவுறுத்து




மட்டக்களப்பு,ஜூலை 30
மட்டக்களப்பு மாவட்டத்தில் இரவு வேளைகளில் சைக்கிள்களில் செல்வோர் தமது சைக்கிள்களில் மின்னொளி பொருத்தியிருக்க வேண்டும் என்று பொலிஸார் அறிவுறுத்தி வருகின்றனர்.

மட்டக்களப்பு, கல்லடிப் பாலம், கலுவாஞ்சிக்குடி உட்பட பல பிரதேசங்களில் இரவு வேளைகளில் சைக்கிள்களில் மின்னொளி இல்லாமல் செல்பவர்களுக்கே பொலிஸார் இவ்வாறு அறிவுறுத்தி வருகின்றனர்.

இதனையடுத்து மட்டக்களப்பு மாவட்டத்தில் சைக்கிள் வைத்திருப்போர் தங்களது சைக்கிள்களுக்கு மின்னொளி உபகரணத்தைப் பொருத்தி வருகின்றனர். (ச)

## பட்டம் விடும் போட்டி



கல்முனை,ஜூலை 30
சாய்ந்தமருது பிளையிங் ஹோர்ஸ் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் கல்முனை பிரதேசத்தில் முதல் தடவையாக பட்டம் விடும் போட்டி நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது .

இந்தப் போட்டி நோன்புப் பெருநாளை முன்னிட்டு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# குறிப்பிட்ட காலப் பகுதிகளுக்குள் முடித்துவிடுங்கள் வீதி வேலைகளை

## மாகாண அமைச்சர் உதுமாலெப்பை உத்தரவு

அக்கரைப்பற்று,ஜூலை 30
அக்கரைப்பற்று பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வீதிகள் மற்றும் வடிகால் வேலைகளை குறிப்பிடப்பட்ட காலப் பகுதிக்குள் நிறைவு செய்யுமாறு கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பை உத்தரவிட்டுள்ளார்.



ஜெய்கா திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சினாலேயே குறித்த திட்டம் அக்கரைப்பற்று பிர தேசத்தில் மேற்கொள்ளப்படுகின்றது.

அக்கரைப்பற்றில் வேலைகள் இடம்பெற்றுவரும் இடத்தை நேரில் சென்று பார்வையிட்ட பின்னரே அவர் இவ்வாறு உத்தரவிட்டுள்ளார். (ச)

## சட்டத்துறைப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு முயற்சி எடுப்பேன்

### மொஹான் பீரிஸ் உறுதி




கொழும்பு,ஜூலை 30
சட்டத்துறையில் நிலவும் பல்வேறு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு என்னால் இயன்ற முயற்சிகளை முன்னெடுக்கவுள்ளேன் என்று பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் உறுதியளித்துள்ளார்.
கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்பே.:தே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
நான் பொறுப்பேற்பதற்கு முன்னர் சட்டத் துறையில் பிரச்சினைகள் இருந்தன.
எனினும் அவற்றில் பெரும்பாலானவை தற்போது தீர்க்கப்பட்டுள்ளன.
வழக்குகளை நீண்டகாலத்துக்கு கொண்டு செல்லாமல், ஒரே வருடத்துக்குள் விசாரணை செய்து நிறைவுறுத்துவதற்கான ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன.
எனினும் இவ்வாறான திட்டத்தின் கீழ் வழக்கு விசாரணைகளில் எந்தக் குறைகளும் ஏற்படும் என்று கருத முடியாது.-என்றார். (ச)

# மதம் என்ற போர்வையில் நாட்டுக்குத் தீ வைக்கமுயற்சி

### டிலான் பெரேரா குற்றச்சாட்டு




கொழும்பு,ஜூலை 30
மதம் என்ற போர்வையில் சிலர் நாட்டுக்குத் தீ மூட்ட முயற்சித்து வருகின்றனர் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சர் டிலான் பெரேரா குற்றம் சாட்டியுள்ளார்.
பதுளை ஹலியல பிரதேச பள்ளிவாசல் ஒன்றில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
எந்தக் காலத்திலும் கான் இன வாதத்தை ஆதரிக்கப் போவதில்லை. கொள்கை அடிப்படையில் மதவாதம் கூடாது என்பதே எனது நிலைப்பாடு.
சிலர் மதங்களின் பெயரால் பொது பல சேனாக்களை அமைத்துக் கொண்டு நாட்டுக்குத் தீ மூட்ட முயற்சிக்கின்றனர்.
நாட்டில் மீண்டும் போரை உருவாக்க இந்தப் பொது பல சேனாக்கள் முயற்சிக்கின்றன.
இதற்கு எதிராக குரல் கொடுக்கும் போது பொது பல சேனா அமைப்புக்கள் என்னை பைத்தியக்காரன் என்று அடையாளப்படுத்துகின்றன.
இனவாதக் கொள்கைகளைத் தூண்டி நாட்டை பிளவுபடுத்துவதனை விடவும் பைத்தியக்காரனாக வாழ்வது மேலானாது.
இந்த பயங்கரவாத இயக்கங்களின் செயற்பாடுகளுக்கு இடமளிக்கக் கூடாது.
-என்றார். (ச)



'ரணவிரு ரியல் ஸ்டார் பாகம் III' இன் இறுதிப் போட்டியில் வெற்றி பெற்ற விமானப்படையைச் சேர்ந்த துசாரிபெரேராவுக்கு ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ பரிசு வழங்கிக் கௌரவித்தார். அருகில் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ காணப்படுகின்றார்.
உலகிலேயே முதல் தடவையாக இராணுவத்தினருக்காக ஆரம்பிக்கப்பட்ட கலைத்திறமைகளை வெளிக்கொண்டுவரும் 'ரணவிரு ரியல் ஸ்டார் பாகம் III' இன் இறுதிப் போட்டி சுகததாஸ உள்ளக அரங்கில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.


## 400 விகாரைகளுக்கு மூடுவிழா பிக்குகள் பற்றாக்குறையே காரணம்



கொழும்பு,ஜூலை 30
நாடு முழுவதிலும் சுமார் 400 பௌத்த விகாரைகள் மூடப்பட்டுள்ளன என்று பௌத்த விவகாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.
இலங்கையில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட பௌத்த விகாரைகள் காணப்படுகின்றன.
அவற்றில் 400 பௌத்த விகாரைகள், பௌத்த பிக்குகள் இன்மையினால் மூடப்பட்டுள்ளன என்று பௌத்த விவகார திணைக்களத்தின் ஆணையாளர் சந்திரப்பெரும கமகே தெரிவித்தார்.
இவ்வாறு மூடப்பட்ட பௌத்த விகாரைகளில் அதிகமானவை வடக்கு, கிழக்கில் அமைந்துள்ளவை என்று அவர் குறிப்பிட்டார்.
இந்த விகாரைகளை மீளவும் திறப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று அவர் கூறினார்.
பௌத்த பிக்குகள் கோரினால் குறித்த விகாரைகளை மீளவும் அங்குரார்ப்பணம் செய்து ஒப்படைக்க முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

பௌத்த பிக்குகள் கோரினால் குறித்த விகாரைகளை மீளவும் அங்குரார்ப்பணம் செய்து ஒப்படைக்க முடியும்

## சிறைச்சாலைகளில் சி.சி.டி.வி கமெரா



கொழுப்பு,ஜூலை 30
சிறைச்சாலைகளில் இடம்பெற்றுவரும் குற்றச்செயல்களைத் தடுக்கும் நோக்கில் சி.சி.டி.வி கமெராக்கள் பொருத்தப்படவுள்ளன.
சி.சி.டி.வி. கமெராக்களின் மூலம் சிறைச்சாலை நடவடிக்கைகளை கண்காணிக்க முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது.
கொழும்பு மகசின் மற்றும் குருவிட்ட சிறைச்சாலைகளில் முதல் கட்டமாக சி.சி.டி.வி. கமெராக்கள் பொருத்தப்படவுள்ளன.
இந்தப் பாதுகாப்புக் கமெராக்கள் மூலம் கைதிகள் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகளினால் மேற்கொள்ளப்படும் குற்றச்செயல்களைகண்டறிந்து கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது.

## பிரசார நடவடிக்கைகளுக்கு முன்னரே மோதல் ஆரம்பம்


### மாத்தளையில் பதிவு

கொழும்பு,ஜூலை 30
தேர்தல் பிரசார நடவடிக்கைகள் ஆரம்பமாவதற்கு முன்னரே மத்திய மாகாண சபைத் தேர்தலில் ஆளுந்தரப்பில் போட்டியிடும் வேட்பாளர்களின் ஆதரவாளர்களிடையே கைகலப்பு ஏற்பட்டுள்ளது.
மூன்று மாகாண சபைகளுக்கான தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், மத்திய மாகாணத்திலேயே முதலாவது தேர்தல் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.
மாத்தளை, நாவுல நகரத்தில் ஞாயிற்றுக்கிழமை இரவு நடைபெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் செய்திகளை சேகரிப்பதற்காக சென்ற ஊடகவியலாளரும் தாக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.
மத்திய மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிடுகின்ற பிரமித் தென்னகோன் பயணம் செய்த வாகனத்தை இடைமறித்த முன்னணியின் ஆதரவாளர்கள் அந்த வாகனத்தைத் தாக்கிச் சேதப்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச)

> நாவுல நகரத்தில் ஞாயிற்றுக்கிழமை இரவு நடைபெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் செய்திகளை சேகரிப்பதற்காக சென்ற ஊடகவியலாளரும் தாக்கப்பட்டுள்ளார்.

## வயது முதிர்ந்த தூக்குத் தண்டனை கைதிகளை விடுவியுங்கள்

### ஜனாதிபதி மஹிந்த ஆலோசனை



கொழும்பு,ஜூலை 30
சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள வயதான தூக்குத் தண்டனைக் கைதிகளை விடுதலை செய்வது குறித்து ஆராயுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியுள்ளார்.
தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டுள்ள வயதானவர்களை விடுதலை செய்வது தொடர்பில் ஆராயுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, சிறைச்சாலைத் திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.
அதற்கமைய அறுபது வயதுக்கு மேற்பட்ட மற்றும் 10 வருடங்களுக்கு மேல் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தூக்குத் தண்டனைக் கைதிகளை விடுதலை செய்வது குறித்து ஆராயப்படவுள்ளது.
இதேவேளை வெலிக்கடைச் சிறைச்சாலையில் 50 இற்கும் மேற்பட்ட வயது முதிர்ந்த தூக்குத் தண்டனை கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## வாதுவையில் இறைச்சிக் கடைக்கு தீ

கொழும்பு,ஜூலை 30
வாதுவை பிரதேசத்திலுள்ள மாட்டிறைச்சிக் கடையொன்றுக்கு ஞாயிற்றுக்கிழமை இரவு தீ வைக்கப்பட்டுள்ளது.
சந்தைக் கட்டடத் தொகுதியிலுள்ள குறித்த இறைச்சிக் கடைக்கு இனந்தெரியாத குழுவினராலேயே தீ மூட்டப்பட்டுள்ளது.
இந்தச் சம்பவம் தொடர்



பான மேலதிக விசாரணைகளை வாதுவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## மாகாணக் காணி சுவீகரிப்புகளில் ஊடாடும் கோயக்கம் மாயக்கம்!

கிழக்கு மாகாணத்தில் கல்லோயா அபிவிருத்தித் திட்டமும், அதனை அடுத்து கிழக்கிலங்கை காகிதத் தொழிற்சாலையும் ஆரம்பிக்கப்பட்ட ஐம்பதுகளிலேயே தொடங்கப்பட்ட திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம், காலத்துக்குக் காலம் பதவி வகிக்கும் அரசுகளால் கனகச்சிதமாகத் தொடரப்பட்டு வருகிறது.

போர் முடிவுற்ற பின்னர், காதோடு காதாகப் பேசுவது போன்று, பெரும்பான்மை இன மக்களின் திட்டமிட்ட குடியேற்றங்கள் வடக்கிலும், கிழக்கிலும் பெருவீச்சில் நடைபெறுகின்றன. ஆகப் பிந்தி மட்டக்களப்பு மாவட்டத்தில், பட்டிப்பளைப் பிரதேசத்தில் உள்ள கெவிலியாமடுக் கிராமத்தில் திட்டமிட்ட குடியேற்றம் வெகுவேகமாக நடைபெறுவதாக மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா வெளிப்படுத்தி உள்ளார்.

எழுபதுகளில் வேளாண்மை மற்றும் சேனைப் பயிர்ச் செய்கை மேற்கொண்டு தமிழ் மக்கள் கெவிலியாமடுவில் குடியமர்ந்தனர். போர் காரணமாகப் பல தடவைகள் அங்கிருந்து இடம்பெயர நேரிட்டது. மீண்டும், தமது சொந்த இடத்தில் மீளக்குடியமர்ந்துள்ளனர்.

ஆனால் இப்போது என்னவெனில் அம்பாறை மாவட்டத்தில் இருந்து பெரும்பான்மை இன மக்கள் அரசினால் கெவிலியாமடுவில் திட்டமிட்ட முறையில் குடியேற்றப்படுகின்றனர் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த ஏற்பாடு, நடவடிக்கை முற்றிலும் சட்டவிரோதமானது என்பதனையும், அத்துமீறி குடியேறியவர்களுக்குக் கல் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும், அதன் பின்னணியில் மதகுரு ஒருவரே உள்ளதாகவும், நாடாளுமன்ற உறுப்பினர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம். பெரும்பான்மை இனத்தவர்கள் நீதிமன்ற உத்தரவையும் மீறி, சிறுபான்மையினரைத் தமது கிள்ளுக்கீரைகளாகக் கருதிச் செயற்படுவதற்கான அனுமதிப்பத்திரம் (Licence) வழங்கப்பட்டுள்ளதா என்ற நிலையைத் தோற்றுவித்துள்ளது, கெவிலியாமடு விவகாரம்.

அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தில், மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள காணி அதிகாரங்களை நீக்க வேண்டும் என்ற அரசு சார்ந்த அரசியல் கட்சிகள் மற்றும் அவற்றுக்கு உஷார் ஏற்றும் தரப்புகள், அதன்பால் சன்னதம் ஆடுவோரின் உள்ளார்ந்த நோக்கத்தின் முக்கிய பகுதி கெவிலியாமடு விடயத்தில் பிரதிபலிக்கிறது அல்லவா?

மாகாணம் ஒன்றில் உள்ள அரச காணி எதுவும் மத்திய அரசுக்குத் தேவைப்படும் பட்சத்தில், மாகாண சபையுடன் கலந்தாலோசித்து அதனைப் பெற்றுக் கொள்வதற்கு இப்போதுள்ள காணிச் சட்டம் (33 பி) ஆம் பிரிவு (Article) வகை செய்கிறது.

அரச காணி ஒன்றை, பிரசை ஒருவருக்கு அல்லது நிறுவனம் ஒன்றுக்கு வழங்குவதாயின், மாகாண சபையின் வழிப்படுத்தலுடன் ஜனாதிபதி அதனை வழங்கலாம், வழங்க இயலும் என்பது அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தில் உள்ள ஏற்பாடு.

அவ்வாறிருக்க, மட்டக்களப்பு மாவட்டம் கெவிலியாமடுக் கிராமத்தில், தமிழ் மக்கள் நீண்ட காலமாக-சுமார் 40 வருடங்களாக-வாழும் பிரதேசத்தில், பெரும்பான்மை இனத்தவருக்கான அத்துமீறிய குடியேற்றங்கள் நடைபெற்றுள்ளன.

கிழக்கில் இதுபோன்று, அதிகாரம் உள்ளவர்களின் ஆசியுடன் இன்னும் எத்தனை அத்துமீறல் குடியேற்றங்கள் நடத்தப்பட்டிருக்குமோ என்பதனை யார் அறிவார்.....?

ஆட்சி விதிகள் என்று தானும் பொருட்படுத்தாது, அவற்றை மீறும் இத்தகைய போக்கு மறைமுகமாகத் தொடர்வதற்கு இடம் வைக்காமல், தமிழ் மக்களின் பிரதேசங்களிலுள்ள காணிகளை இலகுவில் கபளீகரம் செய்வதற்கு அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தம் தடைக்கல்லாக இல்லாமல், அதனை அப்பால் தூக்கி வைப்பதற்கான இடிமுழக்கமே இப்போது அரச ஆதரவு சார்ந்தோரால் கைகளில் ஏந்தப்படுகிறது. வேறு எவ்வகையில், என்னவென்று சொல்வது....? எல்லாம் ஒரே ''கோயக்கம் மாயக்கம்'' அன்றி வேறல்ல....!

# ஒரு கல்லில் இரு மாங்காய்

வடமாகாண சபைத் தேர்தல் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனால் மேற்கொள்ளப்பட்ட 'சதுரங்க காய்நகர்த்தலானது', கூட்டமைப்பின் தலைவர் பிரச்சினையைத் தீர்ப்பதில் மிகத் திறமைசாலி. என்பதை மட்டுமல்லாது, அரசியல் அரங்கில் 'ஒரே கல்லில் இரண்டு பறவைகளை வீழ்த்தக் கூடிய' 'குறிதவறாத சூட்டாளன்' என்பதையும் நிரூபணமாக்கியுள்ளது.

இவ்வாறு கொழும்பை தளமாகக் கொண்ட 'சிலோன் ருடே' ஊடகத்தில் மனெக்ஷா எழுதியுள்ள கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

நடைபெறவுள்ள வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளராக கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஐந்து கட்சிகளையும் ஒன்றிணைத்து ஏகமனதாக உயர் நீதிமன்றின் முன்னாள் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரனைத் தேர்ந்தெடுத்ததன் மூலம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரான இரா சம்பந்தன் தனது அரசியல் முதிர்ச்சியையும் தனது தலைமைத்துவ ஆளுமையையும் உறுதிப்படுத்தியுள்ளார்.

தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் முன்னை நாள் தலைவர் மறைந்த அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் உந்துதலின் பேரில் 1977இல் அரசியலுக்குள் நுழைந்து கொண்ட சம்பந்தன் அதன்பின்னர், தமிழ் அரசியல் வரலாற்றில் குறிப்பாக திருகோணமலை மாவட்டத்தில் மிகவும் பெயர் போன, தோற்கடிக்கப்பட முடியாத அரசியற் தலைவராக நிலைத்து நிற்கிறார்.

ஐ.தே.கட்சியின் தலைமையிலான அரசின் ஆட்சிக்காலத்தில் சம்பந்தனையும் தனது கட்சிக்கு வருமாறும் தான் அமைச்சுப் பதவி ஒன்றை சம்பந்தனுக்கு வழங்குவேன் எனவும் அப்போதைய ஜனாதிபதி ஜெயவர்த்தனா உறுதியளித்த போது சம்பந்தன் அதனை மறுத்து, தனது கட்சிக்கு விசுவாசமாக நடந்து கொண்டார்.

இந்திய இலங்கை ஒப்பந்தம் மற்றும் 13வது திருத்தச் சட்டம் போன்றவற்றுக்கு தமது ஆதரவை வழங்கிய தமிழ் அரசியல்வாதிகளை இலக்கு வைத்து தமிழீழ விடுதலைப் புலிகள் செயற்பட்ட காலப்பகுதியில் கூட சம்பந்தன் தனது கட்சியின் கொள்கைக்கு விசுவாசமாக நடந்து கொண்டார்.

இதன்பின்னர், 2002இல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட போது இக்கூட்டமைப்பின் தலைமைப் பதவி சம்பந்தனுக்கு வழங்கப்பட்டது. இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் சமாதான சூழ்நிலை நிலவிய காலத்தில் நோர்வே அனுசரணையாளராகச் செயற்பட்ட போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, புலிகள் அமைப்புடன் மிக நெருங்கிய தொடர்பைப் பேணியது.

கடந்த ஆண்டின் மேதினக் கூட்டத்தின் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் சில முரண்பாடுகள் எழுந்தன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியற் கட்சியாகப் பதிவு செய்யுமாறு கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகள் கோரிக்கை விடுத்தமை குறிப்பிடத்தக்க ஒரு முரண்பாடாக காணப்படுகிறது. கூட்டமைப்பை அரசியற் கட்சியாகப் பதிவு செய்வதன் மூலம் சம்பந்தனின் இலங்கைத் தமிழரசுக் கட்சியானது கூட்டமைப்பைக் கட்டுப்படுத்துவது தடுக்கப்படும் என்பதை நோக்காகக் கொண்டே இவ்வாறான கோரிக்கை முன்வைக்கப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ள பெரும்பான்மை நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலங்கை தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

சில வாரங்களின் முன்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் எழுந்த முரண்பாடுகளைத் தீர்த்துக் கொள்வதற்காக மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க ஆயர் வணக்கத்திற்குரிய இராயப்பு ஜோசப் அடிகளார் கூட்டம் ஒன்றை ஒழுங்குபடுத்தியிருந்தார். கூட்டமைப்புக்குள் எழுந்துள்ள கருத்து வேறுபாடுகளை நீக்கி அனைவரும் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும் என்பதை வலியுறுத்துவதே இதன் முக்கிய நோக்காகும். இதில் தமிழ் அரசியல்வாதிகள் மட்டுமல்லாது யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

> இலங்கை இராணுவத்தின் முழுமையான கட்டுப்பாட்டின் கீழுள்ள தமது நிலங்களைப் பெற்றுக் கொள்வதற்காக 5000 இற்கும் மேற்பட்ட உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் நீதிமன்றை அணுகியுள்ளனர்.

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் கூட்டமைப்பின் சார்பாக முதலமைச்சர் பதவிக்கு யாரைத் தெரிவு செய்வது என்பது தொடர்பில் இழுபறி நிலை நிலவியது. மாவை சேனாதிராசா மற்றும் ஓய்வுபெற்ற முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் ஆகிய இருவரில் யாரை முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்துவது என்பது தொடர்பில் கருத்து வேறுபாடுகள் தோன்றின. இந்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை ஏகமனதாக சி.வி.விக்னேஸ்வரனை முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்துவதென தீர்மானித்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இத்தீர்மானத்தை அடுத்து கடந்த 20 ஆம் திகதி வவுனியாவில் இலங்கை தமிழரசுக் கட்சியின் சிறப்புக் கூட்டம் ஒன்று இடம்பெற்றது. இதில் மாவை சேனாதிராசா தானாகவே வேட்பாளராகப் போட்டியிடுவதிலிருந்து விலகிக் கொள்வதாகவும் கூறியதுடன். விக்னேஸ்வரன் போட்டியிட வேண்டும் எனத் தாம் விரும்புவதாகவும் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

தற்போதைய அரசியற் சூழ்நிலை மற்றும் வடக்கு மாகாண சபையில் முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிடுபவர் மிகச் சிறந்த சட்ட அறிவைப் பெற்றவராக இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு நிலவுவதையும் காரணம் காட்டி முதலமைச்சர் வேட்பாளராக முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரன் நிறுத்தப்படுவதே மிகச் சிறந்த தெரிவு எனவும் இலங்கை தமிழரசுக் கட்சியின் கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சட்டப் பின்னணி கொண்ட ஒருவர் முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்தப்படுவதன் மூலம் தற்போது வடக்கில் நிலவும் நிலப் பிரச்சினை மற்றும் இராணுவப் பிரசன்னம் போன்றவற்றைத் தீர்த்துக் கொள்வதற்கான ஏதுநிலை தோன்றும் என்பதைத் தமிழரசுக் கட்சி ஏகமனதாக ஏற்றுக் கொண்டது.


இலங்கை இராணுவத்தின் முழுமையான கட்டுப்பாட்டின் கீழுள்ள தமது நிலங்களைப் பெற்றுக் கொள்வதற்காக 5000 இற்கும் மேற்பட்ட உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் நீதிமன்றை அணுகியுள்ளனர். யாழ்ப்பாணத்தில் நிலங்களைப் பறிகொடுத்த மக்களின் சார்பாக கடந்த வாரம் யாழ் மறைமாவட்ட ஆயர் வணக்கத்திற்குரிய தோமஸ் சௌந்தரநாயகம் அடிகளார் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அரசியலில் நுழைபவர்கள் அரசியலுக்குப் பொருத்தமற்றவர்களாகவும் போதிய கல்வி மற்றும் அரசியல் பின்னணிகளைக் கொண்டவர்களாகவும் காணப்படவில்லை எனவும் யாழ்ப்பாண மற்றும் ஏனைய வடக்கு மாகாணப் பிரதேசங்களைச் சேர்ந்த ஒரு தரப்பினர் கருதுகின்றனர்.

இலங்கையில் தொடர்ந்து இடம்பெற்ற முப்பதாண்டு கால போரின் விளைவாக இவ்வாறான அரசியல் மற்றும் கல்விப் பின்னணிகளைக் கொண்டவர்கள் அரசியல் வேட்பாளர்களாக இல்லாதிருந்தால் பிரச்சினைகளுக்கு சரியான தீர்வை முன்வைக்க முடியாது என இவர்கள் கருதுகின்றனர்.

தமது உறவுகள் மற்றும் சொத்துக்களை இழந்து தவிக்கும் வடக்கு மாகாண மக்களின் கௌரவம், மதிப்பு மற்றும் ஒற்றுமை போன்றவை, தமிழர்களின் அரசியல் மற்றும் மனிதாபிமான தேவைகளை முக்கியத்துவப்படுத்துவதோடு மட்டுமல்லாது பிராந்தியத்தில் தொடரப்பட்ட போரின் வடுக்களை ஆற்றுவதற்கான ஒரு பயனுள்ள உறுதியான அரசியற் செயற்றிட்டங்களை மேற்கொள்ளக் கூடிய இயலுமையுள்ள முதலமைச்சர் ஒருவரின் ஊடாக பிரதிபலிக்கப்பட வேண்டும்.

இந்த வகையில் நடைபெறவுள்ள வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளராக ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனை தெரிவு செய்வதற்காக சம்பந்தனால் மேற்கொள்ளப்பட்ட 'சதுரங்க காய்நகர்த்தலானது', கூட்டமைப்பின் தலைவர் பிரச்சினையைத் தீர்ப்பதில் மிகச் சிறந்தவர் என்பதை மட்டுமல்லாது, அரசியல் அரங்கில் 'ஒரு கல்லில் இரண்டு பறவைகளை வீழ்த்தக் கூடிய' 'குறிதவறாத சூட்டாளன்' என்பதையும் நிரூபணமாக்கியுள்ளது. ★



# கலங்காதே மனமே....

அருவி

நீங்கள் நடந்து சென்றுகொண்டிருக்கிறீர்கள். கால் கொஞ்சம் வலிக்கிறது. வலியை உணர்கிறீர்கள். ஆயினும் அதைப் பொருட்படுத்தாமல் உங்கள் வேலையைப் பார்த்துக் கொண்டே இருக்கிறீர்கள். வலியால் நீங்கள் சற்று அவதிப்படுவதைத் தெரிந்துகொண்ட குடும்பத்தினர் ,மருத்துவரைப் பார்த்து ஆலோசனை பெறும்படி கூறுகிறார்கள். மருத்துவரை இன்று பார்க்கிறேன்.. நாளை பார்க்கிறேன் என்று கூறி, நீங்கள் நாள்களை கடத்தினால், உங்களுக்குள்ளேயே அந்த வலியை 'ஏற்றுக்கொள்ளும்தன்மை' உருவாகிவிடும். வலியோடு வாழ்க்கையைக் கழிக்கப் பழகிவிடுவீர்கள். யோசித்துப் பாருங்கள். ஏற்றுக்கொள்ளும் தன்மையை, ஜீரணித்துக்கொள்ளும் தன்மையை வாழ்க்கையில் பல விடயங்களில் நீங்கள் கடைபிடித்துக்கொண்டிருப்பீர்கள். வேலை, நட்பு, உறவு என்று பல நிலைகளில் இது தொடரும். முதலில், 'வாழ்க்கை என்றால் இப்படித்தான் இருக்கும்' என்று பிரச்சினைகளை சகித்துக்கொள்ளும் மனது. பின்பு, அக்கம் பக்கம் பார்த்துவிட்டு, 'நமக்கு மட்டுந்தான் இப்படி என்று நினைத்தோம். வீட்டுக்கு வீடு வாசப்படி மாதிரி எல்லோரும் இப்படிப்பட்ட பிரச்சினைகளோடுதான் அலைந்து கொண்டிருக்கிறார்கள்' என்று தன்னைத்தானே சமாதானப்படுத்தி, அதை சகஜமாக எடுத்துக் கொள்ளவும் செய்யும்.

இந்த 'ஏற்றுக்கொள்ளும் தன்மையும்', 'தன்னைத்தானே சமாதானப் படுத்திக் கொள்ளும் தன்மையும்' சில நேரங்களில் ஏற்றுக்கொள்ளக்கூடியவை. பல நேரங்களில் ஏற்றுக்கொள்ள இயலாதவை.

உங்கள் வீட்டின் முன் பகுதியில் கழிவு நீர் குழாயில் சிறிதளவு அடைப்பு ஏற்பட்டு விடும்போதும், உங்கள் உடலில் நோய் ஏற்பட்டிருக்கும்போதும், ஏற்றுக் கொள்ளும்தன்மையுடன் நீங்கள் ஜீரணித்துக் கொண்டால் அது நல்லதல்ல. கழிவு நீர் பிரச்சினையை சிறிதாக இருக்கும்போதே சரிசெய்து கொள்ளாவிட்டால் அது சுகாதாரத்திற்கே கெடுதலாகும். கவனிக்காமலே விடப்படும் நோய், பின்னாளில் தீராத நோய்க்குக் கூட காரணமாகிவிடும். அதனால் சின்னச் சின்ன சிக்கல்களுக்கும் தீர்வு கண்டுவிடுவதே மகிழ்ச்சியைப் பெற நல்ல வழி.

இப்போதெல்லாம் பத்துப் பேர் முதல் ஆயிரம் பேர் வரை கூடும் கருத்தரங்கு, பயிற்சி வகுப்புகளில் 'உங்களில் எத்தனை பேர் தடுமாற்றம் அடைகிறீர்கள்? என்று கேட்டால் தயங்கித் தயங்கி முதலில் ஒருசிலர் கையைத் தூக்குவார்கள். அவரைப் பார்த்து இவர், இவரைப் பார்த்து அவர் என்று பின்பு ஒட்டுமொத்தமாக அனைவரும் கையை உயர்த்திவிடுவார்கள். அப்போது ஒவ்வொருவரும் 'அப்பாடா இந்தக் கூட்டத்தில் இருக்கும் அனைவருமே என்னைப் போல் தான்' என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டுக் கொள்வார்கள். இது ஒரு ஆரோக்கியமற்ற நிலை. எல்லோருக்கும் இரண்டு கைகள் என்பது இயற்கை. அதுபோல், எல்லோருக்கும் பதற்றமும் இயற்கை என்றால் ஏற்றுக் கொள்ள முடியாதல்லவா!

பெரும்பாலானவர்கள் தமக்கு பதற்றம் ஏற்படும்போது, அதைத் தீர்க்கும் நிரந்தர வழியைத் தேடாமல், தற்காலிகமாக மனதை அதில் இருந்து திசைதிருப்பி, சிறிது நேரம் மனதை அமைதிப்படுத்தும் வழியைத்தான் தேடுகிறார்கள்.

மனிதனுக்கு மனம்தான் அத்திவாரம். எல்லா விடயங்களும் இங்குதான் ஆரம்பமாகிறது. மனிதனின் உடல் மரம் போன்றது. அதன் ஆணி வேர் மனம். மரத்தின் மேலே தெரியும் தண்டு, கிளை, இலை, பூ, காய், கனி எல்லாவற்றுக்கும் முக்கியத்துவம் கொடுத்து நன்றாக பார்த்துக்கொள்கிறோம். ஆனால் ஆணிவேர் மோசமாகிக்கொண்டே இருந்தால் மரத்தின் ஏதேனும் ஒரு பகுதி இலையோ, பூவோ, காயோ, கனியோ மோசமாகிக்கொண்டேதான் இருக்கும். நாம் பல நேரங்களில் இலை இலையாகப்பார்த்து, காய்காயாகப் பார்த்து, பழம் பழமாகப்பார்த்து தண்ணீர் ஊற்றிக் கொண்டிருக்கிறோம். வேரைக் கவனிக்காவிட்டால் ஒரு நாள் மரமே பட்டுப்போய்விடும்.

இன்று மனித மனம் பலவீனமாக இருந்துகொண்டிருக்கிறது. அதைப் பலப்படுத்தும் முயற்சிகளில் நாம் இறங்காமல், கூடுதலான வேலைகளையும், எதிர்பார்ப்புகளையும் அதற்குக் கொடுத்து மேன்மேலும் அதை பலவீனமாக்கிக் கொண்டிருக்கிறோம்.

நமது உடல் பலவீனமாவது தெரிந்ததும், உடனே வேலைகளை ஒதுக்கி வைத்துவிட்டு ஓய்வு, மருந்து என்று சிந்திக்கிறோம். ஆனால் மனதைக் கவனிப்பதும் இல்லை. அதற்கு ஓய்வு கொடுப்பதும் இல்லை. அதனால் ஆர்வமற்ற நிலையில் வேலைகளைச் செய்யவேண்டியதாகி விடுகிறது. வேலையை ஆர்வத்தோடு அனுபவித்துச் செய்தால், அதிலே மகிழ்ச்சி கிடைக்கும். ஆனால் ஆர்வமின்றி, கடனே என்று வேலையை செய்வதால், வேறு வழியில் மகிழ்ச்சியைத் தேடவேண்டிய கட்டாயம் மனிதர்களுக்கு ஏற்பட்டுவிட்டது.

சமநிலையைக் கையாளுவதில் நமக்கு பக்குவம் குறைவு. வேலையாக இருந்தாலும், பொழுதுபோக்காக இருந்தாலும், நட்பாக இருந்தாலும், உறவாக இருந்தாலும் ஒன்று, அளவுக்கு மீறி ஆர்வம் காட்டுகிறோம். முக்கியத்துவம் கொடுக்கிறோம். நெருங்குகிறோம். இல்லாவிட்டால் அத்தனையையும் ஒதுக்கித்தள்ளிவிட்டு அதில் இருந்து முழுமையாக விலகி ஓடி விடுகிறோம். இதில் எல்லை எது என்பது நமக்குத் தெரிவதில்லை.

மனதைச் சரி செய்தால்தான் நம்மால் எல்லையை உணர முடியும். எல்லையை உணர்ந்தால் தான் எல்லை வரை மகிழ்ச்சியை அனுபவிக்கவும், எல்லை மீறாமல் இருக்கவும் முடியும். மனதைச் சரிசெய்ய அதன் மீது கவனம் செலுத்த வேண்டும்.

'நீங்கள் யாரை எல்லாம் கவனிக்கிறீர்கள்?'- என்று உங்களிடம் கேட்டால், குடும்பம், அலுவலகம்.. என்று பலவற்றை அடுக்குவீர்கள். 'நான் என்னையும் கவனித்துக் கொள்கிறேன்' என்றும் சொல்வீர்கள். 'நான்' என்று நீங்கள் உங்கள் உடலைத்தான் சொல்வீர்கள். மனதைச் சொல்வதில்லை.

மனதே சரியில்லை என்ற வார்த்தை இப்போது மலிந்துபோய்விட்டது. கோவிலுக்குச் செல்கிறார்கள். அந்த நேரத்தில் மனதுக்கு ஒரு அமைதி கிடைக்கிறது. இரண்டு மணி நேரம் சொற்பொழிவு கேட்கிறார்கள். நிறைய நல்ல விஷயங்களை கேட்கும் அந்த நேரத்தில், மனது நன்றாக இருக்கிறது அற்புதமாக இருக்கிறது என்று கைதட்டுகிறோம். அங்கிருந்து வெளியேறிய அடுத்த நிமிடமே மீண்டும் பழைய குழப்பங்கள், பிரச்சினைகள், சச்சரவுகள். மீண்டும் போவோம்.. வருவோம்.. ஆனால் அங்கு வார்த்தைகளில் கிடைத்ததை, அவர்களால் வாழ்க்கையில் பயன்படுத்த முடிவதில்லை. ஏன் என்றால் வாழ்க்கை, குழப்பம் நிறைந்த மனதின் கட்டுப்பாட்டில் இருக்கிறது.

இந்த உலகில் எல்லோரும் மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களா? ஆம் என்று சொன்னால், அது நல்ல ஆசை! ஆனால்..

- உங்களிடம் உணவு இருந்தால் தான் அதை நீங்கள் அடுத்தவர்களுக்கு கொடுக்க முடியும்.
- உங்களிடம் பணம் இருந்தால் தான் அடுத்தவர்களுக்கும் கொடுக்க முடியும்.

அதுபோல் உங்களிடம் மகிழ்ச்சி இருந்தால்தான், நீங்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்தால் மட்டுமே நீங்கள் விரும்புகிறவர்களுக்கும் மகிழ்ச்சியைக் கொடுக்க முடியும். அதனால் இந்த உலகம் மகிழ்ச்சியடைய வேண்டும் என்று விரும்பும் நீங்கள் முதலில் மகிழ்ச்சியாக வாழ கற்றுக் கொள்ள வேண்டும்.

**மனிதனுக்கு மனம்தான் அத்திவாரம். எல்லா விடயங்களும் இங்குதான் ஆரம்பமாகிறது. மனிதனின் உடல் மரம் போன்றது. அதன் ஆணி வேர் மனம். மரத்தின் மேலே தெரியும் தண்டு, கிளை, இலை, பூ, காய், கனி எல்லாவற்றுக்கும் முக்கியத்துவம் கொடுத்து நன்றாக பார்த்துக் கொள்கிறோம்.**

# நம்மை நாமே மாற்றிக் கொள்வோம்

இன்று நம்மைச் சுற்றி நடக்கும் பல விடயங்கள், நாம் எதிர்பார்த்தபடி இல்லை. நம்மை சுற்றியிருக்கும் நட்பு, உறவு, சூழ்நிலை, சமுதாயம் போன்ற அனைத்துமே சரியில்லை என்றே வைத்துக்கொள்வோம். அதற்காக நாம் மகிழ்ச்சியுடன் இருக்கக் கூடாது என்று நமக்கு நாமே தண்டனை கொடுத்துக்கொண்டு கவலையுடனும், பயத்துடனும், வேதனையுடனும் அமைதியற்ற சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருப்பது சரியா?

இதே மனிதர்களுடன், இந்த சூழ்நிலையில், இதே சமுதாயத்தில் தான் நாம் வாழ்ந்தாகவேண்டும். இந்த வாழ்க்கையை வேதனையுடன் கழிப்பவர்கள் அதற்கு விதி என்று பெயரிட்டிருக்கிறார்கள். சிலரோ, 'மதியால் விதியை வெல்லலாம்' என்றும் கூறுகிறார்கள். விதியை மதியால் வெல்வதற்கான சரியான அர்த்தம் என்னவென்று உங்களுக்கு தெரியுமா?

நமது எண்ணங்கள் மூலம், நம் உணர்வுகளை மாற்றலாம். எண்ணங்களை செம்மையாக்கி, உணர்வுகளை மேம்படுத்தி நாம் செய்யும் செயல்கள் அறிவார்ந்தவையாக இருக்கும். அதைத்தான் மதி என்று கூறுகிறோம். அந்த மதி மூலம், விதி என்ற வேதனையை, துயரத்தை எம்மால் போக்க முடியும். சமுதாயம், சூழ்நிலை, மனிதர்கள் எல்லாம் மாறினால் நான் நிம்மதியாக இருப்பேன் என்ற எண்ணம் நமக்கு இருப்பது சரியல்ல. நம்மால் நம்மைத்தான் மாற்ற முடியும். மற்றவர்களை மாற்ற முடியாது. அதனால் மற்றவர்கள் மாறினால் நான் நிம்மதியாக இருப்பேன் என்று கூறக்கூடாது. நாம்தான் எமது எண்ணங்களை மாற்றி நம்மை நிம்மதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

**சமுதாயம், சூழ்நிலை, மனிதர்கள் எல்லாம் மாறினால் நான் நிம்மதியாக இருப்பேன் என்ற எண்ணம் நமக்கு இருப்பது சரியல்ல. நம்மால் நம்மைத்தான் மாற்ற முடியும். மற்றவர்களை மாற்ற முடியாது. நாம்தான் எமது எண்ணங் களை மாற்றி நம்மை நிம்மதிப் படுத்திக் கொள்ள வேண்டும்.**



# இலங்கையிலுள்ள பட்டியலிடப்படாத வர்த்தக நாமங்களின் தரப்படுத்தலில் Johnson & Johnson இற்கு முதலாமிடம்

ஒரு நூற்றாண்டு நிரம்பிய சர்வதேச வரலாற்றுடன் இலங்கையில் 40 ஆண்டுகளுக்கும் மேலாக தனது உற்பத்திகளை விநியோகித்து வருகின்ற Johnson & Johnson நிறுவனம் Brand Finance இனால் தொகுக்கப்பட்டு, Media Services இனால் வெளியிடப்பட்டுள்ள 2013 ஆம் ஆண்டிற்கான Brands Annual பதிப்பில் இலங்கையிலுள்ள பட்டியலிடப்படாத வர்த்தகநாமங்களுள் முதலிடத்தில் இடம்பெற்றுள்ளது. Clean & Clear, Neutrogena, Listerine, Stayfree மற்றும் மிருதும், மென்மையும் நிரம்பிய ஒரேயொரு குழந்தைப் பராமரிப்பு உற்பத்தி என மருத்துவ ரீதியாக நிரூபக்கப்பட்டுள்ள Johnson's Baby உள்ளிட்ட Johnson & Johnson இன் ஒவ்வொரு வர்த்தகநாமமும் இந்த கௌரவத்திற்கு உரித்துடையவை.

ஆயிரக்கணக்கான வர்த்தகநாமங்களின் வியாபாரம், வர்த்தகநாம நடவடிக்கைகள் மற்றும் பல்லாயிரம் கோடி டொலர்கள் பெறுமதியான புலப்படாச் சொத்துக்களின் பெறுமதி மதிப்பீடுகளை மேற்கொண்டுள்ள உலகில் முன்னிலை வகிக்கும் வர்த்தகநாம மதிப்பீட்டு ஆலோசனை வழங்கல் நிறுவனமான Brand Finance PLC இனால் நடாத்தப்பட்ட ஒரு நுகர்வோர் கருத்துக்கணிப்பின் அடிப்படையிலேயே இந்த தரப்படுத்தல்கள் தீர்மானிக்கப்பட்டிருந்தன.


இலங்கையில் Johnson's Baby தனது முற்றுமுழுதான உள்நாட்டு எண்ணக்கருவிலான விளம்பர பிரசாரத்தை 2011 ஆம் ஆண்டில் ஆரம்பித்து இன்று வரை தொடர்ந்தும் இந்த முன்னெடுப்பின் அடிப்படையில் தனது வர்த்தக நாமத்தைக் கட்டியெழுப்பி வருகின்றது. வர்த்தகநாமத்தின் ஆக்கத்திறனும், புத்தாக்கமும் 2012 ஆம் ஆண்டிற்கான SLIM வர்த்தகநாம மேன்மை விருதுகள் நிகழ்வில் சிறப்பான இனங்காணல் அங்கீகாரத்தைப் பெற்று மிகச் சிறந்த சர்வதேச வர்த்தகநாமப் பரிவில் Johnson's Baby இற்கு வெண்கல விருது கிடைக்கப்பெற்றிருந்தது. அதே ஆண்டில் உள்நாட்டில் அது முன்னெடுத்திருந்த ''தாய்மையின் பூரிப்பைக் கொண்டாடுவோம்'' என்ற விளம்பர பிரசாரத்துக்கான Effies நிகழ்விலும் வெண்கல விருதை வென்று மகுடம் சூட்டியிருந்தது.

குறிப்பாக சமூக ஊடகத் துறையிலும் Johnson's Baby தனது தீவிரமான செயற்பாடுகளைக் கொண்டிருந்தது. அதனது Facebook பக்கத்திற்கு 54,000 விசிறிகள் உள்ளதுடன், இலங்கையில் குழந்தைப் பராமரிப்பு உற்பத்தி ஒன்று கொண்டுள்ள அதிகூடிய விசிறிகள் பக்கமாகவும் இது உள்ளது.

Happy Snappy விளம்பரப் பிரசாரத்தின் சமூக ஊடக செயற்பாடுகளுக்கு 2012 இல் சர்வதேச Facebook ஸ்டூடியோ விருதுகளுக்கான இறுதிப்பட்டியலில் இடம்பெற்றிருந்ததுடன் கிடைக்கப்பெற்ற 1000 நுழைவுகளில் இலங்கையை பரதிநிதித்துவப்படுத்திய பெருமையையும் சம்பாதித்திருந்தது.




இலங்கை வங்கி தனது சிறிய நடுத்தரக் கைத்தொழில் முயற்சியாண்மைத் திட்டத்தின் கீழ் திராட்சைப் பழச் செய்கைக்காக 1.75 மில்லியன் ரூபாவைக் கடனாக வழங்கியது. இந்த நிகழ்வில் வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் ரீ.எம்.ரீ தென்னக்கோன் பயனாளியிடம் காசோலையைக் கையளிக்கிறார். அருகில் சுன்னாகம் கிளை முகாமையாளர் பொன். பாலகுமார் உள்ளார்.




டயலொக் நிறுவனத்தின் 'லோட் ஒவ் த ரீலோட்' தெரிவில் ஒரு லட்சம் ரூபா பணப் பரிசில் வென்ற உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த ஏ.ஜெயக்குமார் என்பவருக்கு நிறுவன பிராந்திய இணைப்பாளர் என்.நகுலேஸ் பரிசு வழங்குகிறார். (த-4-21)




யாழ். ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள வர்த்தக வங்கிக் கிளையில் அண்மையில் 'அருனலு' புலமைப் பரிசில் மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் வைபவம் இடம்பெற்றது. இதன்போது இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட அருட்சகோதரி ஜீவந்தி மற்றும் வங்கி உத்தியோகத்தர்களுடன் பரிசில் பெற்ற மாணவர்கள். (த-20-21)

# பிரதேச அபிவிருத்தி வங்கி யாழில் சிறப்பான சேவையில்



யாழ்ப்பாணம், ஜூலை30

கடந்த வருடம் யாழ்ப்பாணத்தில் தனது வங்கிச் சேவையை ஆரம்பித்துள்ள பிரதேச அபிவிருத்தி வங்கி இவற்றை 11 ஆயிரத்தும் மேற்பட்ட வாடிக்கையாளர்களை தன்னுடன் இணைத்துக் கொண்டுள்ளதுடன் வாடிக்கையாளர்களின் தேவைக்கேற்ப அனைத்துச் சேவைகளையும் வழங்கி வருகிறது என்று பிரதேச அபிவிருத்தி வங்கியின் யாழ்ப்பாணக் கிளை முகாமையாளர் எஸ்.சிவலோகன் தெரிவித்தார்.

பிரதேச அபிவிருத்தி வங்கியின் 28 ஆவது வருட நிறைவை முன்னிட்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 'இதுறும் வாசனா' சேமிப்புக் கணக்கின் அறிமுக நிகழ்வு அண்மையில் யாழ்ப்பாணக் கிளையில் நடைபெ[illegible]

இந்த நிகழ்வில் தலைமையுரை நிகழ்த்தும் போ[illegible] தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கும் போது:

வாடிக்கையாளர்களின் நன்மைகருதி பிரதேச அபிவிருத்தி வங்கி அடகுசேவை, வெளிநாட்டுப் பணப்பரிமாற்றம், சேமிப்பு, கடன உதவிகள் என்பவற்றை மேற்கொண்டு வருகிறது. யாழ்ப்பாணத்தில் கடந்த வருடம் வங்கிச் சேவையை ஆரம்பித்த பிரதேச அபிவிருத்தி வங்கி தற்போது 2 ஆவது வருட ஆரம்ப சேவையை வழங்கி வருகிறது.

இந்தச் சேவையில் யாழ்ப்பாணக் கிளையில் மட்டும் 11 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்கள் இணைந்துள்ளனர்.

குறிப்பாக பிரதேச மட்டத்தில் பெண்களுக்கான சுயதொழில் கடன்களை அதிகம் வழங்கிவருகிறது. வாடிக்கையாளர்களின் தேவைக்கேற்ப வசதிகளை செய்து வரும் பிரதேச அபிவிருத்தி வங்கியால் சலுகைத் திட்டமாக இந்தச் சேமிப்புக் கணக்கு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது என்றார்.

இந்த நிகழ்வின்போது 'இதுறும் வாசனா' கணக்கை ஆரம்பித்த வாடிக்கையாளர்களுக்கு வைப்புப் புத்தகமும் நினைவுப் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து வங்கியின் செயற்றிட்டங்கள் தொடர்பாகவும் புதிய சேமிப்புக் கணக்குத் தொடர்பான விளக்கவுரையை யாழ்.கிளையின் உதவி முகாமையாளர் எஸ்.சுரேஸ் நிகழ்த்தினார். (த-14)

# புதுக்குடியிருப்பு - முல்லைத்தீவு வீதி புனரமைப்பு கைவிடப்பட்டுள்ளதா?

## கேள்வி எழுப்புகின்றனர் மக்கள்

புதுக்குடியிருப்பு, ஜூலை 30
புதுக்குடியிருப்பு - முல்லைத்தீவு பிரதான வீதியின் புனரமைப்பு வேலைகள் ஆரம்பக் கட்டத்திலேயே கைவிடப்பட்டுள்ளதால் போக்குவரத்தில் ஈடுபடுவோர் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

பரந்தன் - புதுக்குடியிருப்புச் சந்தி வரையான வீதிப் புனரமைப்புப் பணிகள் நிறைவடைந்ததை அடுத்து முல்லைத்தீவுக்கான பிரதான வீதியின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. கிரவல் மண்ணால் முன்னர் செப்பனிடப்பட்டிருந்த இந்த வீதி கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் கனரக வாகனங்களின் உதவியுடன் கிளறிவிடப்பட்டது.

இந்த நிலையில் கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக இந்த வீதி கிளறப்பட்ட நிலையில் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது. புனரமைப்புப் பணிகளும் இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளன.

இதனால் இந்த வீதியூடாகப் போக்குவரத்தை மேற்கொள்ளும் பாடசாலை மாணவர்கள், அரச திணைக்களங்களின் ஊழியர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை பருவ மழை ஆரம்பிக்குமானால் இந்த வீதியூடாகப் பயணத்தை மேற்கொள்வது மிகக் கடினமாக இருக்கும் எனவும் அதற்கு முன்னர் இந்த வீதியைச் செப்பனிடுவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதேவேளை முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு வீதியில் - முல்லைத்தீவிலிருந்து - வட்டுவாகல் வரையான வீதிப் புனரமைப்புப் பணிகள் நிறைவடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.
(க-400)

# அக்கராயன் பகுதியில் திருட்டுக்கள் அதிகரிப்பு

அக்கராயன், ஜூலை 30
அக்கராயன் பிரதேசத்தில் களவுகள் அதிகரித்துள்ளன. அக்கராயன் அணைக்கட்டு வீதியில் உள்ள துரைலிங்கம் என்பவரின் வீட்டுக்குள் நுழைந்த சுமார் ஏழு திருடர்களைக் கொண்ட கும்பல் அங்கிருந்தவர்களைப் பயமுறுத்தி விட்டு 97 ஆயிரம் ரூபா பணத்தையும், கைத்தொலைபேசியையும் எடுத்துச்சென்றுள்ளது.

மேலும் அக்கராயன் வைரவ கோயிலடியில் உள்ள வீடொன்றில் சைக்கிளும், இன்னொரு வீட்டில் தேங்காய்களும் களவாடப்பட்டுள்ளன.

இதேவேளை அம்பலப்பெருமாள் சந்தியிலிருந்து துணுக்காய் செல்லும் வீதியில் உள்ள கெங்காதரன் குடியிருப்புப் பகுதியில் உள்ள குடிதண்ணீர் பெறும் குழாய்க்கிணறு ஒன்றை அங்கு சென்ற இருவர் உடைத்ததுடன் குப்பை, மணல் என்பவற்றைக் கிணற்றுக்குள் போட்டுள்ளனர். இந்தச் சம்பவங்கள் தொடர்பாக அக்கராயன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (க-18)



## பன்றிகளால் தாக்கப்பட்ட நபர் காட்டுக்குள் இழுத்துச் செல்லப்பட்டார்

### பூநகரியில் அச்சமூட்டும் திகில் சம்பவம்

அக்கராயன், ஜூலை 30
மோட்டார் சைக்கிள் பயணி ஒருவரை 30 க்கும் மேற்பட்ட பன்றிகள் தாக்கி இழுத்துச் சென்ற சம்பவம் பூநகரியில் இடம்பெற்றுள்ளது.

பூநகரியிலிருந்து முக்கொம்பனுக்கு மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த 27 வயதான யோசப் டக்ளஸ் என்பவரை பூநகரி 10ஆம் கட்டைக்கும் சின்னப்பல்லவராயன்கட்டு சந்திக்கும் இடையிலான காட்டுப் பகுதியில் வைத்துத் தாக்கிய பன்றிகள் பின்னர் மோட்டார் சைக்கிளுடன் அதில் பயணித்தவரையும் காட்டுக்குள் இழுத்துச் சென்றன. உடல் முழுவதும் படுகாயமடைந்த நிலையில் பன்றிகளால் தாக்கப்பட்டவர் எழுப்பிய அவலக் குரல் அந்தப் பகுதியில் கால்நடையாகச் சென்ற இராணுவத்தினருக்குக் கேட்டது. உடனடியாக அங்கு இராணுவத்தினர் துப்பாக்கி வேட்டுக்களை எழுப்பினர். இதனால் பன்றிகள் பயந்து ஓடின. இதன் பின்னர் பன்றிகளால் தாக்கப்பட்ட நபர் இராணுவத்தினரால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

பன்றிகளின் இந்த அட்டகாசம் குறித்து பிரதேச வாசிகள் அச்சம் வெளியிட்டுள்ளனர். (க-18)

# பேராற்றைக் கடக்கும் இடங்களில் பாலங்கள்

## அமைக்கப்பட வேண்டும் என்கின்றனர் பிரதேச மக்கள்



முல்லைத்தீவு, ஜூலை 30
ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் பேராற்றைக் கடக்கும் இரு இடங்களில் புதிய பாலங்கள் அமைக்கப்படவேண்டுமென அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

புதுக்குடியிருப்பு வீதியிலிருந்து கனகரத்தினபுரம், மன்னாகண்டல், முத்துஐயன்கட்டு ஆகிய பகுதிகளுக்குச் செல்வதாயின் மிகவும் குறுகிய பாதையூடாகவே செல்ல வேண்டும்.

இந்தப் பாதையைக் குறுக்கறுத்து பேராறு ஓடுவது வழக்கமாகும். தற்போது இந்த ஆற்றுக்குக் குறுக்கே அமைக்கப்பட்டுள்ள பாலம் மிகவும் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றது. இதனால் மழை காலங்களில் இந்தப் பாதையூடாகப் பயணிக்க முடியாத நிலை காணப்படுகின்றது. இதனால் இதனைப் பயன்படுத்துபவர்கள் சுமார் 15 கிலோமீற்றர் தூரம் சுற்றிவர வேண்டிய அவல நிலை நிலவி வருகின்றது.

எனவே இங்கு புதியதொரு பாலம் அமைக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது.

மேலும் புதுக்குடியிருப்பு வீதியிலிருந்து கெருடமடு ஊடாக கூழாமுறிப்பைச் சென்றடைந்து முல்லைத்தீவுக்குச் செல்லும் மிகவும் குறுகலான பாதையின் குறுக்கேயும் பேராறு ஓடுவதால் அவ்விடத்திலும் பாலமொன்றை அமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இந்தப் பாலம் அமைக்கப்படுமாயின் முல்லைத்தீவு, முள்ளியவளை ஆகிய பகுதிகளுக்கு வசந்தபுரம், கெருடமடு, மன்னாகண்டல், பேராறு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் மழை காலங்களில் இலகுவாகப் பயணிக்க முடியும்.

எனவே உரிய அதிகாரிகள் இதில் கவனம் செலுத்த வேண்டுமென இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-500)

## ஒன்றியத்தின் கிளை

வவுனியா, ஜூலை 30
போர் இடர்களினால் இறந்தவர்களதும் காணாமற்போனவர்களதும் உறவினர்களால் தெற்கில் அமைக்கப்பட்ட ஒன்றியத்தின் கிளையொன்று வவுனியாவில் திறந்து வைக்கப்பட்டது.

சுமார் 40க்கும் மேற்பட்ட காணாமற்போனோரின் உறவினர்கள் மேற்படி திறப்பு விழாவில் கலந்து கொண்டனர்.

பனாகொடை, ஹோமகம ஆகிய பகுதிகளில் மேற்படி ஒன்றியத்தின் தலைமைச் செயலகம் உள்ளது.

வடபகுதியில் முதல் முதலாக இதன் கிளை நிலையம் வவுனியாவில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. (க-402)

## மதுபோதையால் வீதி விபத்துக்கள்

வவுனியா நகரப் பகுதியில் மதுபோதையில் வாகனங்களைச் செலுத்துவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் அதிகளவு வீதி விபத்துக்கள் இடம்பெறுவதாக அறிய முடிகின்றது.

சில வாகனச் சாரதிகள் அளவுக்கு அதிகமாகக் குடித்துவிட்டுத் தங்களை மறந்த நிலையில் வேகமாக வாகனங்களைச் செலுத்துவதால் கட்டுப்பாட்டை இழக்கும் நிலையில் விபத்துக்கள் ஏற்படுகின்றன.

அண்மையில் பூந்தோட்டம் பகுதியில் மதுபோதையுடன் ஓட்டோவைச் செலுத்தியதால் விபத்து ஏற்பட்டு பலர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

எனவே, பொலிஸார் மதுபோதையில் வாகனங்களை ஓட்டிச் செல்வோரின் விடயத்தில் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-421)

## கலைஞர்கள் மூவருக்கு விருது

வவுனியா, ஜூலை 30
வவுனியாவைச் சேர்ந்த மூன்று கலைஞர்கள் ஆளுநர் விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளதாகத் தெரிய வருகின்றது.

சிற்பக் கலைஞர் பொ.கனகரத்தினம், கவிஞர் நவபால கோபால், மடுக்கந்த தலதா விகாரையின் விகாராதிபதி முத்தெட்டுகமே ஸ்ரீ ஆனந்த தேரர் ஆகியோருக்கு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முல்லைத்தீவில் இடம்பெறும் வடமாகாண கலை இலக்கியப் பெருவிழாவில் வைத்து இந்த ஆளுநர் விருதுகள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிய வருகின்றது.
(க-402)

# விலங்குகளால் அல்லற்படும் கெங்காதரன் குடியிருப்பு

அக்கராயன், ஜூலை 30
அக்கராயன் கெங்காதரன் குடியிருப்பில் கரைச்சி பிரதேச சபையால் அடையாளப்படுத்தப்பட்ட காணியில் வாழும் விலங்குகளால் தாம் சிரமங்களை எதிர்கொள்வதாக இங்கு வசிக்கும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

சுமார் 150க்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்ற கெங்காதரன் குடியிருப்பில் உள்ள 5 ஏக்கர் வரையான காடு வளர்ந்துள்ள காணியை கரைச்சிப் பிரதேச சபை தமக்குரியதென அடையாளமிட்டு 3 ஆண்டுகள் கடந்து விட்டன. ஆனால் தற்போது இந்தக் காணி காடு வளர்ந்து காணப்படுகின்றது.

இந்த நிலையில் இந்தக் காணியைத் துப்புரவு செய்து காட்டு விலங்குகளிடமிருந்து தமக்குப் பாதுகாப்பு வழங்குமாறு இங்கு மீளக்குடியமர்ந்த மக்கள் நீண்ட காலமாக குரல் எழுப்பி வருகின்றனர்.

அதிகாரிகளால் நடத்தப்பட்ட கூட்டங்களிலும் இந்தக் காட்டை அழியுங்கள் என்று கிராம அபிவிருத்திச் சங்கம் வேண்டுகோள் விடுத்திருந்தது. ஆனால் இதுவரை பயன் எதுவும் ஏற்படவில்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
(க-18)

# தொடர்கிறது யானைகளின் அட்டகாசம்; தடுத்து நிறுத்துமாறு மக்கள் அவலக்குரல்

கிளிநொச்சி, ஜூலை 30
விசுவமடு தொட்டியடிப் பகுதியில் தொடர்ச்சியாகக் காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்துக் காணப்படுவதுடன், பெருமளவு பயன்தரு மரங்களும் அழிக்கப்பட்டு வருகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட விசுவமடு மேற்கு தொட்டியடிப் பகுதியிலும் சிரட்டைக் குளத்தினை அண்மித்த பகுதிகளிலும் காட்டு யானைகள் இரவு வேளைகளில் குடிமனைகளுக்குள் புகுந்து அழிவுகளை ஏற்படுத்தி வருகின்றன.

குறிப்பாக கடந்த 24 ஆம் திகதி குடிமனைக்குள் புகுந்த யானைகள் வாழைத்தோட்டம், தென்னை மரங்கள் என்பவற்றை அழித்துள்ளன.


குறித்த பகுதிகளில் முன்னர் காட்டு யானைகளால் தொல்லைகள் இருக்கவில்லையெனவும் கடந்த ஒரு மாத காலமாகவே இவற்றின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். இந்த யானைகளில் சில தென்பகுதியில் வளர்ப்பு யானைகளாகப் பயன்படுத்தப்பட்டுப் பின்னர் இங்குகொண்டு வந்துவிடப்பட்டிருக்கலாம் என்றும், யானையொன்று சங்கிலியால் பிணைக்கப்பட்ட நிலையில் காணப்படுவதாகவும் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த யானைகளின் அட்டகாசத்தைக் கட்டுப்படுத்துவதற்கு வனவளப் பாதுகாப்புத் திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-6)



## பொதுநலவாய மாநாட்டையொட்டி மாணவர் இடையே போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 30
கொழும்பில் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய உச்சி மாநாட்டையொட்டி மாணவர்களுக்கு இடையிலான போட்டிகளை நடத்த கல்வி அமைச்சால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
மாணவர்களிடையே பேச்சு, கட்டுரை, சித்திரம் ஆகிய போட்டிகள் வலய, மாவட்ட, மாகாண ரீதியில் நடத்தப்பட்டு முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும் எனவும் தேசிய ரீதியில் நடத்தப்படும் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு பொதுநலவாய அமைப்பின் செயலாளரால் சான்றிதழ்களும் பணப் பரிசில்களும் வழங்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.
மாணவர்களிடையே மூன்று மொழிகளிலும் போட்டிகள் நடத்த ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு மாகாண கல்வி அமைச்சுக்களுக்கு கல்வி அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
போட்டிகள் தொடர்பான விவரங்களும் அறிவுறுத்தல்களும் அந்தந்த வலயக் கல்விப் பணிமனைகள் ஊடாக பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)



காரைநகர் அரசடிக்காடு கதிர்வேலாயுத சுவாமி கோயிலில் ஆடி பௌர்ணமி தினத்தன்று இடம்பெற்ற தீ மிதிப்பு உற்சவத்தின்போது அடியார்கள் தீ மிதித்து தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவதைக் காணலாம். (ஒ-250)

## விபத்தில் காயமடைந்த இருவர் வைத்தியசாலையில் சேர்ப்பு

தென்மராட்சி, [illegible] 30
வீதியின் பா[illegible] கடவையில் நடந்து சென்ற மா[illegible]களுக்காக மோட்டார் சைக்கிளை சடுதியாக நிறுத்த முயன்ற மோட்டார் சைக்கிளோட்டி தூக்கி வீசப்பட்டு தலையில் காயமடைந்தார்.
இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் பகல் சாவகச்சேரி பெரிய அரசடியில் இடம்பெற்றது. மந்துவில் கிழக்கைச் சேர்ந்த அமிர்தலிங்கம் ஜெகன் (வயது-36) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.
இதேவேளை கடந்த வெள்ளிக்கிழமை இரவு வீதி விபத்தில் காயமடைந்த மிருசுவில் உசனைச் சேர்ந்த பேரின்பநாயகம் கவியரசன் (வயது-17) என்பவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். (எ-9)

## வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கோண்டாவில் நூலகத்தால் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 30
ஒக்டோபர் மாத வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கோண்டாவில் பொது நூலகத்தால் பாடசாலை மாணவர்கள், அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பொது மக்களுக்கான விசேட போட்டிகள் நடத்தப்படவுள்ளன.
கீழ்ப் பிரிவு, மத்திய பிரிவு, மேல் பிரிவு, அதிமேற்பிரிவு, திறந்த போட்டி ஆகிய மட்டங்களில் நடத்தப்படும் இந்தப் போட்டிகளில் சிறுகதை, கட்டுரை துண்டுப்பிரசுரம், சுவரொட்டி, கையேட்டுப் பிரதியாக்கம், வாசிப்புப் போட்டி, பண்ணிசைப் போட்டி, இசை, நடனம், விடுகதை, முன்பள்ளி மாணவர்களுக்கான போட்டி, சனசமூக நிலையங்களுக்கு இடையிலான போட்டி என்பன நடத்தப்படவுள்ளன.
இதனைவிட நல்லூர் பிரதேச சபை உத்தியோகத்தர், ஊழியர்களுக்கான பொது அறிவு, குறுக்கெழுத்துப் போட்டி, புதிர்ப் போட்டி ஆகிய போட்டிகளும் நடத்தப்படவுள்ளன.
அத்துடன் 'திண்மக் கழிவு முகாமைத்துவம்', 'மக்களை நோக்கிய நூலகம்', 'வெற்றிப்படி', 'மனிதனால் நூல் நூலால் மனிதன்' 'நூலகம் செல்வது சாலவும் நன்று', 'டெங்குநோயை ஒழிப்போம்', 'சிறுவர்களைப் பாதுகாப்போம்', 'பெண்களுக்கான வீட்டு வன்முறைகளை விரட்டுவோம்', 'முதியோரைப் போற்றுவோம்', 'மாற்றுவலுவுள்ளோருடன் கைகோர்ப்போம்', 'பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பாவனையை தடுப்போம்' ஆகிய தலைப்புகளில் துண்டுப்பிரசுரம் மற்றும் சுவரொட்டி போட்டிகள் நடத்தப்படவுள்ளன.
ஆர்வமுடையவர்கள் கோண்டாவில் பொது நூலகத்துடன் தொடர்பு கொண்டு மேலதிக விவரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். (வ-14)

## கால்நடைகளால் அழிவுகளை எதிர்கொள்ளும் வன்னேரிக்குளம்

அக்கராயன், ஜூலை 30
கிளிநொச்சி வன்னேரிக்குளம் விவசாயிகளும் கால்நடைகளால் பயிர் அழிவுகளை எதிர்கொண்டு வருகின்றனர்.
இந்தப் பிரதேசத் தில் சிறுபோக நெற் செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டுள்ள நிலையில் கட்டாக்காலிகளாக அலைந்து திரியும் கால்நடைகள் பயிர்களை அழித்து வருகின்றன.
சிறுபோக நெற்செய்கைக் கூட்டம் நடைபெறும் போது கால்நடைகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக முக்கியமாக வலியுறுத்தப்பட்டது.
ஆனால்- வன்னேரிக்குளத்தில் கால்நடைகள் கட்டுப்பாடின்றி அலைந்து திரிகின்றன. இதனால் சில விவசாயிகள் வேலிகளை அமைக்கும் பணியில் இறங்கியுள்ளனர்.
கடந்தகால போகத்தின் போது நெற்செய்கையில் நட்டங்களை எதிர்கொண்ட விவசாயிகள் சிறுபோக நெற்செய்கையை நம்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## தருவது வித்தியா — இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** தெளிவான முடிவுகள் எடுக்க முடியாமல் குழம்புவீர்கள். அடுத்தவர்கள் மனம் காயப்படும்படி பேசாதீர்கள். செய்நன்றி மறந்த மனிதர்களை நினைத்து அவ்வப்போது வருந்துவீர்கள். உத்தியோகத்தில் மற்றவர்களை விமர்சிக்காதீர்கள்.



**இடபம்:** திட்டமிட்ட காரியங்கள் தாமதமாக முடியும். உறவினர், நண்பர்களுடன் மனத்தாங்கல் வரும். வெளி வட்டாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும். யாரையும் எடுத்தெறிந்து பேசாதீர்கள். உத்தியோ கத்தில் சக ஊழியர்களால் சங்கடங்கள் வரும்.



**மிதுனம்:** தவறு செய்பவர்களைத் தட்டிக் கேட்பீர்கள். உங்களுடைய எதிர்பார்ப்புகளுக்கு தகுந்தாற் போல் ஒருவர் அறிமுகமாவார். உத்தியோகத்தில் புதிய அதிகாரி உங்களை மதிப்பார்.



**கடகம்:** தன்னம்பிக்கையுடன் பொதுக்காரியங்களில் ஈடுபடுவீர்கள். நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். வேற்றுமதத்தவர்கள் அறிமுகமாவார்கள். உத்தியோகத்தில் தைரியமாகச் சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.



**சிங்கம்:** பழைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பீர்கள். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். புதிய சிந்தனைகள் பிறக்கும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள்.



**கன்னி:** முக்கிய அலுவல்களை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே செய்து முடிப்பது நல்லது. கோபத்தால் இழப்புகள் ஏற்படும். உங்கள் மீது சிலர் வீண் பழி சுமத்த முயற்சிப்பார்கள். உத்தி யோகத்தில் சக ஊழியர்களின் சொந்த விடயங்களில் தலையிட வேண்டாம்.

**நாளை**
ஆடி-15 புதன்கிழமை 31.07.2013
திதி: நவமி பி.ப. 05.29 வரை
நட்சத்திரம்: பரணி காலை 07.00 வரை
சுபநேரம்: 04.33 - 06.03 வரை
இராகுகாலம்: 12.03 - 01.33 வரை



**துலாம்:** உங்களிடம் மறைந்து கிடந்த திறமைகள் வெளிப்படும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் உங்களின் ஆலோசனை ஏற்கப்படும்.



**விருச்சிகம்:** பிரபலங்களின் நட்பு கிடைக்கும். வெளியூர் பயணங்களால் புத்துணர்ச்சி பெறுவீர்கள். நாடி வந்தவர்களுக்கு உதவி செய்வீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களைச் சொல்லித் தருவார்.



**தனுசு:** நினைத்தது நிறைவேறும். புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும். பணவரவு கிடைக்கும். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள்.



**மகரம்:** எதிர்ப்புகள் அடங்கும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். மாணவர்களுக்கு நினைவுத் திறன் அதிகரிக்கும். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.



**கும்பம்:** பூர்வீக சொத்து பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும். தைரியம் அதிகரிக்கும். உறவுகளின் சுய ரூபத்தை அறிந்து கொள்வீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள்.



**மீனம்:** எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். உறவினர்களால் ஏற்பட்ட பிரச்சினைக்கு தீர்வு காண்பீர்கள். உத்தியோகத்தில் புதிய வாய்ப்புகள் தேடி வரும்.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | 9 | | 6 | 5 | |
| 7 | | | | | | 3 | | 1 |
| 2 | | 3 | 1 | | 5 | | | |
| 4 | 2 | | | 3 | 9 | | 8 | |
| 9 | | | 4 | | 7 | | | 6 |
| | 7 | | 2 | 1 | | | 3 | 4 |
| | | | 9 | | 1 | 5 | | 7 |
| 8 | | 9 | | | | | | 3 |
| | 5 | 7 | | 2 | | | | 9 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 5 | 7 | 3 | 8 | 1 | 6 | 4 | 9 |
| 4 | 6 | 8 | 7 | 2 | 9 | 3 | 5 | 1 |
| 3 | 1 | 9 | 6 | 4 | 5 | 2 | 7 | 8 |
| 1 | 4 | 3 | 2 | 5 | 7 | 9 | 8 | 6 |
| 9 | 7 | 6 | 4 | 3 | 8 | 5 | 1 | 2 |
| 8 | 2 | 5 | 9 | 1 | 6 | 7 | 3 | 2 |
| 6 | 9 | 1 | 8 | 7 | 3 | 4 | 2 | 5 |
| 7 | 8 | 4 | 5 | 9 | 2 | 1 | 6 | 3 |
| 5 | 3 | 2 | 1 | 6 | 4 | 8 | 9 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப் பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## கல்வயல் விளைவேலி புல்லாந்திக்குளம் ஆழமாக்கப்பட்டது சிரமதானம் மூலம்

### நகரசபை தொழிலாளரின் ஒத்தாசையுடன்

தென்மராட்சி, ஜூலை 30

சாவகச்சேரி கல்வயல் விளைவேலி புல்லாந்திக்குளம் சாவகச்சேரி நகரசபைத் தலைவரின் பணிப்பின் பேரில் வழங்கப்பட்ட டிராக்டர் மற்றும் தொழிலாளர்களின் ஒத்தாசையுடன் பிரதேச விவசாயிகளால் சிரமதானம் மூலம் ஆழமாக்கப்பட்டது.

குளம் தூர்வார்ந்து நீரின்றி போனதால் விவசாயப் பயிர்கள் வாடுவதாக அந்தப் பகுதி கமக்கார அமைப்பினர் விடுத்த வேண்டுகோளை அடுத்து நகரசபைத் தலைவர் சபையின் டிராக்டரையும் தொழிலாளர்களையும் கொடுத்து உதவியிருந்தார். அங்கு தொழிலாளர்களுடன் விவசாயிகளும் இணைந்து குளத்தை வெட்டி தூர்வாரி ஆழமாக்கினர்.

குளம் தூர்வார்ந்து நீரின்றி காணப்படுவதால் குளத்து நீரை நம்பி விவசாயப் பயிர்களைப் பயிரிட்டவர்கள் மட்டுமன்றி கால்நடைகளும் நீரின்றி தவிப்பதாக அண்மையில் உதயனில் செய்தி வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-9)

## தமிழர்கள் வாழும் வடக்கு, கிழக்கு இராணுவ மயமாக்கப்பட்டுள்ளது

### மகா.தமிழ் பிரபாகரன் தெரிவிப்பு

சென்னை, ஜூலை 30

தமிழர்கள் வாழும் இன்றைய வடக்கு கிழக்கு என்பது முழுக்க முழுக்க இராணுவ மயமாக்கப்பட்டுள்ளது. உணவுக்கான தேவைகளும் வாழ்வாதாரத்துக்கான தேவைகளும் கூட பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு கிடைக்க பெறாத நிலை தான் அங்கு உள்ளது என்று ஜூனியர் விகடன் பத்திரிகையின் ஊடகவியலாளர் மகா.தமிழ் பிரபாகரன் தெரிவித்தார்.

தமிழ்நாடு ஜூனியர் விகடன் பத்திரிகையில் 'புலித்தடம் தேடி' என்ற தலைப்பில் மகா தமிழ் பிரபாகரன் எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து 'புலித்தடம் தேடி ....' 'ரத்த ஈழத்தில் 25 நாள்கள்' என்ற புத்தக வெளியீட்டு விழா அணு உலைக்கு எதிராகப் போராட்டம் நடக்கும் இடிந்த கரையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே நூலாசிரியர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

புலிகள் வருவார்கள், ஐந்தாம் கட்டப் போர் வெடிக்கும் என்று உணர்ச்சி வசமாக பேசிக் கொண்டிருப்பது தமிழ் மக்களை மேலும் அழிப்பதற்கான வழியாகத்தான் இருக்குமே ஒழிய அது செயற்பாட்டுக்கான வழியாக, இப்போதைய களநிலைமைக்கு பொருத்தமானதாக இல்லை.

இந்த நிலைமையில் 30 ஆண்டு கால போரை சந்தித்த மக்களுக்கு இனியொரு போரைச் சந்திக்கும் அளவுக்கு மனதில் தெம்பு இல்லை. ஆனால் தமிழ் மக்கள் தங்களுக்கான சுதந்திரம் வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறார்கள்.

இனிவரும் ஈழப் போராட்டமாக இருக்கட்டும், தமிழர் நாடு சார்ந்த கூடங்குளம் போராட்டமாகட்டும், மக்கள் தான் நிர்ணயிக்கிற சக்தி. மக்கள் தான் வரலாற்றைப் படைக்கிறார்கள். மக்களுக்கான விடிவு, மக்கள் போராட்டம் வழியே கொண்டு வரப்பட வேண்டும்.- என்றார். (எ)

# மூத்த ஊடகவியலாளர்கள் அறுவருக்கு இன்று விருதுகள்

கொழும்பு, ஜூலை 30

இலங்கைப் பத்திரிகை ஆசிரியர் சங்கமும், இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும் இணைந்து நடத்தும் "விருதுகளின் இரவு" நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை கொழும்பு மவுண்ட்லவெனியா ஹோட்டலில் இடம்பெற உள்ளது.

ஆண்டுதோறும் நடைபெறும் இந்த நிகழ்வில் உதயனின் சகோதரப் பத்திரிகையான 'சுடர் ஒளி' யின் பிரதம ஆசிரியர் நாகலிங்கம் பத்மசீலன் உள்ளிட்ட ஆறுபேர் வாழ்நாள் சாதனையாளர் விருது பெறுகின்றனர்.


மூத்த பத்திரிகையாளர்களான சேனாதீர பியசேன, டன்ஸ்டன் விக்கிரமரத்ன, திருமதி கரோல் ரோசினி அலோசியஸ், கமிலஸ் பெரேரா, எட்மன்ட் ரணசிங்கா ஆகியோரும் இன்றைய நிகழ்வில் கௌரவிக்கப்பட உள்ளனர்.

**நாகலிங்கம் பத்மசீலன்**



சுடர் ஒளியின் பிரதம ஆசிரியராகப் பணியாற்றும் இவர் ஊடகத்துறையில் 46 வருடங்களைப் பூர்த்தி செய்துள்ளார். தினபதி, சிந்தாமணி, தந்தி, உதயன் ஆகிய பத்திரிகைகளில் உதவி ஆசிரியர், பிரதம உதவி ஆசிரியராகவும், செய்தி ஆசிரியராகவும் பணியாற்றினார்.

**சேனாதீர பியசேன**



கம்யூனிஸ்ட் பத்திரிகையின் 'ஜனசக்தி'யில் 1942 ஆம் ஆண்டு இணைந்து கொண்ட இவர் சண்டே ஒப்சேவர், இலங்கை ஒலி பரப்புக் கூட்டுத்தாபனம், இந்திய வானொலி - இலங்கை சிங்களச் சேவைப் பிரிவு, தவச குழுமம், லேக் ஹவுஸ் நிறுவனம் ஆகியவற்றில் பல்வேறு பதவி நிலைகளை வகித்தவர்.

**டன்ஸ்டன் விக்கிரமரத்ன**



1962 ஆம் ஆண்டு 'தவச' பத்திரிகையில் செய்தியாளராக இணைந்த இவர் சண்டே ரைம்ஸ் பத்திரிகையில் 1990 இலிருந்து 2009 ஆம் ஆண்டுவரை பணியாற்றினார்.

சிறந்த புகைப்படப் பிடிப்பாளரான இவர் 'சண்டே ரைம்ஸில்' புகைப்படத் துறைப் பிரிவின் ஆசிரியராகவும், ஆசிரிய ஆலோசகராகவும் சேவையாற்றியுள்ளார்.

**திருமதி கரோல் ரோசினி அலோசியஸ்**



1969 ஆம் ஆண்டு 'சண்டே ஒப்சேவர்' பத்திரிகையில் இணைந்து ஊடகப் பணியை ஆரம்பித்தார்.

இவர் 'சண்டே ஒப்சேவரில்' சிறுவர் பகுதி, சுகாதார, மருத்துவ விடயங்கள் தொடர்பான பக்கங்கள் மற்றும் மகளிர் பக்கம் ஆகியவற்றிற்கும் பொறுப்பாக இருந்துள்ளார்.

'நேஷன்' பத்திரிகையிலும் பணியாற்றிய இவர் 'ஸொன்டா ஊடக' விருதையும் பெற்றவர் ஆவார்.

**கமிலஸ் பெரேரா**



இவர் புகழ் பெற்ற கேலிச் சித்திர ஓவியராவார். கடந்த ஐந்து தசாப்தங்களாக இலங்கை - சமூக, கலாசார விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கேலிச் சித்திரங்களை வரைந்து வருகின்றார்.

**எட்மன்ட் ரணசிங்க**



தனது 21 ஆவது வயதில் லேக்ஹவுஸ் பத்திரிகையில் இணைந்து ஊடகவியலாளராகப் பணியைத் தொடங்கினார்.

'தினமின' பத்திரிகையின் உதவி ஆசிரியராகவும், ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார். அதன் பின்னர் 'திவயின' பத்திரிகையின் ஆசிரியராகவும் பணியாற்றினார்.

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 30

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு யாழ். சின்மயா மிஷனால் நடத்தப்படவுள்ள கண்காட்சி தொடர்பான கருத்தரங்கு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக் கழகத்தில் பிரம்மச்சாரி ஜாக்கிரத் சைத்தன்ய தலைமையில் நடைபெறவுள்ளது. (ந-14)

## இரு வேறு விபத்தில் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 30

சைக்கிளில் பயணித்த நபரை பின்புறமாக வந்த பிக்கப் வாகனம் மோதி விபத்துக்குள்ளாகியதில் சைக் கிளில் பயணித்த நபர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் கடந்த 26 ஆம் திகதி தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்துக்குச் சமீபமாக கே.கே.எஸ் வீதியில் இடம்பெற்றது.

சைக்கிளில் பயணித்த நபர் வீதியின் குறுக்கே திரும்ப முற்பட்டபோது பின்னால் வந்த பிக்கப் ரக வாகனம் மோதியதில் விபத்துக்குள்ளாகி காயமடைந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

(வ-14-36)

★ ★ ★

கிளிநொச்சி ஏ-9 வீதி 155 ஆம் கட்டைப் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் 1.15 மணியளவில் கிளிநொச்சி ஏ-9 வீதியின் 155 ஆம் கட்டைப் பகுதியை அண்மித்த பகுதியில் கிளிநொச்சி வைத்தியசாலையில் இருந்து இரணைமடுச் சந்தி நோக்கி பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிளுடன் எதிரே வந்த டிப்பர் வாகனம் மோதி விபத்துக்குள்ளானது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவத்தில் கிளிநொச்சி தொண்டமான் நகர் நகரைச் சேர்ந்த சின்னையா பஞ்சாட்சரம் (வயது 63), மற்றும் அதே இடத்தைச் சேர்ந்த கந்தையா மதியாபரணம் (வயது-48) ஆகிய இருவருமே படுகாயமடைந்துள் ளனர். குறித்த இருவரும் பயணித்த மோட் டார் சைக்கிள் நசியுண்டு சேதமடைந்துள்ளது. (ந-6)

க.பொ.த(உ/த) கலை,வர்த்தக பிரிவு மாணவர்களுக்கான அறிவித்தல்

Dialog நிறுவனம் க.பொ.த.(உ/த) கலை வர்த்தகப் பிரிவுகளுக்கு நியூ சயன்ஸ் ஹோலில் ஒழுங்கமைத்த கருத்தமர்வு, 'பரீட்சைக்கு முன் ஒருவார காலப்பகுதிக்குள் கருத்தமர்வுகளை நடத்தக் கூடாது' எனும் அறிவுறுத்தலுக்கமைய இக் கருத்தமர்வு இரத்துச் செய்யப்படுகின்றது. இது தொடர்பாக மாணவர்களுக்கும் விரிவுரையாளர்களுக்கும் எற்பட்ட மனச் சங்கடங்களுக்கு வருந்துகின்றோம்.

நிர்வாகம்.

(30047)(3.5.6)

மேசன் வேலையாள்கள் தேவை

யாழ். நகரை அண்மித்த வேலைத் தளத்துக்கு நாளொன்றுக்கு 970/= சம்பளத்துடன் மேசன் தேவை.

தொடர்பு: 077 814 6975

(30046)(3.6.11)

காணி விற்பனைக்கு

ஏழாலை, களவா ஓடை 6 பரப்புக் காணி அதிலுள்ள வீடு, பயிர்கள் விற்பனைக்கு உள்ளது.

தொடர்பு: 077 303 6850

(37492)(3.6.11)

'ரபோட்டா' நெல் வெட்டும் மிசின் விற்பனைக்கு

நெல் வெட்டும் இயந்திரம் விற்பனைக்கு உள்ளது.

தொடர்பு-071 351 7797 (37491)(3.6.6)

சரவணை சின்னமடு மாதா யாத்திரைத் தல பெருவிழாவிற்கு கடைகளைப் பெறுபவர்கள்

சரவணை, சின்னமடு மாதா யாத்திரைத் தல பெருவிழாவிற்கு ஆலய வளவினுள் கடைகளைப் போட விரும்பியவர்களுக்கான இட ஒதுக்கீடு, ஏல அடிப்படையில் எதிர்வரும் 01.08.2013 அன்று மு.ப 10.00 மணியிலிருந்து -12 மணிவரை வழங்கப்படும். உணவு, இனிப்பு, ஐஸ்கிறீம் கடைகள் யாவும் சுகாதாரப் பரிசோதகரின் அனுமதிப்பத்திரம் பெற்றிருக்கவேண்டும். அத்துடன் சகல கடைகளும் பிரதேச சபையின் அனுமதி பெற வேண்டுமென்று பிரதேசசபை கேட்டுள்ளது.

பரிபாலகர், அருட்பணி ஞா.பீற்றர்,
சின்னமடு மாதா யாத்திரைத்தலம், சின்னமடு. (30044)(3.6.11)

கடை வாடகைக்கு

381,ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள நான்கு புதிய நவீன கடைகள் புத்தர் கோயிலுக்கு அருகிலும் ரெயில்வே ஸ்ரேசன் குவாட்டசுக்கு முன்பாகவும் வாடகைக்கு உண்டு.
(தரகர்களும் தொடர்பு கொள்ளலாம்)

தொடர்பு:077 678 6230 (30040)(3.5.6)

LAYLAND TIPPER விற்பனைக்கு

3 கியூப் (G45)-2012 மொடல்
(LJ -72xx)

தொடர்பு: 077 372 1517 வவுனியா (235209)(3.5.6)

காணவில்லை

இல.544, கடற்கரை வீதி,
குருநகர்,யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த
24 வயதுடைய போள் ரொபின்சன்
சிறிதரன் 27.07.2013 ஆம் திகதியிலிருந்து
காணவில்லை. கண்டவர்கள் கீழ்வரும்
தொ.பே.இலக்கத்துடன் தொடர்பு
கொள்ளவும்.



தொடர்பு:
077 021 0044, 078 719 3904 (30041)(3.5.6)

தகவல்:
மனைவி.

### தமிழகக் குழுவின் வருகையை அடுத்து

# இரு நாட்டு மீனவரின் யோசனைகள் குறித்து இலங்கை – இந்தியா பேச்சு

கொழும்பு,ஜூலை 30
இலங்கை வரும் தமிழக மீனவர்கள் குழு, வடக்கு மீனவர் சங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்திய பின்னர் இரு தரப்புகளுக்கும் இடையில் எட்டப்படும் பொது இணக்கப்பாட்டு யோசனைகளை நடைமுறைப்படுத்துவது குறித்து இலங்கையும் இந்தியாவும் பேச்சு நடத்தும் என்று அறியமுடிகின்றது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் அழைப்பின் பேரில் ஓகஸ்ட் முதல் வாரத்தில் இலங்கை வரும் தமிழக மீனவர்கள் குழு தலைமன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார் ஆகிய பகுதிகளுக்குச் சென்று மீனவர் சங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தவுள்ளது.

இருநாட்டு மீனவர்களும் கடற்றொழிலின்போது எதிர்நோக்கும் பிரச்சினைகளை எவ்வாறு சுமுகமான முறையில் தீர்த்துக்கொள்வது என்பது குறித்தும், அதற்கான வழிமுறைகள் தொடர்பிலும் இந்தச் சந்திப்புகளின்போது கலந்துரையாடப்படவுள்ளன.

இரு தரப்புகளினதும் இணக்கப்பாட்டுடன் இதன்போது பிரச்சினைகளுக்கான தீர்வாக பொதுவான சில சிபாரிசுகள் எட்டப்படும். இந்தத் தீர்வுத்திட்ட யோசனைகள் இலங்கை, இந்திய மத்திய அரசுகளிடம் கையளிக்கப்படவுள்ளன என்று தெரியவருகின்றது.

வடக்கு மீனவர் சங்கப் பிரதிநிதிகளுடனான சந்திப்பையடுத்து அவர்களுடன் இணைந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை தமிழக மீனவர்கள் குழு சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளது. இதன்போது பிரச்சினைகளுக்கான தீர்வுத்திட்ட யோசனைகள் தொடர்பில் விளக்கமளிக்கப்படவுள்ளது.

அதன் பின்னர் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, கடற்படைத்தளபதி, மீன்பிடித்துறை பிரதியமைச்சர் ஆகியோரைச் சந்தித்தும் குறித்த குழு பேச்சு நடத்தவுள்ளது.

இவ்வாறு பலதரப்புடனும் பேச்சு நடத்திய பின்னர் தமது பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பும் மீனவர்கள் குழு, மத்திய, மாநில அரசுகளிடம் இலங்கையில் எட்டப்பட்ட இணக்கப்பாட்டு யோசனைத் திட்டத்தை அறிக்கையாக கையளிக்கும். அதன் பின்னரே அவற்றை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாக இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் பேச்சு நடைபெறும் என்று அறியமுடிகின்றது. (ச–சி)

## சமையலறைக்குள் பூட்டி வைத்து 'செமஅடி' கொடுத்தார் மனைவி

### குடிகாரக் கணவன் ஆஸ்பத்திரியில்

தென்மராட்சி, ஜூலை 30
சமையலறைக்குள் அட்டகாசம் புரிந்த கணவரை சமையல் அறை பாவனைப் உபபரணங்களால் சரமாரியாகத் தாக்கினார் தாலி கட்டிய மனைவி. சமையல் பாத்திரங்களின் சரமாரியான தாக்குதலால் நிலை குலைந்து காயங் களுக்கு இலக்கானார் கணவன். அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு தென்மராட்சி பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

வடமராட்சிப் பகுதியில் பணியாற்றும் 26 வயதுடைய கணவர் தினமும் குடித்து விட்டு வந்து வீட்டில் நாளாந்தம் அட்டகாசம் புரிவது வழமை. நேற்றுமுன்தினம் விடுமுறை (ஞாயிற்றுக்கிழமை) என்பதால் நண்பர்களுடன் மூக்கு முட்ட குடித்து விட்டு வீடு வந்து சேர்ந்தார் அவர். நேராகச் சென்றார் சமையறைக்குள். கைகளாலும் காலாலும் தாக்கினார் இல்லத்தரசியை. வீராவேசத்துடன் வெகுண்டெழுந்தார் இல்லாள். சமையறைக்குள்ளிருந்த பாத்திரங்கள் மற்றும் கத்தி ஆகியவற்றைக் கொண்டு கண் மண் தெரியாமல் கொடுத்தார் பதிலடி. தாக்குதலுக்கு தாக்குப்பிடிக்காமல் நிலை குலைந்து போனார் கணவன். அவரது உடலில் பல இடங்களில் காயங்கள். சிரமத்தின் மத்தியில் அவரை மீட்டெடுத்தனர் உறவினர்கள். இரவு 8 மணியள வில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு வந்து சேர்ந்தனர் போதை குறைந்த நிலையில் (ஓ)

### கச்சான் செடிகளுக்கு வந்தது கிராக்கி

சுழிபுரம் பகுதியில் கச்சான் அறுவடை சூடுபிடித்திருப்பதால் கச்சான் இலைகளுக்கும் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. ஆடு மாடுகள் கச்சான் செடிகளை விரும்பி உண்பதாலேயே இந்தக் கிராக்கி ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ந–28)

## நிறைவேற்று அலுவலர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஜூலை 30
இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளை நிறைவேற்று அலுவலர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல், சான்றிதழ் பெற்ற பின் திட்ட முகாமைத்துவம் அல்லது நடைமுறையில் 5 வருட அனுபவத்துடன் 10 வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். அல்லது சமூகவியல் வர்த்தக முகாமைத்துவம், பொருளாதாரம், பொது நிர்வாகம், சுகாதாரமும் பராமரிப்பும், சட்டம், பொறியியல் அல்லது தொடர்புடைய பாடப்பரப்பில் பட்டம் பெற்றிருத்தல், பட்டம் பெற்ற பின் திட்ட முகாமைத்துவம் அல்லது அமுலாக்கத்தில் 3 வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். அல்லது சமூகவியல், சமூக வேலை, வர்த்தக முகாமைத்துவம், பொருளாதாரம், பொது நிர்வாகம், சுகாதாரமும் பராமரிப்பும், அல்லது தொடர்புடைய பாடப்பரப்பில் டிப்ளோமா பெற்றிருத்தல், சான்றிதழ் பெற்றபின் திட்ட முகாமைத்துவம் அல்லது அமுலாக்கத்தில் 5 வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். தகுதியுடைய விண்ணப்பதாரிகள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னதாக பணிப்பாளர் நாயகம், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், 104, தர்மபால மாவத்தை, கொழும்பு-07 என்னும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பலாம். (ந–14)

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**ஐயம்பிள்ளை மார்க்கண்டு**

மலர்வு 14.08.1926 | உதிர்வு 10.08.2012

திதி: அட்டமி



ஆண்டு ஒன்று ஆனாலும்
ஆறாவில்லை உங்கள் நினைவுகள்
என்றும் எம்மை விட்டகலாத தெய்வமே
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

கோயில் வீதி,
மல்லாகம்.

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.

### முதலாம் ஆண்டு நினைவுதினம்

அமரர்
**இளையதம்பி இராசரத்தினம்**
(முன்னாள் தபாலதிபர்–கோப்பாய்)
(திதி:30.07.2013 செவ்வாய்க்கிழமை)



தோற்றம் 26.03.1936
மறைவு 09.08.2012

எமது குடும்பத்தின்
அணையா விளக்காக ஒளிதந்து
இன்சொற்பேசி
அன்புடனும் பாசத்துடனும்
வாழ்வாங்கு வாழ்ந்து
நம்மை எல்லாம் வாழ வைத்து
இன்று வானுறையும் தெய்வமாகிய
எமது அன்புத் தந்தையின்
ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
கண்ணகை அம்...
இறைஞ்சு...

மார்க்கம்பறை,
கோப்பாய் வடக்கு.

குடும்பத்தினர்.

### இரண்டாம் ஆண்டு நினைவு தினம்



நுணாவில் மத்தி - சாவகச்சேரி
**அமரர் திருமதி. பூரணம் நாகராஜா**
(இளைப்பாறிய ஆசிரியை - நுணாவில் அமிர்தாம்பிகை வித்தியாசாலை)

தோற்றம் 03.03.1935 | மறைவு 30.07.2011

"தினம் தோறும் மனத்திரையில்
வந்து போகும் பசுமை நிறைந்த
நினைவலைகளுடன்" - குடும்பத்தினர்

இலக்கம் 1, I அரசாங்க தொடர்மாடி - பம்பலப்பிட்டி
(சி/10673)(3.5.6)

### கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் அதிபர்,
அருட்சகோதரி தயாநாயகி செபமாலை அவர்களின்
பாசமிகு தாயார் மன்னார் நானாட்டானைச் சேர்ந்த
**செபமாலை ஆனாள்பிள்ளை**
அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து ஆறாத் துயரடைந்தோம்,அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும், அவரின் குடும்பத்தினருக்கு, எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/திருக்குடும்ப கன்னியர்மடம், யாழ்ப்பாணம்.
(30045)(3.5.6)

### கண்ணீர் அஞ்சலி



நல்லூர் பிரதேச செயலகத்தில் முகாமைத்துவ
உதவியாளராகக் கடமையாற்றும்
திருமதி யோகராணி அருட்செல்வம்
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி செல்லம்மா சபாபதி**
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம்,
நல்லூர்.
(30038)(3.5.6)

நல்லூர் பிரதேச செயலக
உத்தியோகத்தர் நலன்புரி சங்கம்.

### மரண அறிவித்தல்

**திருமதி எல்லுப்போலை நாகம்மா**



பலாலி கிழக்கு, வசாவிளானைப் பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிடமாகவும் தற்பொழுது மட்டுவில் மத்தி சாவகச்சேரியை இருப்பிடமாகவும் கொண்ட திருமதி எல்லுப்போலை நாகம்மா (27.07.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற எல்லுப்போலையின் அன்பு மனைவியும், இரத்தினேஸ்வரி (மட்டுவில்), யோகராணி (உடுவில்), இராசலிங்கம் (ஜேர்மனி), புஸ்பராணி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவஞானம், ஞானகேசரம், ஜெயக்குமார், விஜிதநாயகி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மட்டுவில் மத்தி, சாவகச்சேரியில் உள்ள அன்னாரது இல்லத்தில் இன்று ( 30.07.2013) செவ்வாய்க் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக மட்டுவில் மத்தி நினியன் நேரிய தூபி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அ.மி.த.க பாடசாலை வீதி,
மட்டுவில் மத்தி, சாவகச்சேரி.
T.P- 077 236 3557
(30036)(3.6.11)

தகவல்:
குடும்பத்தினர்.

**Annai Nagaa Food City**
**பதவி வெற்றிடங்கள்**

1) விற்பனை உதவியாளர்கள்
2) கடை சுத்திகரிப்பாளர்


நேரடியாக உங்கள் சுயவிவரக் கோவையுடன் சமுகமளிக்கலாம்.
சம்பளம் ரூபா 9000 தொடக்கம் 18000 வரை
இடம்- 175, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்
காலம்- 01.08.2013 தொடக்கம் 08.08.2013 வரை
நேரம்- 9.00 am தொடக்கம் 12.30 pm வரை
**மேலதிக விவரங்களுக்கு:**
**077 477 3481, 021 739 0191** (c/11090)(3.8.11)

# கலர் பரசிடமோல் விநியோகிக்கத் தடை

## சுகாதார அமைச்சு எச்சரிக்கை

கலர் பரசிடமோல், அஸ்பி ரின் ஆகியவற்றை விநியோ கிப்போர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப் படும் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள் ளது.

மருந்துகள் சட்டத்தின் கீழ் வெள்ளை பரசிடமோல், அஸ்பிரின் ஆகியவற்றை மட்டுமே விற்பனை செய்ய லாம். கலர் பரசிடமோல், அஸ்பிரின் ஆகியவற்றை விற் பனை செய்வோர் கைது செய்யப்படுவர்



என்று பாவ னையாளர் மருந்து பொருள் கள் அதிகார சபையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இவ்வாறு விற்கப்படும் மருந்துகளைக் கைப்பற்றி சம்பந்தப்பட்டோரை நீதி மன்றில் முன்னிலைப்படுத்துமாறு சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளோம்.

இத்தகைய கலர் குளிசைகளை வாங்குவதை பொது மக்கள் தவிர்க்க வேண்டும். கலர் குளிசைகள் காலம் கடந்ததுடன் தரமும் குறைந்ததாகும்.

கலர் குளிசைகளை வாங்கும்போது காலாவதித் திகதி, முகவரி, எஸ்.எல்.எஸ். சின்னம் ஆகியவற்றையும் பொதுமக்கள் பரிசோதிக்க வேண்டும்.- என்றார். (ச)

# அறிவித்தல்!

அரச சேவையில் கடமையாற்றும்
அனைவரினதும் அபிமானத்துடனான
முன்னேற்றத்திற்காக

# "ராஜ்ய மெஹவர"

நாட்டின் முன்னேற்றத்திற்காக கஷ்டப்பட்டு, அரச சேவையில் பணியாற்றும் உங்களின் அளப்பரிய சேவையை பாராட்டுதல் எமது கடமையாகும். அந்த அபிமானத்துடன் கூடிய அரச சேவைக்காக, உங்களுக்கான விசேட வரப்பிரசாதமொன்றை அறிமுகப்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**அரச வர்த்தக (பல்துறை) கூட்டுத்தாபனத்தின்**

விசேட நிதி வசதியின் கீழ்

இலங்கையில் அதிகம் விற்பனையாகும் மற்றும் அதிக எரிபொருள் செயற்திறன் கொண்ட

**பஜாஜ்** மோட்டார் சைக்கிள்களை

பெற்றுக்கொள்வதற்கு இப்போது உங்களுக்கும் ஒரு சந்தர்ப்பம்.



tradlanka

விசேட நிதி வசதி மற்றும் கொடுப்பனவுகள் பலவற்றுடன் உங்களின் பஜாஜ் மோட்டார் சைக்கிளை இன்றே தேர்ந்தெடுங்கள்!

மோட்டார் சைக்கிள் பற்றிய விசாரணைகளுக்கு: 011 4715050


நிபந்தனைகளுக்கு உட்பட்டது

விலை ரூ.142,000/- ற்கு மேல் (VAT உள்ளடக்கப்படவில்லை) குறிப்பிடப்பட்டுள்ளதோடு, முன்னறிவித்தல்களின்றி மாறுபடலாம்.

**அரச வர்த்தக (பல்துறை) கூட்டுத்தாபனம்**

இல 116, யூனியன் பிளேஸ், கொழும்பு 2.
தொ: 011 2326582, 011 2422341-3 பெக்ஸ்: 011 2435565, 011 2447979
இணையத்தளம்: www.stc.general.com மின்னஞ்சல்: asela@stc.lk

# மரக்கறி செய்கை பெரும் பாதிப்பு



நுவரெலியா,ஜூலை 30

மலையகத்தில் தொடர்ச்சி யாக பெய்த கடும் மழை காரணமாக மரக்கறி செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

தோட்டங்களிலுள்ள பயிர்கள் அழிவடைந்துள்ளன. இதனால் தமது வாழ்வா தாரம் பெரிதும் பாதிக்கப்பட் டுள்ளது என்று மக்கள் கூறுகின்றனர்.

தற்போது வானிலை வழமைக்குத் திரும்பி வருகின்ற போதிலும், தமது செய்கை களை மீண்டும் ஆரம்பிப்பதற்கான வசதிகள் கிடைக்க வில்லை என்று அவர்கள் தெரிவித்தனர். (ச)

# உலக நட்புறவு தினம் இன்று

திருகோணமலை, ஜூலை 30

மூதூர் பிரதேச இந்து குரு மார் சங்கத்தின் அனுசர ணையுடன் பாரதிபுர வித வைகள் நலன்புரி சங்கத் தின் ஏற்பாட்டில் உலக நட்புறவு தின நிகழ்வில் இன்று செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு பாரதிபுரம் கிராம அபி விருத்திச் சங்க மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

மூதூர் பிரதேச இந்து குருமார் சங்கத்தின் தலை வர் சிவஸ்ரீ. இ.பாஸ்கரன் தலைமையில் நடைபெற உள்ளது.

இந்த நிகழ்வில் மூதூர் பிரதேச செயலர் என்.பிர தீபன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ச-40)

**வீடியோ கமரா விற்பனைக்கு**

Fx 1000E Full HD Sony Video **கமரா** Made in Japan.

**தொடர்பு: 077 714 6762** (29966)(3.8.11)

***பிறந்தநாள் வாழ்த்து***

இன்று தனது 35 ஆவது பிறந்தநாளை
கொண்டாடும் **Tharsfashion** நிர்வாக இயக்குநர்
**பரமேஸ்வரன் கவிந்தன்** அவர்களுக்கு எமது
இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்.
குடும்பத்தினர்- நண்பர்கள்-
www.tharsfashion.com ஊழியர்கள்.

## கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயம்
## கடை ஏலம் கோரல்

06.08.2013 செவ்வாய்க்கிழமை
அன்று இடம்பெறவுள்ள
**ஆடி அமாவாசை தீர்த்தத்தினை**
முன்னிட்டு வர்த்தகர்களுக்கான
கடை நிலப்பரப்பு 01.08.2013
**வியாழக்கிழமை மாலை 3.00**
மணிக்கு ஏலத்தில் விடப்படும்.
வர்த்தகர்கள் அனைவரும்
ஒன்றுகூடி அவரவர்களுக்குரிய
கடைகளைப் பதிவு செய்து
கொள்ளவும்.

(சி/11088 )(6.2.3)

- கீரிமலை நகுலேஸ்வரர் தேவஸ்தானம்.



## துயர் பகிர்கின்றோம்




**நல்லையா நிலோசனா**

காலனவன் கெடு பிடியில்
கவர்ந்து போன மகளே
கண் மூடி பார்க்கின்றோம்
கலையவில்லை உன் அழகு முகம்
விழி நீர் ததும்பும் நிதம்
உன் ஆத்ம சாந்திக்காக
இறைவனிடம் நாம்
இறைஞ்சுகின்றோம்.

யா/நவீல்ட் பாடசாலைச் சமூகம்,
கைதடி.
(சி/10676)


# கொழும்பு நகரில் பரவுகிறது டெங்கு



கொழும்பு,ஜூலை 30
கொழும்பு நகரில் தற்போது டெங்குக் காய்ச்சல் தீவிரமாகப் பரவி வருகிறது. என்று கொழும்பு மாநகர சபையின் சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு மாநகர சபையின் நிர்வாகத்துக்கு உட்பட்ட பிரதேசத்தில் நாளொன் றுக்கு டெங்குக் காய்ச்ச லுக்கு 20 நோயாளர்கள் உள்ளாகியுள்ளனர் என்று கண்டறியப்பட்டுள்ளது என்று கொழும்பு மாநகர சபையின் பிரதம சுகாதார வைத்திய அதிகாரி பிரதீப் காரியவசம் தெரிவித்தார்.

கொழும்பு பல்கலைக்கழ கத்தின் மாணவர்கள் சிலர் டெங்குக் காய்ச்சலுக்கு உள்ளாகியுள்ளனர்.

அவர்களுள் ஒரு டெங்கு நோயாளரின் நிலை கவ லைக்கிடமாக உள்ளது.

கொழும்பு தனியார் மருத் துவமனையொன்றின் அவ சரசிகிச்சைப் பிரிவில் அவர் சிகிச்சை பெற்று வருகிறார் என்று அவர் கூறினார்.

கொழும்பு பல்கலைக்க ழகச் சுற்றாடலில் மீண்டும் டெங்கு நுளம்புக் குடம்பி கள் காணப்படுகின்றமை யால், மாநகர சபையின் சுகாதாரத் திணைக்களத்தி னால் பல்கலைக்கழக நிர்வாகிகளுக்கு எதிராக வழக் குகள் தொடுக்கப்பட்டுள் ளன என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-22)


## நான்காம் ஆண்டு நினைவுநாள்



அன்னை மடியில்
18.07.1936
அரன் அடியில்
13.08.2009

**அமரர் சுப்பையா-வைத்திலிங்கம்**

ஆண்டுகள் நான்கு சென்றது அப்பா
ஆறவில்லை நம் துயரம்
சென்றதினி மீளாது அப்பா
எப்போதும் சென்றதையே சிந்தை செய்கின்றோம்
மீண்டுமொரு தெய்வத்தின் சக்தியாலே
வையகத்தில் பொருளாய் தேடுகின்றோம் அப்பாவை
நித்தமுங்களை வேண்டி அப்பா
நினைப்பதெல்லாம் நீங்களாய்காண்கின்றோம் அப்பா.


"லக்சுமிகரம்",
கோயில் வாசல், இணுவில் மேற்கு,
இணுவில்.

பாசமிகு மனைவி,
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(29995)(2..6)



## ஈரவிழிகளில் சென்றது ஓர் ஆண்டு



தோற்றம்
30.03.1937
மறைவு
09.08.2012

**செல்வநாயகம் தெய்வசிகாமணி**

பாசத்தின் இருப்பிடமே பண்பின் சிகரமே
ஆண்டு ஒன்று ஆனாலும்
ஆறவில்லை எமது துயரம்
ஆயிரம் உறவுகள் இருந்தும் அப்பா
உங்களுக்கு ஈடாகுமா
உங்கள் நினைவுகள் இன்றல்ல எப்போதும்
எம் நெஞ்சில் பசுமையாய் நிழலாடுமப்பா
ஒவ்வொரு பொழுதும் கலங்கி
வாடுகின்றோம் உங்கள் நினைவாலே

(29994)(2..6)

புது வீதி, ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை

உங்கள் அன்பின் மனைவி,
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


# போலி நோட்டுடன் ஒருவர் மாட்டினார்



கொழும்பு,ஜூலை 30
அதிவேக மார்க்கத்தின் பின்னதுவ நுழைவாயிலில் 2000 ரூபா போலி நாண யத்தாளை வழங்கிய லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹக்மன பகுதியைச் சேர்ந்த ஒருவரே ஞாயிற்றுக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரி வித்தனர்.

மேலதிக விசாரணைகளுக்காக சந்தேக நபர் அக்மீமன பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)


# INVITATION FOR BIDS
# TEACHING HOSPITAL, JAFFNA

The chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna. invite sealed bids from eligible and qualified bidders for the construction and renovation works in the schedule below.

| Work/Service Details | Non-refundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Validity Period of Bid Security (Days) | Approximate Direct cost of the work (Rs. In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|
| Functions of Elderly Friendly Ward Toilet | 500.00 | 25,000.00 | 90 | 1.24 | C 8 |
| Renovation of Medical Clinic Toilet | 500.00 | 10,000.00 | 90 | 0.53 | C 10 |
| Renovation of Eye Clinic | 500.00 | 12,000.00 | 90 | 0.63 | C 10 |
| Construction of NTS Students Toilets | 500.00 | 35,000.00 | 90 | 1.8 | C 8 |

1. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
2. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for construction, Training and Development (ICTAD).
3. Interested bidders may inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.
4. A Complete set of Bidding Documents in English Language may be purchased by Interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 2013.07.31 until 2013.08.13. The payment shall be made to the Shroff's Office, Teaching Hospital, Jaffna.
5. Sealed bids shall be delivered to the address below at before 10.00 hrs. on 2013.08.14, late bides will be rejected. Bids will be open at 10.15 hrs. at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders' representatives who choose to attend.

**Director(Chairman),**
**Regional Procurement Committee,**
**Teaching Hospital, Jaffna.**

(C/11089)


## ஜனாதிபதியின் இப்தார் இம்முறை கண்டியில்

கொழும்பு, ஜூலை 30
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வருடந்தோறும் ரமழான் மாதத்தில் நடத்தும் இப்தார் வைபவம் இம்முறை கண்டி ஜனாதிபதி மாளிகையில் எதிர்வரும் 3 ஆம், 4 ஆம் திகதிகளில் நடைபெறும். இதுவரை காலமும் ஜனா திபதி இப்தார் வைபவத்தை கொழும்பில் அலரி மாளிகையிலேயே நடத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

# 5 மாவட்டங்களில் நேற்று கூட்டமைப்பு வேட்பு மனு

நாடாளுமன்ற உறுப்பினர்கள் என நூற்றுக் கணக்கானோருடன் சென்று ஒவ்வொரு மாவட்ட செயலகத்திலும் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

**யாழ்ப்பாணம்**
யாழ்.மாவட்ட செயலகத்துக்கு நேற்று நண்பகல் 12 மணியளவில் சென்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை.சேனாதிராசா மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களும் மாகாண சபை வேட்பாளர்களுமான த.சித்தார்த்தன், எம்.கே.சிவாஜிலிங்கம் முதன்மை வேட்பாளர் சி.வி. விக்னேஸ்வரன் ஆகியோர் வேட்பு மனுவைத் தாக்கல் செய்தனர்.

**கிளிநொச்சி**
கிளிநொச்சி மாவட்டத்துக்கான வேட்பு மனுவை தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான வீ.ஆனந்தசங்கரி மற்றும் மாகாண சபை வேட்பாளர்களான ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளர்கள் தம்பிராசா குருகுலராஜா, பசுபதி அரியரத்தினம் ஆகியோர் இணைந்து நேற்று நண்பகல் தாக்கல் செய்தனர்.

**முல்லைத்தீவு**
முல்லைத்தீவு மாவட்டத்துக்கான வேட்பு மனுவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் மற்றும் வேட்பாளர்களான வைத்தியர் சிவமோகன், எம்.அன்ரனி ஜெகநாதன் ஆகியோர் தாக்கல் செய்தனர்.

**வவுனியா**
வவுனியா மாவட்டத்துக்கான வேட்பு மனுவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் மற்றும் வேட்பாளர்களான ம.தியாகராசா, எம்.எம்.ரதன் ஆகியோர் இணைந்து தாக்கல் செய்தனர்.

**மன்னார்**
மன்னார் றெலோ அலுவலகத்திலிருந்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் வேட்பாளர்கள் ஆதரவாளர்கள் சகிதம் புறப்பட்டு மன்னார் பஷாரில் அமைந்துள்ள தந்தை செல்வா நினைவுத் தூபிக்குச் சென்று மலர் மாலை அணிவித்தனர்.
பின்னர் கத்தோலிக்க, இந்து சமய பிரார்த்தனைகள் இடம் பெற்றது. அதனைத் தொடர்ந்து மன்னார் மாவட்ட செயலகத்தில் வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட்டது. வேட்பாளர்களான வைத்தியர் ஞானசீலன் குணசீலன், சு.சிவகரன், ஜ<sup></sup>ட் ஆகியோர் சென்று வேட்பு மனுவைத் தாக்கல் செய்தனர்.

(த-5-12-17-86)

# 4 கட்சிகள் மனுத் தாக்கல்

இரண்டு சுயேட்சைக் குழுக்களும் வேட்பு மனுத்தாக்கல் நேற்றுச் செய்துள்ளன.

யாழ். மாவட்டத்தில் இதுவரையில் 4 சுயேட்சைக் குழுக்கள் கட்டுப் பணம் செலுத்தியுள்ளதுடன் மூன்று கட்சிகள் வேட்பு மனுத்தாக்கல் செய்துள்ளன.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இதுவரையில் இரண்டு கட்சிகளே வேட்பு மனுத் தாக்கல்கள் செய்துள்ளன.
மன்னார் மாவட்டத்தில் இரண்டு சுயேட்சைக் குழுக்கள் கட்டுப் பணம் செலுத்தியுள்ளதுடன் மூன்று கட்சிகள் வேட்பு மனுத் தாக்கல்கள் செய்துள்ளன.
வவுனியா மாவட்டத்தில் நான்கு கட்சிகள் மற்றும் இரண்டு சுயேட்சைக் குழுக்கள் வேட்பு மனுத்தாக்கல் செய்துள்ளன.

இதேவேளை இன்றைய தினம் தேசிய இனங்களின் ஐக்கியத்திற்கான அமைப்பு என்ற கட்சி கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் வேட்பு மனுத்தாக்கல் செய்யவுள்ளது.
இதில் முல்லைத்தீவு மாவட்டத்தில் முதன்மை வேட்பாளராக காணாமல் போனோரை தேடிக் கண்டறியும் குழுவின் செயலர் சு.மகேந்திரன் களமிறங்குகின்றார்.

(த-5-400)

## கண்ணீர் அஞ்சலி



எமது நல்லூர் லயன்ஸ்
கழகத்தின்
ஆரம்பகால உறுப்பினர்
லயன் I.A மகேஸ்வரனின்
அன்பு மனைவியும், எமது கழக
உறுப்பினருமான

லேடி லயன்
**பத்மா மகேஸ்வரன்**

அவர்கள் கடந்த (28.07.2013) ஞாயிற்றுக்கிழமை இறைபதமெய்திய செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தோம்.

அவரது இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**நல்லூர் லயன்ஸ் கழக உறுப்பினர்கள்.**
**நல்லூர்.**

(30061) (10,16,14)

# நீதியான தேர்தல் தொடர்பில் அச்சம் கொள்கிறது கூட்டமைப்பு

சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசு முடிவெடுத்துள்ளது. சர்வதேச அழுத்தம் கூடத் தேர்தலை நடத்தக் கோருவதுடன் முடிந்துவிடக் கூடாது. நீதியான தேர்தல் நடைபெறுவதைச் சர்வதேச சமூகம் உறுதிப்படுத்த வேண்டும்.
வடமாகாண மக்கள் முதல்முறையாக ஜனநாயக ரீதியில் மாகாண சபைக்கு தங்கள் பிரதிநிதிகளைத் தேர்வு செய்ய இருக்கின்றனர். மக்கள் சுதந்திரமாக வாக்களிப்பதை உறுதி செய்ய வேண்டும். அரசியல் கட்சிகள் தங்கள் கருத்துக்களைச் சுதந்திரமான முறையில் மக்களிடம் சேர்க்கவும், மக்கள் அரசியல் கூட்டங்களுக்குச் சுதந்திரமாகச் செல்லவும் நிலைமை ஏற்படுத்தப்பட வேண்டும்.
சுயாதீனமான பொலிஸ், தேர்தல், பொதுச் சேவை ஆணைக்குழுக்கள் இல்லாத நிலையில் இந்தத் தேர்தல் நீதியாக நடக்குமா என்பது சந்தேகமே ? எங்கள் சந்தேகங்களை உறுதி செய்யும் வகையிலேயே கடந்த கால உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களின் போது அசம்பாவிதங்கள் நிகழ்ந்துள்ளன.
தேர்தலுக்கு முன்னதாக வாக்காளர்களின் அடையாள அட்டையைப் பறித்தல், வாக்காளர் அட்டையைப் பறித்தல் போன்ற செயற்பாடுகள் இடம்பெறாத வண்ணம் உறுதிப்படுத்த வேண்டும். வாக்களிப்பின் போதும் வாக்கு எண்ணும் பணியிலும் கடமையிலுள்ள உத்தியோகத்தர்கள் தங்கள் பணிகளை நேர்மையாக ஆற்ற வேண்டும்.
இந்த வடமாகாண சபைத் தேர்தலை தடுத்து நிறுத்துவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனால் இந்தத் தேர்தல் தொடர்பில் நாம் அச்சம் கொண்டுள்ளோம் – என்றார்.
இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை.சேனாதிராசா, க.சுரேஷ் பிரேமசந்திரன், சி.சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும் வடமாகாணசபை முதலமைச்சர் வேட்பாளர் சி.வி. விக்னேஸ்வரன் மற்றும் ஏனைய வேட்பாளர்களும் கலந்து கொண்டனர். (த-5)

# வேட்பாளர்களை மிரட்டி ராணுவத்தினர் அடாவடி

தடவைகள் சென்ற படையினர் அவர் தொடர்பான விவரங்களை கோரியுள்ளனர். தான் ஒரு சட்டத்தரணி எனவும் விவரங்களை இராணுவத்துக்கு வழங்க முடியாது எனவும் கூறி அவர் இராணுவத்தினரை திருப்பி அனுப்பி உள்ளார். அதேபோன்று கிளிநொச்சியில் உள்ள கூட்டமைப்பின் பெண் வேட்பாளரான அனந்தி எழிலின் வீட்டுக்கு சென்ற படையினர் அவரை அச்சுறுத்தும் விதத்தில் நடந்துகொண்டனர் என எமக்குத் தகவல் கிடைத்துள்ளது.
கூட்டமைப்பு வேட்புமனு தாக்கல் செய்த அன்றே இராணுவம் தனது அடாவடித்தனத்தை ஆரம்பித்துவிட்டது. இது தேர்தல் சட்டங்களை மிக மோசமாக மீறும் செயலாகும்.
கூட்டமைப்பின் தலைவர் ஜனாதிபதியைச் சந்தித்து பேசியபோது வடக்கில் நீதியான தேர்தல் நடைபெறுவதை உறுதிசெய்வதாக அவர் உறுதியளித்திருந்தார். ஆயினும் இராணுவம் இங்கு வேட்புமனுத் தாக்கல் செய்த அன்றே எமது வேட்பாளர்களை அச்சுறுத்த ஆரம்பித்து விட்டது.
இவ்வாறான அச்சுறுத்தும் செயற்பாடுகளை இராணுவம் உடனடியாக நிறுத்த வேண்டும். வேட்பாளர்களின் விவரங்களைத் திரட்டுவதற்கு அவர்களுக்கு எந்தவித அதிகாரமும் கிடையாது. இதுகுறித்து தேர்தல் ஆணையாளருக்கும் பொலிஸ்மா அதிபருக்கும் சர்வதேச சமூகத்துக்கும் கூட்டமைப்பு முறையிடும் என்றார். (த)

# இந்தியத் தூதரகம் நேற்று முற்றுகை

யாவின் மாநிலமாக்குவதற்காகவே இந்திய மத்திய அரசு இலங்கை அரசமைப்பில் 13ஆவது திருத்தத்தைத் திணித்தது. எனவே, அதை உடன் இரத்துச் செய்யவேண்டும். இல்லாவிட்டால் அதிலுள்ள காணி, பொலிஸ் அதிகாரங்களை நீக்கிவிட்டே வடக்குத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தியே மேற்படி சத்தியாகிரகப் போராட்டம் நடத்தப்பட்டது. (த)

# வன்னி வரும் நவிப்பிள்ளை இரணைமடுவில் இறங்குவார்

இலங்கை வந்திருந்தது. நவநீதம்பிள்ளை தலைமையிலான குழுவினர், தனியார் விமானம் மூலமே, நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் பயணம் செய்வதற்கே ஐ.நா. அதிகாரிகள் விருப்பம் கொண்டிருந்தனர். ஆனால், இலங்கை அரசு தனது விமானப்படை விமானங்களில் பாதுகாப்பாகப் பயணத்தை மேற்கொள்ளலாம் என்று உத்தரவாதம் அளித்துள்ளது.
இலங்கை விமானப்படையின் ஹெலி ருவர்ஸ் நிறுவனத்தின் விமானங்கள் அல்லது ஹெலிகளில் நாட்டின் எந்தப் பகுதிக்கும் பாதுகாப்பாகப் பயணம் மேற்கொள்ளலாம் என்று ஐ.நா அதிகாரிகளிடம், மூத்த பாதுகாப்பு அதிகாரிகள் உறுதியளித்துள்ளனர்.
நவநீதம்பிள்ளை தலைமையிலான குழுவினர், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை ஆகிய பகுதிகளுக்குச் சென்று பார்வையிடவுள்ளனர்.
இந்தக் குழுவினர், விடுதலைப் புலிகளால் அமைக்கப்பட்டு, இலங்கை விமானப்படையால் திருத்தியமைக்கப்பட்டு அண்மையில் திறந்து வைக்கப்பட்ட இரணைமடு ஓடுதளம் வழியாகவே பயணத்தை மேற்கொள்ளலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
நவநீதம்பிள்ளையின் பயணத்துக்கு ஐ.நா ஒற்றை இயந்திர விமானத்தையே தெரிவு செய்ததாகவும், ஆனால் இலங்கை விமானப்படை, இரட்டை இயந்திர விமானத்தை சேவையில் ஈடுபடுத்துவதாகவும் பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது.
நவநீதம்பிள்ளையின் பயணத்துக்குத் தனியார் விமானத்தைப் பயன்படுத்தினாலும், கட்டுநாயக்க மற்றும் மத்தல விமான நிலையங்கள் தவிர, நாட்டில் உள்ள ஏனைய அனைத்து விமானநிலையங்களும் இலங்கை விமானப் படையின் கட்டுப்பாட்டிலேயே உள்ளதால், தனியார் விமானங்களும் அவற்றையே பயன்படுத்தியாக வேண்டும் என்றும் ஐ.நா அதிகாரிகளிடம் இலங்கை அரசு சுட்டிக்காட்டியுள்ளது.
இலங்கை விமானப்படை விமானத்தில் நவநீதம்பிள்ளை குழுவினர் வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு அச்சமின்றிப் பயணம் செய்ய முடியும் என்று ஐ.நா. அதிகாரிகளுக்கு உறுதியளிக்கப்பட்ட போதிலும், ஹெலி ருவர்ஸ் விமானங்களில் பயணிக்கும் யோசனையை ஐ.நா குழு நிராகரித்து விட்டது. (த)

# மாலக்க சில்வா மீது தாக்குதல்

தெரியாத குழுவினர் நேற்று தாக்குதல் நடத்தியுள்ளனர். கொழும்பு - நகரமண்டபத்திலுள்ள பிரபல ஆடை விற்பனை நிலைய வாகன தரிப்பிடத்தில் இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதனால் குறித்த பகுதியில் நேற்று மாலை பெரும் பதற்றம் ஏற்பட்டதையடுத்து, அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.
தாக்குதலில் காயமடைந்த மேர்வின் சில்வாவின் மகன் மாலக்க சில்வா தனியார் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனத் தகவல்கள் வெளியான போதும் அதுகுறித்தும் உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் எதுவும் தமக்குக் கிடைக்கவில்லையென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக்க சிறிவர்தன தெரிவித்தார். (த)

## மரண அறிவித்தல்கள்

### நமசிவாயம் மணிவண்ணன்

வேலணை மேற்கு, வேலணை -8ஐ பிறப்பிடமாகவும் 83/19, தஞ்சி ஒழுங்கை, அரசடி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நமசிவாயம் மணிவண்ணன் நேற்று (29.07.2013) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஓய்வு பெற்ற ஆசிரியர் சுப்பிரமணியம் நமசிவாயம் -புனிதவதி தம்பதியரின் ஏகபுத்திரனும், உமை, கமலாதேவி (ஓய்வு பெற்ற ஆசிரியை), கலா (இரசாயனவியல் ஆசிரியை, யாழ். இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (30.07.2013) செவ்வாய்க்கிழமை பி.ப 2.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

### சுப்பிரமணியம் திரவியம்



கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், தபாற்கந்தோர் வீதியை வசிப்பிடமாகவும், கொழும்பு உருத்திரா மாவத்தையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் திரவியம் கடந்த (27.07.2013) சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.07.2013) புதன்கிழமை மு.ப 10.30 மணியளவில் கிராம்புவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## சீருடை அறிமுகமும் மைதான திறப்பு விழாவும்

பருத்தித்துறை, ஜூலை 30
சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் கிரிக்கெட் அணிக்கான சீருடை அறிமுக விழாவும், புதிதாக அமைக்கப்பட்ட கிரிக்கெட் ஆடுகள திறப்பு விழாவும் இன்று இடம்பெறவுள்ளன.

முற்பகல் 10 மணிக்கு கிரிக்கெட் அணிக்கான சீருடை அறிமுக விழாவும், பி.ப. 1 மணிக்கு கிரிக்கெட் ஆடுகள திறப்பு விழாவும் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுகளுக்கு முதன்மை விருந்தினராக கிருபா சாரதி பயிற்சிப் பாடசாலை இயக்குநர் அ.கிருபாகரன் கலந்து கொள்ளவுள்ளார்.

நிகழ்வுகளைத் தொடர்ந்து டிறிபேர்க் கல்லூரி கிரிக்கெட் அணிக்கும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி கிரிக்கெட் அணிக்கும் இடையிலான '20/20' கிரிக்கெட் ஆட்டம் இடம்பெறவுள்ளது. (ற-9)


ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி

# சாதித்தது ஊரெழு றோயல்

கொழும்புத்துறை, ஜூலை 30
யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன், சிவசுந்தரம் மகிந்தனின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட 40 வயதுக்கு மேற்பட்டோருக்கான 'ஓல்ட் ஸ்ரார்' வெற்றிக் கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவாகியது.

அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகமும், ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற ஆட்டத்தில் இரு அணிகளும் சமபலத்துடன் மோதிக் கொண்டன.

ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக வீரரான தர்ம



குலநாதன் இரு கோல்களையும், ஜெயக்குமார் ஓர் கோலையும் பெற்று தமது அணியை முன்னிலைப் படுத்தினர்.

சளைக்காது போராடிய அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணியும் தனது முழுத் திறனையும் வெளிக் காட்டியது.

அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக வீரர்களான மணி, குலம் ஆகியோர் தமது அணிக்காகத் தலா ஒரு கோலைப் பெற்றுக் கொடுத்தனர்.

அதன் பின்னர் ஊரெழு றோயலின் பின்கள வீரர்களின் தடுப்பை உடைத்து ஐக்கிய விளையாட்டுக் கழக வீரர்களால் கோல் எதனையும் பெறமுடியவில்லை.

இறுதியில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

வெற்றிக் கிண்ணத்தை யாழ். உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் எஸ்.அன்ரனிப்பிள்ளை வழங்கினார்.

சுற்றுத் தொடரின் மூன்றாம் இடத்தை பொற்பதி விளையாட்டுக் கழக அணி பெற்றுக் கொண்டது. (ற-135)


அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 30
தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று செவ்வாய்க் கிழமை கழக மைதானத்தில் இடம் பெறவுள்ள ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம்:

பி.ப 4மணி
இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம் எதிர் தாவடி காளியாம்பாள் விளையாட்டுக் கழகம்

பி.ப 5 மணி
குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம் எதிர் மானிப்பாய் ரெட் றெஞ்சஸ் விளையாட்டுக் கழகம். (ற-23)

★★★

யாழ்ப்பாணம், ஜூலை 30
மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையத்தின் 48 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று செவ்வாய்க் கிழமை கழக மைத்தானத்தில் இடம்பெறவுள்ளன.

அரையிறுதி ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம்:

பி.ப.3.45
அரியாலை ஐக்கிய வி.க. எதிர் இளவாலை யங்ஹென்றிஸ் வி.க.

பி.ப. 4.45
பாசையூர் சென்.அன்ரனிஸ் வி.க. எதிர் நாவாந்துறை சென். நீக்கிலஸ். (ற-23)

★★★

யாழ்ப்பாணம், ஜூலை 30
மற்றிக்ஸ் கோம்ஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்.இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்ட சங்கம் நடத்தும் 19 வயதுப் பிரிவு பாடசாலை அணிகளுக்கிடையிலான கூடைப்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் அரையிறுதியாட்டத்தில் இன்று யாழ். இந்துக் கல்லூரி கூடைப் பந்தாட்டத் திடலில் மோதவுள்ள அணிகளின் விவரம்:

பி.ப. 4 மணி
சென்.பற்றிக்ஸ் கல்லூரி எதிர் கொக்குவில் இந்துக் கல்லூரி. (ற-23)

★★★

பருத்தித்துறை, ஜூலை 30
வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் 7 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்ட சுற்றுத் தொடரில் கழக மைதானத்தில் இன்று மோதவுள்ள அணிகளின் விவரம்:

பி.ப. 4.30 மணி
நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகம் எதிர் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம். (ற-34)



கனிஷ்ட விளையாட்டு அணித் தெரிவு

## மூன்று யாழ். மாணவர்கள் தெரிவாகினர்

யாழ்ப்பாணம், ஜூலை 30
சார்க் நாடுகளுக்கு இடையே நடைபெறவுள்ள கனிஷ்ட விளையாட்டு விழாவில் பங்குபற்றவுள்ள இலங்கை அணியைத் தெரிவு செய்வதற்கான, முத லாவது தெரிவுப் போட்டிகளில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த மூவர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த எல்விஸ், மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த அனித்தா, அளவெட்டி அருணோதயக் கல்லூரியைச் சேர்ந்த றொசான் ஆகியோரே முதற்கட்ட தெரிவுப் போட்டிகளில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.


அடுத்து இடம்பெறவுள்ள தெரிவுப் போட்டிகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் இலங்கை அணிக்கும் இவர்கள் உள்வாங்கப்படுவார்கள். (ற-23)


வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான 6 ஆவது மெய்வன்மைப் போட்டிகளில் 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான கள நிகழ்வில் சிறந்த வீரங்கனையாக வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி மாணவி கமலினி தெரிவு செய்யப்பட்டார். (ற-23)

# மன்னார் மாவட்ட அணி சம்பியன்

மன்னார், ஜூலை 30
இலங்கை தேசிய இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் மாவட்ட ரீதியிலான இளைஞர் விளையாட்டு அணிகளுக்கிடையே நடத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் மன்னார் அணி சம்பியனாகத் தெரிவாகியுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை பொலநறுவையில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் யாழ்.மாவட்ட அணியும்



மன்னார் மாவட்ட அணியும் மோதிக் கொண்டன.

முதற்பாதியாட்டத்தில் இரு அணிகளும் கோல் எதையும் பெறவில்லை. இரண்டாவது பாதியாட்டத்தில் மன்னார் மாவட்ட அணி ஆட்டத்தினை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது.

தாக்குதல் ஆட்டங்கள் மேற்கொண்ட மன்னார் மாவட்ட அணி அடுத்தடுத்து இரண்டு கோல்களை அடித்து யாழ். மாவட்ட அணிக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தது.

போட்டி முடியும் வரையும் இந்த இரண்டு கோல்களும் நிலைக்க, மன்னார் மாவட்ட அணி 2:0 என்ற கோல்கள் கணக்கில் தேசிய சம்பியனாகியது. (ற)

# போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 23
தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடந்தும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற ஆட்டம் வெற்றி, தோல்வியின்றி சமனிலையில் முடிவடைந்தது.

அராலி பாரதி விளையாட்டுக் கழகமும், மானிப்பாய் ரெட் றெஞ்சஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன

சமபலத்துடன் காணப்பட்ட இரு அணிகளும் மாறி மாறி கோல்களைப் பெற்றவண்ணம் இருந்தன.

விறுப்பாக நடைபெற்ற ஆட்டத்தில் ஆட்டநேர முடிவில் இரு அணிகளும் தலா 3 கோல்களைப் பெற்றதை அடுத்து ஆட்டம் சமனிலையில் முடிவடைந்தது. (ற-23)

# ஆட்ட நிர்ணயம்?

## மே.தீவுகள் - பாக். தொடரில் சந்தேகம்

மேற்கிந்தியத் தீவுகளுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணிக்கும், மேற்கிந்தியத் தீவுகளுக்குமிடையிலான 5 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் சர்வதேசத் தொடரில் முறைகேடுகள் இடம்பெற்றிருக்கலாம் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

3ஆவது ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடிப் பெற்ற 229 ஓட்டங்களுக்குப் பதிலளித்த மேற்கிந்தியத் தீவுகள் அணி 50 பந்துப்பரிமாற்றங்களில் 229 ஓட்டங்களைப் பெற்றதை அடுத்து ஆட்டம் சம நிலையில் முடிவடைந்தது.

இந்த ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி துடுப்பெடுத்தாடி முடிந்த பின்னர் குறித்த ஆட்டம் சமநிலையில் முடிவடையும் என அதிகளவிலான பந்தயங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன என்று தெரிவிக்கப்படுகிறது.

இறுதி பந்துப்பரிமாற்றத்தில் 15 ஓட்டங்கள் தேவைப்பட்ட போது வகாப் றியாஸ் வீசிய பந்துப்பரிமாற்றதின் போது மேற்தொள்ளப்பட்ட களத்தடுப்பு வியூகங்கள் அதிக சந்தேகங்களை எழுப்பியதோடு, இறுதிப் பந்தில் 3 ஓட்டங்கள் தேவைப்பட்டிருக்க, மேற்கிந்தியத் தீவுகள் அணி 2 ஓட்டங்களைப் பெற்றபோது காணப்பட்ட 'ரன் அவுட்' வாய்ப்பொன்றை விக்கெட் காப்பாளரான உமர் அக்மல் தவறவிட்டிருந்தார். அதன் மூலமே ஆட்டத்தில் சம நிலை முடிவு ஏற்பட்டது.

அதேவேளை, மேற்கிந்தியத் தீவுகள் அணி தோல்வியடைந்த ஆட்டமான 5ஆவது ஆட்டம் குறித்தும் சந்தேகங்கள் எழுப்பப்பட்டுள்ளன.

அந்த ஆட்டத்தின் 30ஆவது முதல் 34ஆவது வரையிலான 5 பந்தப்பரிமாற்றங்களில் வெறுமனே 2 ஓட்டங்கள் மாத்திரமே மொத்தமாகப் பெறப்பட்டிருந்தன. அதிரடி வீரர்களான கிறிஸ் கெயில், மார்லன் சாமுவேல்ஸ் இருவரும் அந்த 5 பந்துப்பரிமாற்றங்களில் 3 பந்துப்பரிமாற்றங்களில் ஓட்டமெதனையும் பெறாததோடு, 2 பந்துப்பரிமாற்றங்களுக்கு தலா ஓர் ஓட்டத்தை மாத்திரம் பெற்றுக் கொடுத்திருந்தனர்.

தற்போது கிளம்பியுள்ள சந்தேகங்களை அடுத்து குறித்த இரு ஆட்டங்கள் உட்பட இத்தொடர் குறித்து சர்வதேசக் கிரிக்கெட் சபை கவனம் செலுத்தியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.(ற)




நேற்றுமுன்தினம் தென்னாபிரிக்காவுக்கு எதிரான நான்காவது ஒருநாள் தொடரில் அபார வெற்றி பெற்ற இலங்கை அணி தொடரையும் கைப்பற்றியது. அன்றைய ஆட்டத்தில் இரு அணி வீரர்களினதும் வெற்றிக்கான போராட்டம். - ஜே.பி.டுமினி, திலகரட்ண டில்சான்.

## ஐ.பி.எல். சூதாட்டம் குற்றப் பத்திரிகையில் ஸ்ரீசாந்த் பெயர்

ஐ.பி.எல். சூதாட்டம் தொடர்பாக புதுடில்லிப் பொலிஸார் தாக்கல் செய்ய உள்ள குற்றப் பத்திரிக்கையில் பிரபல தாதாவான தாவூத் இப்ராகீம் மற்றும் ஸ்ரீசாந்த் ஆகியோரின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன என்று த்கவல்கள் வெளியாகியுள்ளது.

நடந்து முடிந்த ஐ.பி.எல். தொடரில் சூதாட்ட விவகாரம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி இருந்தது.

சூதாட்டத்தில் ஈடுபட்டனர் என்று ராஜஸ்தான் றோயல்ஸ் அணி வீரர்கள் ஸ்ரீசாந்த், அங்கித் சவான் மற்றும் சண்டிலா உட்பட ஏராளமான சூதாட்டத் தரகர்கள் கைதாகினர்.

அதில் ஸ்ரீசாந்த், சவான் உட்பட 21 பேருக்கு பிணை வழங்கப்பட்டது.

இந்நிலையில் இந்த வழக்கு தொடர்பாக புதுடில்லிப் பொலிஸார் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய உள்ளனர்.

இதில் ஸ்ரீசாந்த், அங்கித் சவான், சாண்டிலா ஆகியோருடன் நிழல் உலக தாதாக்கள் தாவூத் இப்ராஹீம், சோட்டா ஷகீல் என மொத்தம் 30 பேரின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளது. (ற)



# சிம்பாப்வே வீரர்களிடம் கற்றுக் கொள்ள வேண்டும்

சிம்பாப்வே வீரர்களிடம் கற்றுக்கொள்ள நிறைய விடயங்கள் உண்டு என்று தெரிவித்துள்ளார் இந்திய அணித் தலைவர் விராட் கோஹ்லி

சிம்பாப்வேயில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வரும் இந்திய அணி, தொடரைக் கைப்பற்றி உள்ளது. நேற்றுமுன்தினம் நடந்த 3வது போட்டியில் 7 இலக்குகள் விக்கெட் வித்தியாசத்தில் வென்றதை அடுத்து தொடரைக் கைப்பற்றியுள்ளது.

வெற்றி குறித்து கருத்துத் தெரிவிக்கும்போதே இந்திய அணித் அணித் தலைவர் கோஹ்லி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் இதுகுறித்துக் கூறும்போது,

''சிம்பாப்வே அணியின் துடுப்பாட்டத்தை பொறுத்தவரை வீரர்களின் அனுபவமின்மை போட்டிகளில் வெளிப்பட்டது.

ஆனால் அந்த நாட்டு வேகப் பந்து வீச்சாளர்கள் சிறப்பாக பந்துவீசினர். அந்த ஆடுகளத்தில் எவ்வாறு பந்துவீச வேண்டும் என்று அவர்களுக்கு நன்கு தெரிந்திருக்கிறது.



அவர்களிடம் இருந்து இந்திய இளம் பந்துவீச்சாளர்கள் நிறையக் கற்றுக் கொள்ள வேண்டும்.

தற்போதைய இந்திய இளம் அணியில் நான் தான் அனுபவம் வாய்ந்த வீரர் என்பதால், எனது பொறுப்பை திறம்படச் செய்தேன்'' என்று தெரிவித்துள்ளார்.

தோல்வி குறித்து சிம்பாப்வே அணித்தலைவர் றெய்லர் கருத்துத் தெரிவிக்கையில்,

''நாங்கள் தீவிர பயிற்சிகள் எடுத்துக் கொண்டும், வெற்றி பெறாமல் போனது வருத்தம் அளிக்கிறது. எனினும் மனதளவில் உறுதியுடன் களமிறங்கி வரும் ஆட்டங்களில் நிச்சயம் வெற்றிபெறுவோம்'' என்று தெரிவித்துள்ளார். (ற)

# விதிகளுக்கேற்ப மாற வேண்டும்

ஒருநாள் சர்வதேச ஆட்டங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றங்களுக்கேற்ப துடுப்பாட்ட வீரர்கள் மாற்றத்தினை வெளிப்படுத்த வேண்டும் என்று இலங்கை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் திலகரட்ண டில்ஷான் தெரிவித்துள்ளார்.



ஒருநாள் சர்வதேசப் போட்டிகளின் புதிய நடைமுறைகளின் படி ஒவ்வொரு இனிங்ஸிலும் இரண்டு புதிய பந்துகள் பயன்படுத்தப்படுவதோடு, 'பவர் பிளே' அல்லாத பந்துப்பரிமாற்றங்களின்போது 4 களத்தடுப்பாளர்கள் மாத்திரம் எல்லைக்கோட்டில் களத்தடுப்பில் ஈடுபட அனுமதிக்கப்படுகின்றனர்.

இம்மாற்றங்களுக்கேற்ப துடுப்பாட்ட வீரர்கள் மாற்றத்தினை வெளிப்படுத்த வேண்டும் என்று தெரிவித்த திலகரட்ண டில்ஷான், 4 களத்தடுப்பாளர்கள் மாத்திரம் களத்தடுப்பில் ஈடுபடும் போது இறுதி பந்துப் பரிமாற்றங்களில் அதிரடியை வெளிப்படுத்த முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

முன்னைய காலங்களில் ஆரம்ப பந்துப்பரிமாற்றங்களில் துடுப்பாட்ட வீரர்கள் அதிரடியாக ஆடியிருந்தனர். தற்போது இரண்டு புதிய பந்துகள் பயன்படுத்தப்படுவதால் ஆரம்ப பந்துப்பரிமாற்றங்களில் அமைதியான ஆட்டத்தை வெளிப்படுத்தி, பின்னர் அதிரடியாக ஆட வேண்டியுள்ளது என்றும் தெரிவித்த டில்ஷான் எனினும், என்னைப் பொறுத்தவரை, ஒரு பந்து அடித்தாடக் கூடியதாகக் காணப்பட்டால், அது போட்டியின் முதலாவது பந்தாக இருந்தாலும் அதை அடித்தாடவே செய்வேன் என்றும் தெரிவித்துள்ளார்.

இலங்கை, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான 4 ஆவது ஒருநாள் சர்வதேச ஆட்டத்தில் திலகரட்ண டில்ஷான் தனது 17ஆவது சதத்தினைப் பெற்றிருந்தார்.(ற)

# சொத்து விவரங்களை உடன் வெளியிடுங்கள்

## கிரிக்கெட் வீரர்களுக்கு இந்திய கிரிக்கெட் சபை உத்தரவு

இந்திய கிரிக்கெட் வீரர்கள் தமது சொத்து விவரங்களை வெளியிட வேண்டும் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அதிரடியாக உத்தரவிட்டுள்ளது.

அணியின் முன்னணி வீரர்களான சுரேஷ் றெய்னா, ஜடேஜா, ஒஜா ஆகியோரை விளம்பரம் உள்ளிட்ட பல பிரிவுகளில் ஒப்பந்தம் செய்துள்ளநிறுவனத்தில் டோனிக்கு 15 வீதமான் பங்கு இருக்கின்றது என்று தகவல்கள் வெளியாகி சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தன.

இந்நிலையில், கொல்கத்தாவில் நடைபெற்ற இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை நிர்வாகக் குழு கூட்டத்திற்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய இடைக்கால தலைவர் டால்மியா,

''இந்திய வீரர்கள் தங்களது சொத்துக் கணக்கை வெளியிட வேண்டும். அத்துடன் நிறுவனங்களுடான ஒப்பந்தங்கள் குறித்து விரைவில் புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதுடன், ஐ.பி.எல் ஆட்டங்களில் ஆட்டநிர்ணயத்தில் ஈடுபட்ட வீரர்கள் மீது கிரிக்கெட் சபை ஊழல் தடுப்புப் பிரிவு விரைவில் விசாரணையை தொடங்கும்'' என்று தெரிவித்தார். (ற)

# மீண்டும் வருகின்றார் கெவின் பீற்றர்சன்



ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஆஷஸ் தொடரின் மூன்றாவது டெஸ்ட் அணிக்காக காயத்திலிருந்து மீண்ட இங்கிலாந்து வீரர் கெவின் பீற்றர்சன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
இங்கிலாந்து சென்றுள்ள ஆஸ்திரேலிய அணி வரலாற்று சிறப்புமிக்க ஐந்து ஆட்டங்கள் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.
முதலிரண்டு டெஸ்டில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி 2:0 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலை வகிக்கிறது.
மூன்றாவது டெஸ்ட் நாளைமறுதினம் மான்செஸ்டர் நகரில் ஆரம்பமாகவுள்ளது.
இப்போட்டிக்கான 14 பேர் கொண்ட அணியை இங்கிலாந்து கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை அறிவித்துள்ளது. அதில் கெண்டைக்கால் பகுதியில் ஏற்பட்ட காயத்தில் இருந்து மீண்ட நட்சத்திர வீரர் கெவின் பீற்றர்சன் இடம்பிடித்துள்ளார்.
பீற்றர்சன் லோர்ட்ஸ் மைதானத்தில் நடந்த இரண்டாவது டெஸ்டின் போது, கெண்டைக்கால் பகுதியில் காயமடைந்தார். அவருக்கு ஆட்டம் தொடங்குவதற்கு முன், உடற்தகுதியை நிரூபிக்க அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.
ஒருவேளை இவர் உடற்தகுதியை நிரூபிக்காத பட்சத்தில், ஜேம்ஸ் ரெய்லர் களமிறக்கப்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
அத்துடன் அணியில் சுழற்பந்துவீச்சாளர் மொன்டி பனேசர் இணைக்கப்பட்டுள்ளதுடன், மற்றொரு வேகப்பந்துவீச்சாளர் கிறிஸ் டிரம்லட்டும் இடம்பிடித்துள்ளார்.
அறிவிக்கப்பட்டுள்ள இங்கிலாந்து அணி விவரம்:
அலெஸ்டர் குக் (அணித்தலைவர்), ஜோ ரூட், ஜோனாதன் டிராட், கெவின் பீற்றர்சன், இயான் பெல், ஜொனி பேர்ஸ்டோவ், மாட் பிரையர் (விக்கெட் காப்பாளர்), டிம் பிரஸ்னன், ஸ்டுவேர்ட் புரோட், சுவான், ஜேம்ஸ் அண்டர்சன், ஜேம்ஸ் ரெய்லர், கிறிஸ் டிரம்லட், மொன்டி பனேசர். (ற)

**மாபெரும் புலமைப் பரிசில் கருத்தரங்கு**
**05-08-2013**

ஆசிரியர்:
''வித்தியா கீர்த்தி ஜனாதிபதி விருதுபெற்ற''
**என்.சந்திரகுமார்**
அவர்கள்

இடம்: வீரசிங்கம் மண்டபம்
காலம்: 05.08.2013 திங்கட்கிழமை
நேரம்: காலை 8.30 மணி முதல் 4 மணிவரை
கட்டணம்: 200/-

பதிவு செய்யும் இடங்கள்:
அன்னை புத்தகசாலை -யாழ்ப்பாணம் (222 9881)
சாரங்கா மல்ரி சென்ரர் - யாழ். இந்துக் கல்லூரி முன்பு
மொடேன் ஸ்ரோர்ஸ் - நெல்லியடி (4901519)
குறிப்பு: மாணவர்களின் வரவு அதிகமாக இருக்கும் என்பதால் எமது வாடிக்கையாளர்கள் தாமதமின்றி பதிவினை மேற்கொள்ளவும்.

அனுசரணை
**அன்னை புத்தகசாலை, யாழ்ப்பாணம்.**
(சி/11087) **222 9881**

## மரண அறிவித்தல்

### செல்வபாக்கியம் கதிரித்தம்பி



இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வபாக்கியம் கதிரித்தம்பி நேற்று (29.07.2013) திங்கட்கிழமை காலமானார்.
அன்னார் கந்தையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் கதிரித்தம்பியின் (இளைப்பாறிய அதிபர்) பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற மனோன்மணி, இராசமணி, பாலகிருஷ்ணன் (ஆஸ்திரேலியா), இராமச்சந்திரன், பரமேஸ்வரி, செல்வமணி, தங்கவேல் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் முத்துலட்சுமி (ஆசிரியை, அச்சுவேலி, புனித திரேசாள் மகளிர் கல்லூரி), சிவயோகராணி (வவுனியா, தமிழ் மகாவித்தியாலயம்), சிவமலர் (கலைமகள் தமிழ் மகா வித்தியாலயம், மாவத்துறை) ஆகியோரின் பாசமிகு தாயும் ஸ்ரீஸ்கந்தராசா (ஓய்வுபெற்ற ஆசிரியர்), இராஜசேகர் (சமூக சேவையாளர்), கனகசோன் (நில அளவையாளர்) ஆகியோரின் மாமியும் தனுஜா, கோகுல் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.07.2013) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இடைக்காடு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.ஸ்ரீஸ்கந்தராசா (மருமகன்)
குடும்பத்தினர்.

இடைக்காடு வடக்கு,
அச்சுவேலி.
(சி/11091)

## 'டெஸ்ட்' காணாது ரோகித் சாதனை

சிம்பாப்வே அணிக்கெதிராக ஹராரேயில் நடந்த 2ஆவது ஒரு நாள் கிரிக்கெட் ஆட்டம் இந்திய வீரர் ரோகித் ஷர்மாவுக்கு 100 ஆவது ஒருநாள் ஆட்டமாகும்.
ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழந்ததால் ரோகித் ஷர்மாவுக்கு இந்த போட்டி நினைவில் கொள்ளத்தக்கதாக அமையாமல்போகலாம். ஆனால் ஒரு டெஸ்ட் போட்டியில் கூட விளையாடாத ரோகித் ஷர்மா 100ஆவது ஒருநாள் போட்டியில் விளையாடி இருப்பது ஒரு வகையில் சாதனையாகும்.
அதாவது இதற்கு முன்னர் எந்தவொரு வீரரும் டெஸ்ட் ஆட்டத்தில் விளையாடாமல் 100 ஒருநாள் போட்டியை கடந்தது கிடையாது.
டெஸ்ட் ஆட்டத்தில் கால் பதிக்காமல் 100 ஒருநாள் போட்டியில் விளையாடிய முதல் வீரர் என்ற பெருமையை 30 வயதான ரோகித் ஷர்மா பெற்றுள்ளார்.
100 ஒருநாள் போட்டியில் விளையாடி இருக்கும் ரோகித் ஷர்மா 2 சதம், 17 அரை சதங்களுடன் 2ஆயிரத்து 480 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.
டெஸ்ட் ஆட்டத்தில் அறிமுகம் காணாமல் அதிக ஒருநாள் ஆட்டங்களில் விளையாடிய வீரர்கள் விவரம்:
ரோகித் ஷர்மா (இந்தியா) - 100 ஆட்டங்கள், பொலார்ட் (மே.தீவுகள்) - 85 ஆட்டங்கள், ஜேம்ஸ் ஹோப்ஸ் (அஸி)-84 ஆட்டங்கள், இயான் ஹார்வே (அஸி)-73 ஆட்டங்கள், டேவிட் ஹசி (அஸி.) - 69 ஆட்டங்கள்.

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**
The Only Official French Language Centre in Jaffna
பிரஞ்சு மொழியை பிரஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்


பிரெஞ்சு மொழியை கற்பிப்பதற்கு French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட வடமாகாணத்திலுள்ள ஒரேஒரு நிறுவனம் Alliance Française de Jaffna மட்டுமே.இச்சர்வதேச நிறுவனத்தில் France மற்றும் Canada முதலியநாடுகளுக்கு செல்வோர், மாணவர்கள் மற்றும் French கற்கவிரும்பும் யாவரும் கற்றுக்கொள்கிறார்கள்.மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள்.
உங்கள் அனுமதிகளுக்கு முந்துங்கள். அழையுங்கள் 021.222.8093
61, Kachcheri-Nallur Road, Jaffna E-mail: alliancejaffna@yahoo.com
(றக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடிக்கட்டிடம்)

**வேலையாள்கள் தேவை**
யாழ். பல்கலைக்கு அண்மையில் உணவகம் ஒன்றுக்கு சமையல், கொத்து போடுபவர், பரிமாறுபவர் போன்றோர் தேவை. (தங்குமிட வசதியுண்டு) 0776120122

**கடை வாடகைக்கு**
யாழ்ப்பாணம் மனோகரா தியேட்டருக்கு அருகில் காட்சியறை மற்றும் வியாபாரத்திற்கும் உகந்த நிலையில் உண்டு.
தொடர்பு- 0758058681, 0756429220

## மரண அறிவித்தல்

### திருமதி மீனாட்சி கதிரவேலு



காரைநகர் வாரிவளவு, தங்கோடையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மீனாட்சி கதிரவேலு நேற்று (29.07.2013) திங்கட்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து- முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கதிரவேலுவின் அன்பு மனைவியும் இலட்சுமி, காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் சுப்பிரமணியம், தெய்வானை ஆகியோரின் சகோதரியும் ஈஸ்வரி, காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளை மற்றும் தவமணி தேவிபாக்கியலட்சுமி, கோபாலபிள்ளை, இராஜேஸ்வரன், மகேஸ்வரன், கமலாதேவி ஆகியோரின் அன்புத் தாயும் தவநிதி, காலஞ்சென்ற சண்முகலிங்கம் மற்றும் பரமசாமி, ஸ்ரீஸ்கந்தராசா, வசந்தி, சத்தியராணி, சத்தியநாதன் ஆகியோரின் மாமியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01.08.2013 வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
0774504597

தங்கோடை வாரிவளவு,
காரைநகர்.
(சி/11091)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.07.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.